Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 140 சுபகிருது வருடம், மாசி மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (26.02.2023) ஹிஜ்ரி-1444, ஜமா அதுல் ஷஃபான் - 05, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130


## நக்கல் நமசிவாயம்




# புதிய தேர்தல் திகதி மார்ச் 3இல் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி இடம்பெறாதெனவும் தேர்தலுக்கான தினம் மார்ச் 3ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'வெடி'மணியம்



குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி விகாரை அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

"காணிகளை விடுவிக்கிறம்" எண்டு போன மாதம் ரணில் ஆடிய நாடகத்தில் அரச காணிகள் கொஞ்சத்தை சனத்துக்கு கொடுத்துவிட்டு;

06 ஆம் பக்கம்

# மீண்டும் கிளர்ச்சி!

## அரசுக்கு புலனாய்வுத்துறை எச்சரிக்கை; போராட்டங்களை முடக்க திட்டம் வகுப்பு

**நமது விசேட செய்தியாளர்**

அரசாங்கத்திற்கு எதிரான இளைஞர்கள், மாணவர்களின் கிளர்ச்சியொன்று மிகத் தீவிரமாக ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய புலனாய்வுத்துறை அரசின் உயர் மட்டத்தை எச்சரித்துள்ளது.

'கோட்டா கோ கம' என்ற முன்னாள் ஜனாதிபதி...

02 ஆம் பக்கம்



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நல்லூருக்குச் சென்று, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றார்.

»உள்ளே...




# எழிலன் உள்ளிட்ட மூவரை மன்றில் ஆஜராக்குங்கள்

## வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு

02 பக்கம்

## கிராமிய கடன், சமூக பாதுகாப்பு வலையமைப்பு

# தொடர்பில் தேசிய பேரவை உப குழுவில் கவனம்



கிராமிய கடன்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில்...

02 ஆம் பக்கம்



# சம்பளமில்லாது விடுமுறையில் இருக்கும் 7,100இற்கும் அதிகமான அரச ஊழியர்கள்

## பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுமா, இடம்பெறாத என்ற சர்ச்சை காணப்படும் பின்னணியில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் இருக்கும் 7 ஆயிரத்து 100 இற்கும் அதிகமான அரச ஊழியர்கள் தொடர்பில் விரைவான தீர்மானத்தை எடுக்குமாறு எதிர்க்கட்சி மற்றும் ஆளும்கட்சிகளின் உறுப்பினர்கள், பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவிடம் வலியுறுத்தினர்.

02 ஆம் பக்கம்

## மின்சார ஊழியர்கள் நாளை

# தொழிற்சங்கப் போராட்டம்

சலுகை விலையில் மின்சாரம் வழங்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து திங்கட்கிழமை (27) பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தை...

02 ஆம் பக்கம்

# நிதிக்குழுத் தலைவர் பதவியிலும் ரணில் அரசாங்கம் திருகுதாளம்!

## பாராளுமன்றத்தில் எழுந்த சர்ச்சை

பொது நிதிக்குழுவின் தலைவர் பதவி தொடர்பில் ஆளும்ளகட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை நிதிக்குழுவின் தலைவராக நியமிப்பதற்கு ஏற்கனவே இணக்கம் காணப்பட்டபோதிலும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவை நிதிக்குழுவின் தலைவராக நியமிக்க அனுமதித்தார் என எதிர்க்கட்சியின்...

02 ஆம் பக்கம்

# மருந்து தட்டுப்பாடு – விலையேற்றம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் குறித்து விசேட விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த சுகாதார அமைச்சுக்கு...

02 ஆம் பக்கம்







# வாகநேரி ஆலயத்தில் பொருட்கள் சேதமாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு

## குற்றவாளிகளை கைதுசெய்யுமாறு மக்கள் வேண்டுகோள்

*(வாழைச்சேனை செய்தியாளர்)*



மட்டக்களப்பு -கொழும்பு வீதியின் அருகே வாகநேரியில் அமைந்துள்ள செல்வ விநாயகர் ஆலயத்தில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் சில அடையாளந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் கட்டடத்தின் சில பகுதிகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச மக்கள் குறித்த செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்தும் குற்றவாளிகளை கைது செய்யுமாறு கோரியும் கவனயீர்ப்பு போராட்டத்தினை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆலயத்திற்கு சென்ற ஆலயத் தலைவர், அங்கு இடம்பெற்றிருந்த மேற்படி சம்பவம் தொடர்பாக அறிந்து ஆலய நிர்வாகத்தின் கவனத்திற்கு தெரியப்படுத்தியிருந்தார். அதன் பின்னர் ஆலய நிர்வாகம் குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மட்டக்களப்பு தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது ஆலயத்தில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள் சிலர், ''கடவுளின் சிலைகளை உடைத்தால் கடவுள் உங்களை அழித்துவிடுவார், மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழிக்காதீர்கள், மதம் என்பது எமது உரிமை, மதஸ்தலங்களை அழிக்காதீர்கள்'' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு சந்தேக நபர்களை கைது செய்யுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோபா குழுவின் புதிய தலைவராக லசந்த அலகியவண்ண தெரிவு







பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்றபோதே அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

இதன்போது, லசந்த அலகியவண்ணவின் பெயரை இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர முன்மொழிந்ததுடன், இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் வழிமொழிந்தார்.

அத்துடன், கோபா குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீமின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வழிமொழிந்தார். இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் லசந்த அழகியவண்ணவுக்கு 14 வாக்குகளும் கபீர் ஹஷீமுக்கு 07 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டார்.

2004 முதல் பல குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தி தனக்கு பரந்த அனுபவம் உள்ளதாகவும், இந்தக் குழுவில் கட்சி பேதமின்றி சுயாதீனமாக நாட்டுக்காக மேற்கொள்ளவேண்டிய கடமைகளை நிறைவேற்ற எதிர்பார்ப்பதாகவும் அதற்காக குழு உறுப்பினர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் புதிய தலைவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பாராளுமன்ற வரலாற்றில் பழைமையான குழுவாக 2023 ஒக்டோபர் அளவில் 100 வருடங்களை பூர்த்தி செய்வதாக தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் நிதிக் கட்டுப்பாடு பாராளுமன்றத்துக்கு காணப்படுவதால் வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றியதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றம் சார்பில் கண்காணிப்பை மேற்கொள்வது அரசாங்க கணக்குகள் பற்றிய குழு என்பதால் பாராளுமன்ற சபைக்கு காணப்படும் பொறுப்புகளுக்கு சமமான பொறுப்புகள் இந்தக் குழுவுக்கும் காணப்படுவதாக அலகியவண்ண மேலும் தெரிவித்தார்.

# ஏ.எச்.எம்.பௌசிக்கு பிணை

அரசாங்கத்திற்கு, சுமார் 10 இலட்ச ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசியை, கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல கொழும்பு மேல்நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சுக்கு, நெதர்லாந்தினால் வழங்கப்பட்ட கார் ஒன்றை, தமது தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தி, அரசாங்கத்துக்கு சுமார் 10 இலட்ச ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசியை, 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு இலட்ச ரூபா பெறுமதியான இரண்டு சீரப் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அவருக்கு பகிரங்க நீதிமன்றில், குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன், வழக்கு விசாரணை நிறைவடையும் வரையில், வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கொக்கட்டிச்சோலையில் மோட்டார் குண்டு மீட்பு



*(கனகராசா சரவணன்)*

கொக்கட்டிச்சோலை கண்டியனாறு குளப்பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த மோட்டார் குண்டு ஒன்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டு செயலிழக்க வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, மோட்டார் குண்டை விசேட அதிரடிப்படை குண்டு செயலிழக்கும் பிரிவினர் மீட்டு நீதிமன்ற அனுமதியைப்பெற்று அதனை அந்த இடத்தில் வெடிக்கவைத்து செயலிழக்கச் செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 80 வீத தென்னை மரங்களில் வெள்ளை ஈக்கள் தாக்கம்

## தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படுமென எச்சரிக்கை

*(கலஹா செய்தியாளர்)*

நாட்டில் தென்னை மரங்களில் 80 சதவீதமானவற்றை வெள்ளை ஈக்கள் தாக்கியுள்ளமையால் இன்னும் சில காலங்களில் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் சூழல் தோன்றியுள்ளதாக தென்னை அபிவிருத்தி சபையின் மத்திய மாகாண பிரிவு முகாமையாளர் வசந்த குமாரசிறி பமுனு கொங்கே தெரிவித்தார்.

மத்திய மாகாணத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள தென்னைமரங்களை வெள்ளை ஈ தொற்றுதலில் இருந்து பாதுகாப்பது தொடர்பாக விசேட வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 23ஆம் திகதி கம்பளை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் தென்னை உற்பத்தி அதிகமாக காணப்படும் வடமேல், தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கமானது அசுர வேகத்தில் பரவி உச்சத்தை தொட்டுவிட்டது.

இரண்டு சென்ரிமீற்றர் அளவைக்கொண்ட இந்த சின்னஞ்சிறிய வெள்ளை ஈயானது தென்னை ஓலைகளின் கீழ் தங்கி தென்னை மரத்தினை தாக்க ஆரம்பிக்கின்றது. மிக விரைவில் அது மரத்தினை ஆக்கிரமித்து வலுவிழக்கச் செய்து விடுகிறது. இதனால் தற்பொழுது தேங்காய் உற்பத்தி குறைவடைந்துள்ளமையால் அதன் விலை 120 முதல் 130 வரை உயர்ந்துள்ளது. எதிர்வரும் நாட்களில் அது மேலும் பன்மடங்காக அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

அதனை தடுக்கும் விதமாகத்தான் தென்னை அபிவிருத்தி சபையினூடாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதன் ஒரு கட்டமாகத்தான் தென்னை உற்பத்தியாளர்களுக்கு மிகக் குறைந்த செலவில் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த வேப்பெண்ணெய் மற்றும் சவக்கார பவுடரினையும் கலந்து தெளிக்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்துகின்றோம். அதற்காக இப்பிரதேச தெங்கு உற்பத்தியாளர்களுக்கு 45 தெளிக்கருவிகள் வழங்குகின்றோம்.

மேலும், உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் தென்பட்டால் அருகில் உள்ள தென்னை அபிவிருத்தி சபை அதிகாரிகளை உடனடியாக நாடுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# ,400 மில்லியன் ரூபா நீர்க்கட்டணம் நிலுவை

நீர்க் கட்டணம் செலுத்துவது 40வீதம் குறைவடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

8ஆயிரத்து 400 மில்லியன் ரூபா நிலுவை கட்டணத்தை நுகர்வோரிடமிருந்து அறவிட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அதில் 6ஆயிரத்து 200 மில்லியன் ரூபா கட்டணத்தை வீட்டு நீர் பாவனையாளர்களே செலுத்த வேண்டியுள்ளதாகவும் சபை கூறியுள்ளது.

கட்டணம் செலுத்தப்படாமையால் சபையின் நடவடிக்கைகளை உரியவாறு முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, மின் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், நீர் கட்டணத்தையும் அதிகரிப்பதற்கான பிரேரணை தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொறியியலாளர்கள் பற்றாக்குறையால் மின் விநியோகம் தடைப்படும் அபாயம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

இலங்கைமின்சார சபையில் பொறியியலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

மேலும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன குறிப்பிட்டார்.

மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் கடந்த ஒரு வருடத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும் எனவும், ஆனால் இன்று 100 பேரே பணிபுரிவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை நிறுத்த வேண்டிய நிலை கூட ஏற்படலாம் என்றும், அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் கூறினார்

### மின்சார ஊழியர்கள்...

முன்னெடுக்க கூட்டுத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியத் தலைவர் மாலக விக்ரமசிங்க ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் சிறந்த முறையின்படி கட்டணத்தை கணக்கிடும் முறையை மின்சாரசபை மேற்கொள்ள வேண்டும். 2022 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் வழங்கப்படாத வருடாந்திர போனஸ் மற்றும் மருத்துவ கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டுமென கூறினார்.

“எனவே, மொத்தம் 12 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சுகயீன விடுப்புக்கு விண்ணப்பித்து, திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்,” என்று அவர் கூறினார்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும், 6 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கையொப்பமிட்ட மனுவொன்று கடந்த வியாழன் இலங்கை மின்சார சபையின் தலைவரிடம் கையளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

### மருந்து தட்டுப்பாடு...

அறிவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடு மனித உரிமைகளை மீறுவதாகக் கூறி, மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது. இந்த முறைப்பாட்டில் பொறுப்புக்கூறவேண்டியவர்களாக சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### எழிலன் உள்ளிட்ட...

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் எழிலன் உள்ளிட்ட 03 பேரை மன்றில் ஆஜராக்குமாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு மன்றில் ஆஜர்படுத்த முடியாமல் போனால், அதற்கான காரணத்தை இலங்கை இராணுவம் மன்றுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் நீதிபதி (23) உத்தரவிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த எழிலன் என்றழைக்கப்படும் சசிதரன், கந்தம்மான் என்றழைக்கப்படும் பொன்னம்பலம் கந்தசாமி, கொலம்பஸ் என்றழைக்கப்படும் சின்னத்துரை, உருத்திரமூர்த்தி, கிருஸ்ணகுமார் ஆகியோர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டபோதே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

### சம்பளமில்லாது...

சபாநாயகர் தலைமையில் வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து ஆளும் மற்றும் எதிர்த்தரப்பின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர் .

பாராளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 3ஆயிரத்து 100 அரச ஊழியர்கள் சம்பளம் இல்லாத விடுமுறையில் உள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டை தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுமா, இடம்பெறாதா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே, இந்த 3ஆயிரத்து 100 அரச சேவையாளர்களை மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டும்.தேர்தல் இடம்பெறும் வரை இவர்களால் சம்பளமில்லாத விடுமுறையில் இருக்க முடியாது என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன,

3ஆயிரத்து 100 அரச சேவையாளர்களுடன், திணைக்கள அதிகாரிகள், ஒப்பந்த அடிப்படையில் அரச சேவையில் ஈடுபட்டவர்கள் உள்ளடங்களாக 7ஆயிரத்து 100இற்கும் அதிகமானோர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சம்பளமில்லாத விடுமுறையில் உள்ளார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்றத்தன்மை காணப்படுகிறது. தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட வேண்டும், அல்லது தேர்தல் இடம்பெறும் வரை சம்பளமில்லாத வகையில் விடுமுறையில் உள்ள அரச ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை எடுக்காவிட்டால் நாட்டில் பிறிதொரு பிரச்சினை தோற்றம் பெறும் என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய ஆளும்தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க சம்பளமில்லாமல் விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட விடயத்திற்கு நான் உடன்படுகிறேன். தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படும்போது இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறான பிரச்சினை இதற்கு முன்னரும் தோற்றம் பெற்றுள்ளது. அமைச்சரவையூடாக ஒரு தீர்வு எடுக்கப்பட்டது. ஆகவே தற்போது இந்தப் பிரச்சினைக்கு அமைச்சரவை மட்டத்தில் ஒரு தீர்வை விரைவாக எடுக்க வேண்டும் என பிரதமரிடம் வலியுறுத்துகிறேன் என்றார்.

### கிராமிய கடன்,...

(23) கூடியபோதே இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டம் உள்ளிட்ட ஏனைய வேலைத்திட்டங்கள் ஊடாக நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அதற்கமைய, இந்த நிவாரணங்களை குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு முறையாக வழங்குவது தொடர்பில் முறைமையொன்றை தயாரிப்பது பற்றி வருகைதந்தவர்கள் கருத்துத் தெரிவித்தனர். அதேபோன்று, சமுர்த்தி வங்கி உள்ளிட்ட கிராமிய வங்கிகள் ஊடாக கடன்களை வழங்குவது தொடர்பிலும் இந்தபோது கவனம் செலுத்தப்பட்டது.

### நிதிக்குழுத் தலைவர்...

பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வெள்ளிக்கிழமை கேள்வி எழுப்பியதையடுத்து இந்த சொற்போர் வெடித்தது.

சபைக்குஅவப்பெயரை ஏற்படுத்தி விட்டீர்கள் என கிரியெல்ல சபாநாயகரிடம் கூறினார். இதேபோன்ற குற்றச்சாட்டை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் ரஊப் ஹக்கீம், சபாநாயகர் மயந்த திசாநாயக்கவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பதவியை பொறுப்பேற்குமாறு கோரியிருந்தார் என்றார். “எம்.பி. மயந்த திசாநாயக்கவே தன்னை தொலைபேசியில் அழைத்தார்” என்று சபாநாயகர் அதற்கு உடனடியாக பதிலளித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க, பேசும்போது தலைவரை தீர்மானிப்பதற்கு எதிர்க்கட்சிக்கு இடமளிப்பதே பொருத்தமானது என தெரிவித்தார். “நிலையியற் ஆணைகளின்படி நிதிக்குழுவின் தலைவரை எதிர்க்கட்சிக்கு வழங்குவது பொருத்தமானது” என்றும் அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த சபைத் தலைவர் சுசில் பிரேமச்சந்திர, நிதிக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றுதான் நிலையியற் கட்டளையில் கூறப்பட்டுள்ளது என்றார்.

சபாநாயகர் அபேவர்தன, இந்த விவகாரம் தற்போது முடிந்துவிட்டதால், இந்த விவகாரம் குறித்து கூச்சலிடுவதில் அர்த்தமில்லை என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் திசாநாயக்க இன்னும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறாரா என்பதை ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த ஒருவர் தெரிவிக்க வேண்டும். இது ஐக்கிய மக்கள் சக்தியின் உள் விவகாரம் என பெரமுன எம்.பி. நிமல் லான்சா கூறினார்.

திசாநாயக்கவை அந்த பதவிக்கு நியமித்தமைக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, நிதிக்குழுவின் தலைவர் பதவி தொடர்பில் முதலில் வியாழனன்று சபையில் மோதல் வெடித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியில் அதிருப்தியடைந்து ஒதுங்கியுள்ள மயந்த திசாநாயக்கவிற்கு நிதிக்குழு தலைமையை ரணில் அரசு வழங்கியமை, நிதி விவகாரங்களில் வெளிப்படைத்தன்மையை இல்லாமல் ஆக்கும் முயற்சியா என்றும் கேள்வியெழுப்பப்பட்டு வருகிறது.

### மீண்டும்...

கோட்டபாயவுக்கெதிரான போராட்டத்தினை விட மிகத் தீவிரமான வகையில் உருவாகும் இந்தப் புரட்சி, இவ்வருட நடுப்பகுதியில் ஏற்படலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிதி நிலைமையால் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதி வீதம் வெகுவாக குறைந்துள்ளதால் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு எதிர்வரும் சித்திரை புதுவருடத்தின்பின்னர் தீவிரமடையலாமெனவும், அதன்பின்னர் மக்கள் எதிர்ப்பு ஆரம்பிக்கக் கூடுமெனவும் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த எச்சரிக்கையினையடுத்து அரசுக்கு எதிரான போராட்டங்களை முடக்கும் செயற்பாட்டை தீவிரப்படுத்த அரச உயர்மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேசமயம் கொழும்பின் கேந்திர நிலையங்கள் உள்ள பகுதிகளை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வியாழக்கிழமை 2023.02.23 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5040 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,281,620.00 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 6 3 5 1 7 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3282 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,093,954.40 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 05 26 28 44

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1495 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,169,685.60 — வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 6 1 7 5 4 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1070 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,977,091.60 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 04 33 38 71

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 349 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,521,878.80 — வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 14 16 29 40 — விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1388 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 302,862,362.00 — ஆங்கில எழுத்து P — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 02 28 33 63 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# குத்தூசி



– நிர்ஷன் இராமானுஜம்

# வரும் முன் காப்போமா?

மொனராகலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறு சிறு நில அதிர்வுகள் ஏற்பட்டவண்ணமுள்ளன. அடிக்கடி ஏற்படும் நில அதிர்வுகள் ஆபத்தானவை என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புத்தல மற்றும் வெல்லவாய ஆகிய பகுதிகளிலுள்ள பல கிராமங்களில் கடந்த புதன்கிழமை முற்பகல் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அந்த மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எச்.ரவீந்திர குமார தெரிவித்தார். இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 3.3 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய புவியியல் ஆய்வுமையம் தெரிவித்தது.

அன்றைய தினம் முற்பகல் 11.44 மணியளவிலேயே இவ்வாறு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. திடீர் சத்தத்துடன் கட்டடங்கள், வீடுகள் குலுங்கியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். வீடுகள் சிலவற்றின் சுவர்களில் இலேசான விரிசல் ஏற்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வெல்லவாய அஞ்சலிகம, புத்தல, ஊவா, பெல்வத்த மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலை கட்டடப் பகுதியிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள அலுவலகங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதால் ஊழியர்கள் பதற்றத்துடன் வெளியேறியுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் பெப்ரவரி 10ஆம் திகதி ஆங்காங்கே நிலநடுக்கம் உணரப்பட்டது. மேலும் பெப்ரவரி 11ஆம் திகதியும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது தொடர்பில் புவியியல் ஆய்வு மையமும் பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல்துறையும் ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டியில் கடந்த 11ஆம் திகதி 14 பைலட் திமிங்கிலங்கள் கரையொதுங்கின. இந்து சமுத்திரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட சிறு நில அதிர்வு இதற்குக் காரணமாக இருக்கலாம் என கடல்சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

“திமிங்கிலங்கள் கரையொதுங்குவதாக அன்றைய தினம் அதிகாலை நான்கு மணியளவில் மீனவர்கள் எமக்குத் தகவல் தந்தார்கள். நாம் அங்கு சென்று திமிங்கிலங்களை மீண்டும் கடலுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அது எமக்கு சவாலான பணியாக இருந்தது. ஏனென்றால், திமிங்கிலங்கள் கரைக்கு வந்துகொண்டே இருந்தன” - இவ்வாறு வனவிலங்கு பாதுகாப்பு ஆர்வலர் உபாலி குமாரதுங்க தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர், கடற்படையினர், கடலோர பாதுகாப்புப் படையினர், தன்னார்வத் தொண்டர்கள் என பலர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அந்தத் திமிங்கிலங்களில் 11ஐ மீண்டும் கடலுக்கு அனுப்ப முடிந்த போதிலும் மூன்றின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. உயிரிழந்த திமிங்கிலங்களின் சடலங்கள் மீது பரிசோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

ஐ.யூ.சீ.என். என்ற சர்வதேச சூழலியல் அமைப்பின் உறுப்பினரும் சூழலியலாளரும் சூழல் தொடர்பில் உள்நாட்டில் ஆய்வுகளை நடத்தும் நிபுணர் குழுவின் தலைவருமான ரணில் நாணயக்கார இரு விடயங்களை இது தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

“பைலட் திமிங்கிலங்கள் மூத்த திமிங்கிலங்களை தொடரும் குணமுடையன. மூத்த திமிங்கிலங்கள் நோய்வாய்ப்படும் பட்சத்தில் அவை கரையை நோக்கி பெரும்பாலும் நீந்துகின்றன. ஏனைய திமிங்கிலங்களும் அவ்வாறே பின்தொடர்கின்றன.

மேலும், கடலில் திமிங்கிலங்கள் வாழும் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படும் பட்சத்தில் அவை அங்கிருந்து நகர்ந்து கரையைச் சேர்கின்றன” எனத் தெரிவித்தார்.

இந்த விடயத்தையும் உள்நாட்டில் அவ்வப்போது ஏற்படும் சிறு நில அதிர்வுகளையும் நோக்கும்போது ஒருவித அச்சம் தொற்றிக்கொள்கிறது.

இயற்கையின் இருப்புக்கு மனிதனால் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் காரணமாகவே நில அதிர்வுகள் அதிகரித்து வருவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து அவர் விளக்கமளித்தபோது, “செயற்கையாக கட்டப்படும் பாரிய கட்டடங்களின் எடை பூமியின் உட்பகுதியை பாதிக்கிறது. மேலும், இது தவிர சுற்றுச்சூழலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களும் புவியின் அடிப்பகுதியை பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், நில அதிர்வுகள் ஏற்படும் என சந்தேகிக்கப்படும் பல பகுதிகளில் அளவீட்டுக் கருவிகளைப் பொருத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆதலால் எதிர்காலத்தில் நிலநடுக்கம் ஏற்படுவது குறித்த கணிப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்” எனத் தெரிவித்தார்.

துருக்கி எல்லையில் கடந்த ஆறாம் திகதி இடம்பெற்ற பாரிய நிலநடுக்கத்தில் சிக்கி அந்நாட்டிலும் சிரியாவிலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

அதனைப் பாடமாகக்கொண்டு இலங்கையில் ஏற்படும் சிறு நில அதிர்வுகள் தொடர்பில் தீர்க்கமாக ஆராயப்பட வேண்டியது அவசர தேவையாகும். உள்நாட்டில் அதற்குரிய தொழில்நுட்பங்கள் கிடைக்காதபட்சத்தில் வெளிநாடுகளின் உதவிகளையும் நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

## வருடம் முழுவதுமான சுற்றுலாத்தலமாக இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் ஹிக்கடுவவில் தெரிவிப்பு

வருடம் முழுவதுமான சுற்றுலாத் தலமாக இலங்கையை மாற்றியமைத்து, சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி மாவட்ட சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடன் ஹிக்கடுவவில் கடந்த வியாழன்று இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.



அண்மைய பொருளாதார வீழ்ச்சியினால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவற்றை வெற்றிகொண்டு, சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறுவதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் சுற்றுலாத்துறையின் மையமாக விளங்கும் இப்பிரதேசத்தின் சுற்றுலாப் பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்த்துவைப்பதற்காக இன்று நாம் ஹிக்கடுவைக்கு வருகை தந்தோம். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

2026ஆம் ஆண்டுக்குள், அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15 சதவீதமாக உயர்த்துவதே எங்களின் நோக்கம். பின்னர் நீங்கள் அந்நியச் செலாவணியை முகாமை செய்ய வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த நீண்ட கால, நடுத்தர மற்றும் குறுகிய கால திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். நமது ஏற்றுமதி வருமானம் நமது இறக்குமதிச் செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தேவை. இறக்குமதிச் செலவை ஈடுசெய்வதற்கு மட்டுமல்லாமல் ஏற்றுமதி வருமானத்தை மிகையாக மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்த எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஹிக்கடுவ நகருக்கு நடந்து சென்ற ஜனாதிபதி, அங்குள்ள வர்த்தகர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

## மயிலாடுதுறை - தரங்கம்பாடி மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை கடற்படை தாக்குதல்

### ஐவர் படுகாயம்

(மன்னார் நகர் நிருபர்)



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை கடற்படை தாக்குதலில் ஈடுபட்டது. படுகாயமடைந்த ஐந்து மீனவர்கள் பொறையார் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம் பாடியைச் சேர்ந்த வேல்முருகன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 21ஆம் திகதி இரவு அதே பகுதியைச் சேர்ந்த பாலமுருகன், அருண்குமார், மாதவன், கார்த்தி, முருகன் மற்றும் படகின் உரிமையாளர் உள்ளிட்டோர் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

காரைக்கால் தென்கிழக்கு 44 நாட்டிகல் மைல் தொலைவில் கோடியக்கரைக்கு தென்கிழக்குக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் வலையை பறித்துக்கொண்டதுடன், இரும்பு பைப்பால் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இதில் ஐந்து மீனவர்கள் பலத்த காயமடைந்தனர். தொடர்ந்து உடலில் இரத்த கட்டுக்கள் ஏற்பட்டதுடன், ஒரு மீனவருக்கு இலேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

கரை திரும்பிய மீனவர்கள் தரங்கம்பாடி அரச ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை மேற்கொண்ட பின் மேல் சிகிச்சைக்காக பொறையாறு அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இலங்கை கடற்படையினர் படகில் இருந்த எஞ்ஜினை பறித்துக்கொண்டு தங்களை கொடூரமாக தாக்கியதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

படுகாயமடைந்த ஐந்து மீனவர்களுக்கு பொறையார் அரச மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக மீன்வளத் துறையினர் மற்றும் கடலோர காவல் குழும பொலிஸாரிடம் மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். நடுக்கடலில் மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட சம்பவம் மயிலாடுதுறை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## யானை தாக்கி விவசாயி பலி

### சம்மாந்துறையில் மேலும் இருவருக்கு காயம்

(சம்மாந்துறை செய்தியாளர்)

சம்மாந்துறை பெரிய கொக்கனாரைவட்டை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்தவர் மட்டக்களப்பு தரவை-01 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 55 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், 52 வயதையுடைய மலையடி கிராமம்-2 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவ ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உடங்கா-2 ஐச் சேர்ந்த 29 வயதையுடைய மற்றுமொருவரும் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## இலங்கை – அமெரிக்க பாராளுமன்ற நட்புச் சங்கத்தின் தலைவராக சந்திம



இலங்கை - ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சந்திம வீரக்கொடி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை - ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான நிர்வாக அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இக்கூட்டத்தில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதன்போது இலங்கை - ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனிபிட்டியவும் உப தலைவர்களாக இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரல மற்றும் வேலுகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும், நட்புறவுச் சங்கத்தின் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா மற்றும் உதவிச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நட்புறவு சங்கத்தின் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வாழ்த்தைத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இந்த நட்புறவு சங்கத்தின் ஊடாக இரு நாட்டுப் பாராளுமன்றங்களுக்கிடையிலான உறவுகளையும் பலப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

## ஆட்பதிவு அலுவலக வளாகத்தில் இருக்கைகள் பொருத்த ஏற்பாடு

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு பெற வரும் பொதுமக்களின் வசதிக்காக அந்த இடத்தில் இருக்கைகளை பொருத்த நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மேற்கொண்ட கள ஆய்வுப் பயணத்தின்போது இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக தினமும் பெருந்திரளானோர் வருகை தருகின்றனர். அங்கு அமர்வதற்கு போதிய இருக்கைகள் இல்லாததால் மரங்களின் கீழ், சுவர்களுக்கு மேல், வீதிகளில் அமர்ந்து விடுகின்றனர். இதற்குத் தீர்வாக அந்த இடத்தில் பொதுமக்கள் அமர்வதற்கு இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## கொழும்பில் திறந்தவெளி சிலுவைபாதை

கொழும்பு ஜோசப் வாஸ் மன்றத்தால் 27ஆவது வருடமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள திறந்தவெளி பெரிய சிலுவை பாதை இன்று ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கொழும்பு புதிய செட்டி வீதியில் அமைந்துள்ள புனித வியாகுல அன்னை ஆலயத்தில் ஆரம்பமாகி புனித வேளாங்கண்ணி ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் பேராலயத்தை வந்தடையவுள்ளது.

புனித லூசியஸ் பேராலயத்தின் வளாகத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது.



வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, பெப்ரவரி 26, 2023

# மக்கள் மீது மின் பாய்ச்சலாமா?

நாட்டில் மின் கட்டணம் மிக அதிகமாக உயர்த்தப்பட்டதன் காரணமாக பொதுமக்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன், பல்வேறு துறைகள் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் செய்வதறியாதுள்ளனர். கட்டண அதிகரிப்பை கட்டாயம் மேற்கொள்வதாகவும், அது உடனடியாக அமுலாகுமென்றும் அரசாங்கம் அறிவித்ததால் அந்தச் சுமையை வாடிக்கையாளர்கள் மீது எவ்வாறு சுமத்த முடியும் என்று வர்த்தக சமூகம் அங்கலாய்க்கிறது.

மின்சாரக் கட்டணத்தை பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் அதிகரிப்பதாகத் தெரிவித்த மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்க முடியாதென அறிவித்திருந்தார். இவ்வாறு கட்டண அதிகரிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அனுமதியளித்ததாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தினால் ஏற்கனவே முன்மொழியப்பட்டிருந்த 66 வீத அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க ஏற்கனவே அறிவிப்பொன்றை விடுத்திருந்தார். அவர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தவேளை, ஏனைய உறுப்பினர்களைக் கொண்டு மின் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி பெறப்பட்டது.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் 66 வீதத்தால் உயர்த்தப் பட்டுள்ளமை காரணமாக பல துறைகள் ஆபத்தை எதிர்நோக்கியுள் ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இரசாயன, இரும்பு, சீமெந்து, தரையோடு ஆகிய உற்பத்திகள், தேயிலை, ஆடைத் தொழிற்சாலைகள், பாரிய மூலதனத்துடன் இயங்கும் கட்டுமானத்துறை ஆகியன பெரும் பாதிப்பை எதிர்நோக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த உற்பத்திகளின் விலைகளை பாரிய அளவில் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், போட்டித் தன்மையை இழந்து வர்த்தக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வானது மேற்படி துறைகளில் நேரடி பாதிப்பை ஏற்படுத்துவதால் அவற்றுக்கு மாற்றுத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமெனவும் நிபுணர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

சமீபத்தைய மின் கட்டண உயர்வால் சிறு வர்த்தகங்களை மேற்கொள்வோர், தையல் போன்ற தொழிலில் ஈடுபடும் பெண்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், சலூன்களை வைத்திருப்போர் ஆகியோர் சவால்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர். மின் கட்டண அதிகரிப்பானது தங்களை மேலும் கடன் சுமைக்குள் தள்ளிவிடும் எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பணவீக்கத்தின் அதிகரிப்பு காரணமாக ஏற்கனவே தமது வருமானம் வீழ்ச்சியடைந்தள்ளதாகவும், தற்போது செலவினத் துடன் ஒப்பிடுகையில் மூன்றில் ஒரு பகுதியாக வரவு குறைவ டைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடு முழுவதும் 5 ஆயிரம் பேக்கரிகள் இயங்குவதாகவும், அவற்றில் 200 மூடப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது. உணவுப் பொருட்களின் விலையை அதிகரித்தால், வாடிக்கையாளர்கள் அவற்றை வாங்குவதற்கு மறுப்பதால் தாம் நெருக்கடி நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டது.

அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன இது தொடர்பில் கருத்து வெளியிடும்போது, ''கொரோனா தொற்றின்போதும் நாம் பாதிப்பை எதிர்கொண்டோம். அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகளும் சடுதியாக உயர்த்தப்பட்டன. தற்போது மின் கட்டணம் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாம் எமது குடும்பத்தைக் கொண்டு நடத்த வேண்டும். இந்தத் தொழிலை நம்பித்தான் நாம் வாழ்கிறோம். ஆனால், இப்போது என்றுமில்லாதளவுக்கு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பேக்கரிகள் பல மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் உரிமையாளர்களும் அதில் தொழில் புரிந்தோரும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்'' என்றார்.

மின் கட்டணத்தை அதிகரித்து வருமானத்தை உயர்த்திக்கொள் வதற்காக தடையின்றிய மின்சார விநியோகத்தை அரசாங்கம் உறுதிப்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இதுவரை காலமும் மின்சார சபை எதிர்கொண்ட நட்டத்தை ஈடுசெய்யவே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசியல் கட்சிகள் பல தெரிவித்துள்ளன.

எனினும், கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இந்த இரு விடயங்களையும் மறுத்துப் பேசியதுடன், செலவு முகாமைத்துவத் துக்காகவே கட்டணம் அதிகரிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, "மக்களுக்கு மின் கட்டணத்தை செலுத்த முடியாமற்போகும். அப்போது மின் துண்டிப்புக்காக ஊழியர்கள் செல்லும் பட்சத்தில் அவர்கள் தாக்கப்படலாம். ஏனென்றால், மக்கள் விரக்தியில் காணப்படுகிறார்கள்" என்று மின்சார சபை ஊழியர் தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

உண்மையில் மின் கட்டண அதிகரிப்பு நாட்டு மக்களை பாரிய பிரச்சினைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. சாதாரண பொதுமக்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. மின் கட்டண உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் உட்பட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருந்தாலும், அந்த நடைமுறை விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடின் மின் கட்டண உயர்வால் ஏற்படப்போகும் பாதிப்பை ஈடுசெய்வது மீண்டும் சவால்மிக்க பணியாக மாறும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# தலைமைப் போட்டியில் முந்திய எடப்பாடி சறுக்கிய பன்னீர்

**ரமணி**



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுள் நடந்த தலைமைப் பதவிக்கான போட்டியில் எடப்பாடி வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றி நிரந்தரமானதில்லை என பன்னீரின் பின்னால் நிற்பவர்கள் கூறுகின்றனர்.

அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கில் புதுடில்லி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ''ஜூலை 11ஆம் திகதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு செல்லும். அ.தி.மு.க. பொதுக்குழுவை எதிர்த்து ஓ.பி.எஸ். தாக்கல் செய்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம். அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கில் உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை ஏற்கிறோம்'' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்தத் தீர்ப்பு எடப்பாடி தரப்புக்கு சாதகமாக உள்ளது. பொதுக்குழு செல்லும். பொதுக்குழுவின் தீர்மானங்கள் பற்றி நீதிமன்றம் முடிவெதையும் சொல்லவில்லை. சிவில் நீதிமன்றத்தில் அல்லது தேர்தல் ஆணையத்தில் முடிவைக் காணும்படி நீதிமன்றம் சொல்லியுள்ளது. நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்யப்போவதாக பன்னீர் தரப்பு தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுக்குழு கடந்த வருடம் ஜூலை 11ஆம் திகதி கூடியது. அன்று நடந்த பொதுக்குழுவில் அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிச்சாமி நியமிக்கப்பட்டார். இந்தப் பொதுக்குழுவில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் நீக்கப்பட்டன. அத்துடன், இந்த பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க.வில் இருந்தே நீக்கப்பட்டார். இந்த பொதுக்குழு செல்லாது என்று ஓ.பன்னீர்செல்வம், வைரமுத்து ஆகியோர் மனுதாக்கல் செய்துள்ளனர். இதை எதிர்த்து அ.தி.மு.க. சார்பாக அவைத்தலைவர் தமிழ் மகன், தனியாக எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரும் வழக்கு தொடுத்தனர்.

இந்தத் தீர்ப்பால் எடப்பாடி உற்சாகமடைந்துள்ளார். பன்னீருக்கு இது பின்னடைவுதான். ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நாளை (27) திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு சாதகமாக அமைந்துள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுள் கடந்த எட்டு மாதங்களாக நிலவிய பூசல், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் சமயத்தில் முடிவுக்கு வந்ததும் ஓர் அரசியல்தான். பன்னீரிடம் இருந்த இரட்டை இலையை எடப்பாடியிடம் கொடுத்த நீதிமன்றம், கட்சியையும் அவரிடம் ஒப்படைத்துள்ளது.



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கைக்கு வந்த இரண்டு நாட்களுக்கிடையில் எடப்பாடிக்கு அக்கினிப் பரீட்சை காத்திருக்கிறது. இரட்டை இலை, கட்சி ஆகிய இரண்டும் கையில் இருப்பதால் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வெற்றி பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. ஈரோடு கிழக்கு தேர்தலில் முன்னதாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் யுவராஜ் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டார். இடைத்தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிடுகிறது. கடந்த தேர்தலில் யுவராஜ் 9 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இந்த இடைத்தேர்தலில் யுவராஜ் வாங்கிய வாக்குகளை விட அதிகமான வாக்குகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் பெற வேண்டும். அவர் தோல்வியடைந்தால் கூட வாக்கு வித்தியாசம் 9 ஆயிரத்துக்கும் குறைவாக இருக்கவேண்டும்.

நீதிமன்றம் கொடுத்த வெற்றியை ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் தட்டிப் பறித்து விடுமோ என்ற அச்சம் ஒரு புறம் உள்ளது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பக்க பலமாக பாரதீய ஜனதா கட்சி மட்டும் உள்ளது. ஆனால், அக்கட்சித் தலைவர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் ஒரே மேடையில் ஏறவில்லை.

அண்ணாமலை மட்டும்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தேர்தல் பரப்புரை செய்தார். பாரதீய ஜனதாவை எடப்பாடி எட்டத்தில்தான் வைத்துள்ளார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்டத் தொண்டரில் இருந்து முதலமைச்சராக படிப்படியாக உயர்ந்தவர் ஓ.பன்னீர்ச்செல்வம். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். பதவி ஆசை பிடித்தவர்களால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளார். தொண்டர்களையும், நிர்வாகிகளையும் பன்னீர் நம்பவில்லை. பாரதீய ஜனதா கட்சி தன்னைக் காப்பாற்றும் என்று பன்னீர் நம்பியிருந்தார். கடைசியில் பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள் அவரைக் கைவிட்டு விட்டார்கள்.

அ.தி.மு.க.வில் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய நபராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் 3 முறை முதல்வராக இருந்தார். ஜெயலலிதா சிறை சென்ற போதெல்லாம் ஓ.பன்னீர்செல்வத்திடம் மட்டுமே முதல்வர் பதவியை ஒப்படைத்து செல்வதை வாடிக்கையாக வைத்திருந்த நிலையில், தற்போது அவருக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே எதுவித தொடர்பும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் ஓ.பன்னீர்செல்வத்தின் 33 ஆண்டுகளுக்கு மேலான அ.தி.மு.க. பயணம் முடிவுக்கு வந்துள்ளது.

அ.தி.மு.க.வில் ஜெயலலிதா இருந்தவரை முதல்வர் பதவியில் அமர்ந்து, செல்வாக்கு மிக்க தலைவராக ஓ.பன்னீர்செல்வம் வலம் வந்தார். ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்களில் முதல் ஆளாக ஓ.பன்னீர்செல்வத்தின் பெயர் இருந்ததாலேயே இக்கட்டான காலத்தில் முதல்வர் பதவியை ஜெயலலிதா ஓபன்னீர்செல்வத்துக்கு வழங்கி வந்தார்.


இந்நிலையில்தான் உச்சநீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பின்படி தற்போது ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க.வில் அடிப்படை உறுப்பினராக கூட இல்லை.

இதன்மூலம் அ.தி.மு.க.வில் கடந்த 33 ஆண்டுகளுக்கும் மேலான அவரது அரசியல் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த முற்றுப்புள்ளிக்கு காரணம் சசிகலா என்றே கூறப்படுகிறது. அதாவது அ.தி.மு.க.வில் சசிகலாவால் வளர்ந்து உச்சம் தொட்ட ஓ.பி.எஸ். இப்போது அதே சசிகலாவால் ஒன்றுமில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

கட்சிக்காக தனது பதவிகள் அனைத்தையும் விட்டுக்கொடுத்த பன்னீர் இன்று கட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளார்.



# சரத்வீரசேகரவுக்கு ஒரு கடிதம் .........




ஆயுபோவன்... வணக்கம்... எப்படியப்பு இருக்கிறியள்...

சிங்கள இனப்பற்று , சிங்கள மொழிப்பற்று, பௌத்தமதப்பற்று, ஶ்ரீலங்கா நாட்டுப்பற்று எண்டு எல்லாப் பற்றுகளையும் அளவுக்கு மிஞ்சிப் பற்றி வைச்சிருக்கிறபடியால நாடி நரம்பு எல்லாம் துவேசம் ஊறி இருக்கிறதால பற்றற்றவரா இருக்கச்சொல்லி கௌதம புத்தர் சொன்ன போதனையளைக் கைக்கொள்ள முடியேல்லை எண்ட ஒரு கவலையை விட வேறை ஒரு கவலையும் உங்களுக்கு இல்லை எண்ட படியாலை, நல்ல சுகமாத்தானே இருப்பியள். எனக்கு உங்களிலை வலு புறியம் கண்டியளோ. ஏன் எண்டால், நீங்கள் ஒரு கொள்கைவாதி. என்னதான் வந்தாலும் ஆர் என்ன சொன்னாலும் சிறுபான்மைக்கு எதிரான உங்கட கொள்கையை நீங்கள் ஒருநாளும் விட்டுக்குடுக்கிறேல்லை. எங்கை எல்லாம் துவேசத்தைக் கக்க ஏலுமோ அங்க எல்லாம் அது பாளிமென்ற் எண்டாலும் சரி கக்கு கக்கு எண்டு கக்கிப்போடுவியள். உண்ணான உங்கடை உந்தகொள்கைப் பிடிப்பு அதாவது இது சிங்கள பௌத்த நாடு எண்டபடியால இது சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுந்தான் சொந்தம் எண்டு சொல்லிக்கொண்டு கடைசிவரையும் இருக்கிறியள் பாருங்கோ. அது எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு கண்டியளோ...

அதிலும் வலு சிறப்பு என்னண்டால் போன வரியம் ஒக்டோபர் மாதம் இருபத்தியோராந் திகதி பார்லிமென்றிலை கொண்ணந்த இருபத்தியிரண்டாம் திருத்தத்தை பொதுசனப் பெரமுன எம்பிமார் எல்லாரும் ஒண்டுமொண்டா ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆக்களோடை நிண்டு ஆதரிகேக்கை நீங்கள் மட்டும் தனிய எதிர்த்து வாக்களிச்சதைப் பாக்கேக்கை எனக்குப் புல்லரிச்சுப் போட்டுது கண்டியளோ. எப்பேர்க்கொத்த கொள்கைவாதி நீங்கள் எண்டதை இதிலையும் நிரூபிச்சுப்போட்டியள் எல்லே. உங்களோடை எப்பவும் இனத்துவேச விசயத்திலை போட்டி போடுற விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார, உதயகம்மன்பில எல்லாரும் உதுக்கு ஆதரவா வாக்களிக்க நீங்கள் எதிரா வாக்களிச்சு நீங்கள் எவ்வளவு பெரிய ஆளேண்டதை அவங்களுக்குக் காட்டிப்போட்டியள். அதோட எங்கட கஜேந்திரன்களும் தாங்கள் என்ன உங்களுக்கு குறைஞ்சவையோ எண்டு காட்ட வேணும் எண்டு போட்டு சபாநாயகர் கையைத் தூக்கச் சொல்ல வெளியிலை போட்டினம். அவையோட சேந்து மகிந்தவும் அவற்றை ஆக்களும் கொஞ்சப் பேர் வெளியிலை போட்டினம். அப்ப சிறுபான்மைக்கு என்னவும் கிடைச்சுப்போடப்படாது எண்டு நீங்கள் நினைக்கிற மாதிரியே சிறுபான்மையுக்குள்ளையும் கஜேந்திரன்கள் மாதிரியான ஆக்களும் நினைக்கிறபடியால உங்களுக்கு எற்பன் சந்தோசமா இருக்கும் தானே.



ரெண்டு மூண்டு கிழமைக்கு முந்தி யாழ்ப்பாணம் வந்த தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை வடக்கையும், கிழக்கையும் இணைக்க வேணும் பதின்மூண்டை அமுல்படுத்த வேணும் எண்டு சொல்லிப்போட்டார் எண்டு நீங்கள் கெம்பி எழும்பினதை மறக்கேலுமே. அண்ணாமலை ஆர் உதை எங்களுக்குச் சொல்லுறதுக்கு நாங்கள் கடைசிவரையும் பதின்மூண்டை அமுல்படுத்த விடமாட்டம் நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி உளறுறதை இந்தியாக்காறர் நிப்பாட்ட வேணும் எண்டு வார்ணிங் எல்லாம் கொடுத்ததை மறக்கேலுமே. அதிலும் நீங்கள் 13ஆவது திருத்தத்தை பார்லிமென்றுக்காலை இல்லாமல் செய்யிறதுக்குத்தான் இப்ப நேரம் வந்திருக்கு எண்டு மூஞ்சையில அடிக்கிற மாதிரி சொல்லிப்போட்டியள். அது மட்டுமே எங்கட பிக்குமாரும் உந்தை பதின்மூண்டை நிப்பாட்ட வேணும் எண்டு நாண்டு கொண்டு நிக்கினம், என்ன எல்லாரும் இது ஒரு சிங்கள பௌத்த நாடு எண்டதை பறந்து போனியளோ எண்டு ஒரு டோஸ் விட்டியள் பாருங்கோ உந்த டோசொடை இந்திய அரசாங்கத்துக்கு வயித்தைக் கலக்கி இருக்கும். அடக் கோதாரி வீர சேகர மாதிரி வீரமான ஆக்கள் இருக்கேக்கை ஶ்ரீலங்காவுக்கு என்ன குறை எண்டு நினைச்சிருப்பினம். இக்கணம் அவங்கள் இந்தியாவை சீனா பாகிஸ்தானிட்டை இருந்து மட்டும் இல்லை வீர சேகரவிட்டை இருந்தும் என்னண்டு காப்பாத்திறத்து எண்டு மண்டையைப் பிக்கப் போறாங்கள் எல்லே...

உதைவிட இப்ப கிட்டத்திலை திருக்கோணேஸ்வரம் சம்பந்தமான ஒத்திவைப்புப் பிரேரணை தொடர்பான விவாதத்திலை பார்லிமென்றிலை பேசேக்கை இலங்கையில இராவணன் எண்டு ஒரு மன்னனும் இல்லை சிவ வழிபாடும் இருக்கேல்லை எண்டு ஒரு முக்கியமான வரலாற்றைச் சொல்லி எனக்கும் வரலாறு தெரியும் எண்டு மார் தட்டினியள் பாருங்கோ அங்கைதான் நீங்கள் நிக்கிறியள். இராவணன் திருக்கோணேஸ்வரத்திலை கும்பிட்டான் எண்டத்துக்கோ அவன் ஒரு தமிழன் எண்டதுக்கோ சிவபெருமானைக் கும்பிட்டானோ எண்டதுக்கு ஆதாரம் எண்டு ஒண்டும் இல்லை. மகாவம்சத்திலை கூட அப்பிடி ஒரு ஆதாரம் இல்லை எண்டு உங்கடை மேதாவித்தனத்தை எவ்வளவு திறமா நீங்கள் காட்டினியள். அங்கை இருக்கிற கடையளை சிங்கள ஆக்கள் வைச்சிருக்கிறதாலைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கள் அதை இனவாதமா எடுத்துக்கொண்டு திரியினம் எண்டு ஆணித்தரமாச் சொன்னது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமே. நீங்கள் இப்பிடிக் கதைக்கேக்கை மகாவம்சத்திலை சிங்கள ஆக்கள் அங்கை கோணேஸ்வரம் கோயிலடியிலை கடை வைச்சிருந்தவை எண்ட விஷயம் இருக்குது எண்டதை என்னவோ தெரியேல்லை. சொல்லாமல் விட்டுப்போட்டியள். மறந்துபோனியள் எண்டு நினைக்கிறன் தற்செயலா எப்பயும் சிறீதரன் ஆக்கள் ஏதும் உதைப்பற்றிக் கதைச்சா நீங்கள் உந்த கடையள் வைச்சிருந்த விஷயத்தை மறக்காமல் சொல்லுங்கோ அப்பதான் உங்கடை கருத்துகளுக்கு ஒரு பிடிமானம் இருக்கும்.

போன வரியம் ஒருநாள் எப்ப எண்டு மறந்து போனன். பார்லிமென்றில ஒருக்காக் குருந்தூர் மலைப்பிரச்சினை சம்பந்தமாப் பேசேக்கை பௌத்த மதத்தின்ரை முதன்மை நாடான இலங்கையில சிங்கள மக்களின்ரை பொறுமைக்கு எல்லை இருக்குது. அதனை கேலி செய்யவேண்டாம் எண்டு சிங்கள பௌத்த மக்களின்ரை ஒரு காவலனா நிண்டு நீங்கள் பேசினது பெருமையான விஷயம். கௌதம புத்தர் சொன்ன சகிப்புத்தன்மை சீவ காருண்யம் எண்டு சொன்ன ஒண்டையும் அஞ்சாத்துக்கும் பின்பற்றாமல் பௌத்ததின்ரை முதன்மை நாடு எண்டு வெக்கம் ரோசம் இல்லாமல் பேச உங்களைப் போல ஆக்களாலைதான் முடியும். உப்பிடித்தான் எங்கட ரணிலின்ரை மாமா ஜே.ஆர். முந்தி ஒருக்காப் பார்லிமென்றில பேசேக்கை போர் எண்டால் போர் சமாதானம் எண்டால் சமாதானம் எண்டு பேசி அழிவுகளுக்கு அடி கோலினவர். உப்படித்தான் உங்களைப் போல துவேசம் பிடிச்ச ஆக்கள் தமிழ் சிங்களம் எண்டு ரெண்டு பக்கத்திலையும் உசுப்பேத்தி உசுப்பேத்திப் பேசி ரெண்டு பக்கத்திலையும் ஒரு சந்ததியையே இல்லாமல் அழிச்சுப்போட்டியள். இன்னும் மிச்ச சொச்சமா இருக்கிற கொஞ்ச நஞ்சத்தையும் அழிக்க வேணும் எண்டோ நாண்டு கொண்டு நிக்கிறியள். ஏற்கனவே பொருளாதாரப் பிரச்சினையால சுடுகாடாப் போய்க்கிடக்கிற இந்த நாட்டை இன்னும் நாசமாக்க வேணும் எண்டோ நீங்கள் உந்தக் கோதாரி பிடிச்ச கதையளைக் கதைச்சுக்கொண்டு நிக்கிறியள்.

உந்த ஒண்டுக்கும் உதவாத பதின்மூண்டாம் திருத்தம் சம்பந்தமா நீங்கள் இந்தியாகாறர் வாயை மூடிக்கொண்டு இருக்க வேணும் எண்டு சொல்ல உண்ணான நான் பின்பக்கத்தாலை சிரிச்சுப்போட்டன். நீங்கள் பெருமையாப் பேசுற மகாவம்சம் சிங்கள சந்ததியை உருவாக்கின விசயன் இந்தியாவிலை இருந்துதான் வந்தவன் எண்டும் அவன்ரை பெண்டில் பாண்டிய இளவரசி எண்டும் சொல்லுது. அதுமட்டுமே அவன்ரை தோழர்களின்ரை பெண்டில்மாரும் தமிழ்நாட்டுக்காறியள்தான் எண்டு சொல்லுது. அப்பிடிப் பாத்தால் நீங்கள் சொல்லுற பௌத்த சிங்களவர் எல்லாம் தாய்வழியிலை தமிழர்கள் எல்லே என்ன நான் சொல்லுறது. உதுமட்டுமே இஞ்சை பஞ்சம் பசி வந்தால் இந்தியாக்காறன்ரை சாப்பாட்டுச் சாமானும் பால்மாவும் மருந்துகளும் வேணும். பேந்து ஆரும் கடன்காரன் வந்து கழுத்தைப் பிடிச்சாப் பிணை எடுக்க கையிலை மடியிலை வைச்சுச் சிலவழிக்க இந்தியாவின்ரை காசு வேணும். அதுக்கு கை ஏந்தேக்கை பல்லை இழிச்சுகொண்டு போவியள். பேந்து இஞ்சை இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க வேணும் எண்டு போட்டு அவங்கள் ஏதும் சொன்னால் வாயை மூடு உன்ரை வேலையை நீ பார் எங்கட வேலையைப் பாக்க எங்களுக்குத் தெரியும் எண்டிறியள். உப்பிடிக்கொத்த வேலையைத்தான் எங்கட ஊரில திண்ட கோப்பையுக்கை பேலுறது எண்டு ஆக்கள் பறையிறவை.

அது சரி ஒருவிசயம் கேள்விபட்டனான்... வேறை ஒண்டும் இல்லை... கிட்டத்திலை பார்லிமென்றிலை பதின்மூண்டு சம்பந்தமாக் காரசாரமா நீங்கள் பேசிக் கொண்டு இருக்கேக்கை.. விட்டால் நீயே எதிர்க்கட்சிக்காரனுக்கு பேசுறதுக்கு பொயின்ற்ஸ் எடுத்துக் குடுப்பாய் போலக் கிடக்கு பேசாமை வாயை மூடிக்கொண்டு இரு எண்டு ரணில் பேசி இருத்தினவராமே... உண்ணான உந்தப் புதினம் மெய்யே... எனக்கு உதைக் கேட்டதிலை இருந்து ஒரு சிங்கள பௌத்த காவலனை என்னண்டு பேச விடாமல் தடக்கலாம் எண்டு ரணிலிலை சரியான கோவமாக் கிடக்கு. உங்களுக்கு ரணிலிலை கோவம் வரேல்லையே. வந்துந்தான் என்ன செய்யறது... கோவத்தை காட்ட வெளிக்கிட்டால் இருக்கிறதையும் பிடுங்கிக்கொண்டு ரணில் வெளியிலை விட்டால் பேந்து என்னத்தைச் செய்யிறது...

சரி... சரி... கனக்க எழுதிப்போட்டன் போல கிடக்கு எண்டபடியால இதோட நிப்பாட்டிறன். பேந்து இன்னொரு கடுதாசி ஆறுதலா எழுதிறன் கண்டியளோ...

நன்றி
வணக்கம்
இப்படிக்கு பேரம்பலம்

பிற்குறிப்பு : அது சரி இவ்வளவு துவேசமாப் பேசுற உங்களை மாதிரி ஆக்களை வெள்ளவத்தை ஐஸ்வரிய லச்சுமி கோயில்காறரும் மயூரபதி அம்மன் கோயில்காறரும் கூப்பிட்டு மாலை மரியாதை செய்து காளாஞ்சி தந்து பொன்னாடை போர்த்தி தலைப்பாக் கட்டேக்கை அவைக்கும் சரி உங்களுக்கும் சரி வெக்கமா இருக்கிறேல்லையே.......




## ★ஆளுங்கட்சியின் மக்கள் ஆதரவில் பெரும் சரிவு

## ★ தேர்தலை இழுத்தடிக்க ரணில் எடுத்த தீர்மானத்தின் இரகசியம்

## ★ மயந்தவை மயக்கி அரசியல் கட்சிகளை உடைக்கும் பணியை ஆரம்பித்த ஜனாதிபதி

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே 11ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையின்போது அடுத்த தேர்தல் திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும் வகையில் தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்றம் வழங்கும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை அரசியல் வட்டாரங்களில் பெரும் கேள்வியை எழுப்பியுள்ளது. உண்மையை சொல்லப்போனால் பாராளுமன்ற, நிறைவேற்று அதிகாரங்களை கையில் வைத்துகொண்டு உயர்நீதிமன்றத்தை மிரட்டும் வகையில், அன்றைய தினம் உரையாற்றினார் ரணில்.

தேர்தல் ஒத்திவைப்பு அல்லது தேர்தலை மேலும் காலதாமதம் செய்வதற்கான முழு வியாக்கியானத்தை ரணில் நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாக சுட்டிக்காட்டினார். தேர்தல் ஆணைக்குழுவின் ஒற்றுமையின்மை மற்றும் திறைசேரியினால் நிதி வழங்கப்படாத நிலைமை தொடர்பில் ரணில் தெரிவித்த கருத்துகள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை மட்டுமல்ல, நாட்டின் சமூக ஆர்வலர்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

தேர்தல் தொடர்பாக ஆட்சியாளர் நடத்திய கருத்துக் கணிப்புகளில், நூற்றுக்கு பத்து வீதமான மக்கள் ஆதரவு மட்டுமே ஆளுங்கட்சிக்கு இருப்பதாக தெரியவந்துள்ளது. இதனால் தேர்தலை ஒத்திவைப்பதைத்தவிர, ஆளுங்கட்சிக்கு வேறுவழியில்லை. தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முன்கூட்டியே அறிந்திருந்தனர். அப்படி அறிந்துள்ளமை தெரியக்கூடாது என்பதற்காகத்தான் தேர்தலுக்கு தயார் என்பது போல காட்டிக்கொண்டு தேர்தல் வேலைகளில் ஈடுபட்டது அக்கட்சி.

கடந்த வாரம் கொழும்பில் கட்சி உறுப்பினர்களை சந்தித்த ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான அதன் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ, பொதுஜன பெரமுன கடும் சவால்களை சந்தித்திருப்பதாகவும் அதற்கான காரணங்களை கண்டறிந்து மக்கள் மனங்களில் இடம்பெறும் ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், தேர்தலை சில காலங்களுக்கு ஒத்திவைத்துவிட்டு அதற்குள் மக்கள் மனங்களில் இடம்பெறும் வகையில் நிவாரணங்களை வழங்கி



அதன்பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்லலாமென ஜனாதிபதி ரணில் கருதுகிறார். இடையில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்தி அதனூடாக இழந்த செல்வாக்கை மீண்டும் நிமிர்த்தி அதன்பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்வது ஆளுங்கட்சியின் அபிப்பிராயமாக இருக்கிறது.

எனினும், தேர்தலொன்றுக்கு செல்லும் முன்னர் எதிர்த்தரப்பிலுள்ள அரசியல் கட்சிகளை பலவீனப்படுத்துவது தான் இனி ரணிலின் முதல்வேலையாக இருக்கப்போகிறது. இதனை கடந்த வாரமே ரணில் ஆரம்பித்துவிட்டார்.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக கலாநிதி ஹர்ஷ டி சில்வாவே செயற்பட்டுவந்தார். எனினும், 9ஆவது நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஜனாதிபதி இடைநிறுத்தியதால் மேற்படி குழுவின் செயற்பாடுகளும் முடிவுக்கு வந்தன.

9ஆவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைமைப்பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை நியமிப்பதற்கு எதிர்க்கட்சி தீர்மானித்திருந்தது. இதற்கான பரிந்துரையும் சபாநாயகரிடம் முன்வைக்கப்பட்டது.

எனினும், ஆளுங்கட்சி எம்.பிக்களின் ஆதரவுடன், எதிரணி எம்.பியான மயந்த திசாநாயக்க அந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைமைப்பதவி எதிரணிக்கே வழங்கப்பட வேண்டும். எனவேதான் மயந்த திசாநாயக்கவின் பெயரை முன்மொழிந்து, அவரை தலைமைப்பதவிக்கு அமர்த்தியுள்ளது ஆளுங்கட்சி.

எதிரணி சார்பில் ஹர்ஷவின் பெயர் முன்மொழியப்பட்டிருப்பதால், மேற்படி பதவியை ஏற்க முடியாது என சபாநாயகருக்கு தெரியப்படுத்துமாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, மயந்த திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், அந்த கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார்.

மயந்த திசாநாயக்க, நவீன் திசாநாயக்கவின் சகோதரர். நவீன் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கின்றார்.

ரணசிங்க பிரேமதாச ஆட்சிகாலத்தில், அவருடன் முட்டிமோதியவர்களில் பிரதானமானவர் காமினி திசாநாயக்க. ஐ.தே.கவில் இருந்து வெளியேறி புதிய கட்சியைக்கூட உருவாக்கினார்.

ரணசிங்க பிரேமதாசவின் மகனே சஜித். காமினி திசாநாயக்கவின் மகனே மயந்த திசாநாயக்க.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தம்மை வெளிப்படையாக ஆதரித்த - தமக்காக தீவிர பரப்புரைகளில் ஈடுபட்ட தமிழ் முற்போக்கு கூட்டணிக்குகூட ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்காமல், மயந்த திசாநாயக்கவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கி, காமினி திசாநாயக்க குடும்பத்தை மகிழ்வித்தார் சஜித் பிரேமதாச.

ஆனால், இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவை எட்டி உதைத்துவிட்டு, ரணில் - ராஜபக்ஷ அரசை குஷிப்படுத்தும் வகையில் மயந்த திசாநாயக்க செயற்பட்டுள்ளார். அநேகமாக மயந்த விரைவில் அரசாங்கத்தில் இணைந்து இராஜாங்க அமைச்சொன்றை பெறவுள்ளதாக தெரிகிறது. மயந்த மட்டுமல்ல, ராஜித சேனாரத்னவும் அரசில் இணையவுள்ளார்.

ஒருபக்கம் மயந்தவை மயக்கி அவருக்கு பதவியை கொடுத்த ரணில், பாராளுமன்றத்தில் பேசும்போது முஜிபுர் ரஹ்மான் பற்றியும் பேசினார். தன்னால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட முஜிபுர், தேர்தலில் போட்டியிட வேண்டாமென ஆலோசனையை தான் கூறியதாகவும் முஜிபுர் பாராளுமன்றத்தில் இருந்திருக்க வேண்டும் என்றும் ரணில் கூறினார். இப்படி எம்.பிக்களை குறிவைத்து ரணில் பேசுவதால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் வீண் குழப்பத்தை ஏற்படுத்த தீவிர முயற்சிகளை எடுக்கிறார். ஏற்கனவே ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தன்பக்கம் ஈர்த்துள்ள ரணில், சஜித் கட்சியையும் இரண்டாக உடைக்க முயல்கிறார்.

ஆனால், தேர்தலை ஒத்திவைத்து அரசியல் செய்யலாம் என்ற ரணிலின் கனவு அவருக்கு எதிர்காலத்தில் அதிர்ச்சிகளையே கொடுக்கும் என்பதை யூகிக்க முடிகிறது.

ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

காப்புறுதியைப் புதுப்பித்து
நாங்கள் உறவைப் புதுப்பித்துக்கொள்வோம்.

கட்டுப்பணம் செலுத்துவதில் தங்களுக்கு ஏதேனும் இடர்பாடுகள் உள்ளதா?

தங்களது காப்புறுதிக் கட்டுப்பணம் 6 மாதகாலத்திற்குள் செலுத்தப்படாதிருந்தால்.


தயவுசெய்து தங்களுடைய காப்புறுதி முகவரை அல்லது அருகிலுள்ள எமது கிளையுடன் அல்லது 0112552277 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.
Your lifeline for life

நல்லுறவைத் தொடர்வோம்.

இணையத்தளம் : WWW.Liclanka.com

# இட்டுகம நிதியில் மாயமான 180 கோடி ரூபா



றிப்தி அலி

"இட்டுகம (செய்கடமை)" என்று அழைக்கப்படும் கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்குக் கிடைக்கப்பெற்ற நிதித் தொகையில் 180 கோடி ரூபா காணாமல்போயுள்ள விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

இந்த நிதியத்திலிருந்து 180 கோடி ரூபா சுகாதார அமைச்சின் பட்டியலுக்கான சரியான தீர்ப்பனவுக்காக (settlement of accrued bills to Health Ministry) ஒதுக்கப்பட்டுள்ளதாக கடந்த ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது.

எனினும், குறித்த நிதி இதுவரை கிடைக்கவில்லையென சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலறியும் உரிமை கோரிக்கைக்கான பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதம நிதி அதிகாரியான தாரக்கவை தொடர்புகொண்டு வினவியபோது, "இந்த விடயம் தொடர்பில் எதுவும் கூறமுடியாது" என்றார்.

அத்துடன், குறித்த நிதி தொடர்பில் மேலதிக தகவல் எதுவும் தேவை என்றால் ஜனாதிபதி செயலகத்திற்கு தகவலறியும் விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதியத்தின் செயலாளராக ஜனாதிபதி செயலகத்தின் பிரதம நிதி அதிகாரியே பதவி வழியாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, "இட்டுகம நிதியத்திலிருந்து சுகாதார அமைச்சுக்கு 15 கோடியே 16 இலட்சத்து 95 ஆயிரத்து 759 ரூபா மற்றும் 56 சதம் மாத்திரமே கிடைக்கப்பெற்றது" என அமைச்சின் பிரதம நிதி அதிகாரியான (தரம் - 01) திருமதி டீ.சி.விக்ரமசேன தெரிவித்தார்.

இது கிடைக்கப்பெற்ற மொத்த நன்கொடையில் ஏழு சதவீதம் மாத்திரமேயாகும். "காசோலை மூலம் ஐந்து கட்டங்களாக கிடைக்கப்பெற்ற இந்த நிதி, மூன்று தேவைகளுக்காக சுகாதார அமைச்சால் பயன்படுத்தப்பட்டது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேசிய தடுப்பூசித் திட்டத்திற்கு 4 கோடியே 15 இலட்சத்து 45 ஆயிரத்து 980 ரூபா செலவழிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் முன்னர் தெரிவித்திருந்தது.

எனினும், குறித்த தொகை நிதி கொவிட் -19 உடன் தொடர்புடைய எழுதுபொருட்கள் அச்சிடுவதற்காகவே பயன்படுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

அரச அச்சகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட எழுது பொருட்கள் அச்சிடல் பணிக்கு 4 கோடியே 7 இலட்சத்து 39 ஆயிரத்து 450 ரூபா மற்றும் 85 சதம் செலவழிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒதுக்கப்பட்ட நிதியில் 8 இலட்சத்து 6 ஆயிரத்து 529 ரூபா மற்றும் 15 சதம் தற்போது மிகுதியாகவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

பீ.சீ.ஆர். பரிசோதனைக்காக கிடைக்கப்பெற்ற நிதியில் 60 இலட்சம் ரூபா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கும், 25 இலட்சம் ரூபா பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், 3 கோடியே 41 இலட்சத்து 5 ஆயிரத்து 812 ரூபா மருத்துவ விநியோகப் பிரிவுக்கும் வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட நிதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பி.சீ.ஆர். பரிசோதனைக் கூடத்துக்குத் தேவையான அவசர கொள்வனவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தினாலேயே இட்டுகம நிதியத்தின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கின்றது. எனினும், இந்த கணக்காய்வுக்கான 88 ஆயிரத்து 800 ரூபா நிதியத்தின் நிதியிலிருந்தே வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியத்தின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட '1990 – சுவசெரிய' அம்பியூலன்ஸ் சேவைக்கு 408.43 மில்லியன் ரூபா பெறுமதியில் 60 அம்பியுலன்ஸ்களை கொள்வனவு செய்தல் மற்றும் கொவிட் தொற்றினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு கல்விப் புலமைப்பரிசில்களை வழங்கல் போன்ற செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


அத்துடன், 2020 ஏப்ரல் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்திற்கு முதல் ஒரு வருட காலப் பகுதியினுள் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய பாராளுமன்ற அங்கீகாரமானது இறுதியாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2022 ஜூலை 18ஆம் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் நிதியத்திற்கு கிடைக்கும் நன்கொடைகளுக்கு 2021 நவம்பர் 30ஆம் திகதிவரையிலும் வரியிலிருந்து விலக்களிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்தவாறு இந்த நிதியத்தினால் செலவீனங்கள் மேற்கொள்ளப் படாமையின் காரணமாக இந்நிதியத்தின் நிதிச் சொத்துகள் 07 நாட்கள், 31 நாட்கள், 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் ஒரு வருடங்கள் என நிலையான வைப்புகளில் வைப்புச் செய்யப்பட்டு நிதியத்தின் நிதிச் சொத்துகளை அதிகரிக்கப்பட்ட விடயம் கணக்காய்வு அறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

| நிதி கிடைக்கப்பெற்ற விபரம் | | | | நிதி செலவழிக்கப்பட்ட விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| காசோலை திகதி | காசோலை இலக்கம் | தொகை (ரூபா) | விடயம் | காசோலை திகதி | காசோலை இலக்கம் | தொகை (ரூபா) | விடயம் |
| 22.06.2020 | 432976 | 6,000,000.00 | பீ.சீ.ஆர். பரிசோதனை | 24.06.2020 | 127586 | 6,000,000.00 | மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் |
| 24.07.2020 | 432977 | 36,605,812.00 | பீ.சீ.ஆர். பரிசோதனை | 10.08.2020 | 127852 | 2,500,000.00 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| | | | பீ.சீ.ஆர். பரிசோதனை | 10.08.2020 | 127851 | 34,105,812.00 | மருத்துவ விநியோகப் பிரிவு |
| 20.05.2021 | 432985 | 41,545,980.00 | எழுதுபொருட்கள் அச்சிடல் | 16.07.2021 | 292327 | 40,739,450.85 | அரசாங்க அச்சுத் திணைக்களம் |

*தகவல்: சுகாதார அமைச்சு*



| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற நன்கொடை | 2,005,323,168.09 | |
| நன்கொடைக்கு கிடைக்கப்பெற்ற வட்டி | 210,959,712.26 | |
| **மொத்த நன்கொடை** | | **2,216,282,880.35** |
| **செலவுகள்** | | |
| பீ.சீ.ஆர். பரிசோதனைகள் | 42,605,812.00 | |
| ஆலோசனை நிகழ்ச்சிகள் | 67,543,967.56 | |
| தனிமைப்படுத்தல் வசதிகள் | 38,031,065.00 | |
| தேசிய தடுப்பூசித் திட்டம் | 41,545,980.00 | |
| ICU கட்டில்கள் கொள்வனவு | 7,750,000.00 | |
| அந்நியச் செலாவணிக்கான கட்டணம் | 3,832.00 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 88,800.00 | |
| சுகாதார அமைச்சின் பட்டியலுக்கான சரியான தீர்ப்பனவு | 1,800,000,000.00 | |
| **மொத்தச் செலவுகள்** | | **1,997,570,256.56** |
| **ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகுதி** | | **218,712,623.79** |

*தகவல்: ஜனாதிபதி செயலகம்*

## 'வெழ்'மணியம்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*அதுக்கொரு "விழா" எடுத்து கோமாளிக்கூத்து ஆடியது உங்கள் எல்லாருக்கும் ஞாபகம் இருக்கும் எண்டு நினைக்கிறம்.*

*இந்த "நகைச்சுவை" நாடகம் முடிந்து ஒரு மாதம் ஆகாத நிலையில் குருந்தூர்மலையை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்படுகிறது.*

*இலங்கையின் நீதிமன்ற கட்டளையை ஒரு அஞ்சு சதத்துக்கும் மதிக்காத பௌத்த பேரினவாத அரசு செய்யும் கேவலமான வேலை இது.*

*தமிழ் மக்களிடமும் சர்வதேச நாடுகளிடமும் நல்லிணக்கம் என்ற நாடகமாடி "பல்லிளிக்கும்" ரணில் அரசின் உண்மையான "கோர முகம்" இது.*

*வடக்கு, கிழக்கில் விகாரைகள் அமைக்கப்படுவதில் தப்பில்லை. ஆனால், அவை தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து அடாத்தாக அமைக்கப்படுவதுதான் தவறு.*

*போர் முடிந்து ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக ஆகிவிட்டது. சிறிலங்கா இராணுவத்தால் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் உள்ள சைவக்கோயில்கள் பல பாழடைந்து கிடக்கின்றன. அவை இன்னும் முற்றாக விடுவிக்கப்படவில்லை.*

*அதைவிட போர் தின்ற பூமியில் இன்னமும் பல கோயில்கள் இடிந்த நிலையில்தான் இருக்கின்றன. அவற்றை புனரமைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

*சிறிலங்காவின் இந்து கலாசார அமைச்சும் அதன் அமைச்சரும் வெறுமனே பேச்சளவில்தான் இயங்குகினம்.*

*ஆக;*

*ஒருபுறம் கோயில்களை அழித்துவிட்டு தமிழர் நிலங்களில் புதிசு புதிசாக புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் அமைப்பது என்பது இனப்படுகொலையின் நீட்சிதான்!*

*இந்த நாடு சீரழிந்து சின்னாபின்னமாக ஆனதுக்கு காரணம், மிகையான பௌத்த பேரினவாத மனோநிலை கொண்ட பிக்குகள் தான்.*

*போர்முடிந்த பிறகும் கூட அவர்களின் அந்த "கொடிய" மனநிலையில் இருந்து இன்றுவரை கிஞ்சித்தும் மாற்றமில்லை.*

*சிறிலங்காவின் அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள "13ஆம் திருத்த சட்டத்தை" பௌத்த பிக்குகள் எரிக்கும்போது அதை கண்டிக்கும் தைரியம் தெற்கு மக்களுக்கு இல்லை.*

*கோட்டாபயவை கலைக்கும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் உட்பட அங்கே நின்ற சிங்கள மக்கள் அப்போது எங்களிடம் என்ன எதிர்பார்த்தார்கள்?*

*நாங்களும் அவர்களோடு கைகோர்த்து இந்த நாட்டை கட்டி எழுப்பவேணும் எண்டுதானே குழறினார்கள்.*

*"ஓம்" எண்டுதானே நாங்கள் சொன்னம்.*

*ஆனால், எல்லாம் முடிஞ்சு இண்டைக்கு ரணில் - ராஜபக்ஷ அரசு செய்யும் அடக்குமுறைகளுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராக தெற்கும் காலிமுகத்திடல் போராளிகளும் மௌனமாக இருப்பதன் காரணம் என்ன?*

*மீண்டும் ஒருமுறை நாட்டை மீட்கிறம். சுத்தம் செய்யப்போறம். இலஞ்ச ஊழல்வாதிகளை விரட்டுறம் எண்டு எங்களிடம் வரவேண்டாம்.*

*நம்பி நம்பி மீண்டும் மீண்டும் ஏமாற நாங்கள் தயாரில்லை.*

*ரணில் - ராஜபக்ஷ அரசு செய்யும் மக்கள் விரோத செயல்கள் தெற்கு மக்களுக்கு மட்டுமானதல்ல. வடக்கு, கிழக்கிலும் நீண்டுபோய்த்தான் கிடக்கு.*

*"ரணில் - ராஜபக்ஷ" அரசுக்கு எதிராக போராடும் பூரண சுதந்திரம் தெற்கு மக்களுக்கு தாராளமாகவே இருக்கிறது.*

*ஆனால் வடக்கு, கிழக்கில் மீண்டும் ஒரு ஜனநாயக வழிப்போராட்டம் நிகழுமானால் தமிழ்மக்களை "இரும்புக்கரம்" கொண்டு அடக்குவார்கள்.*

*தமிழ்மக்களின் "குரல்வளைகளை" நெரிப்பார்கள்.*

*பலர் மீண்டும் காணாமல் ஆக்கப்படுவார்கள். இதுதான் கசப்பான யதார்த்தம்.*

*ஆக;*

*ரணில் - ராஜபக்ஷ ஆட்சியாளர்களின் வன்செயல்களை எதிர்க்கும் "போராட்டக்காரர்கள்" வடக்கு, கிழக்கில் நிகழும் ஆக்கிரமிப்புகளையும் வன்முறைகளையும் கண்டும் காணாமலும் இருக்கக்கூடாது.*

*"எங்களுக்கு" ஆதரவாக உங்களின் குரல்கள் எழும்போதுதான்;*

*"உங்களுக்கு" ஆதரவாக எங்களின் கரங்கள் நீளும்.*

*கொழும்பில் நடைபெறும் "அரசுக்கு" எதிரான ஆர்ப்பாட்டங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் "எங்கட" தலைகள் தெரிய வாய்ப்புள்ளது.*

*இந்த நாட்டை மீட்கவும் மீள கட்டியெழுப்பவும் வேண்டுமானால்;*

*தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக கைகோர்த்து நிக்கவேணும் எண்ட "அடிப்படை" உண்மையை தெற்குமக்கள் உணராதவரை;*

*"13ஆம் திருத்தம்" எண்ட அற்பசொற்ப அதிகாரங்களைத்தானும் சிறுபான்மை மக்களுக்கு தரவிரும்பாத பௌத்த பேரினவாத பிக்குகள் இருக்கும் வரை;*

*எதுவித "நல்ல" மாற்றமும் இந்த நாட்டில் நிகழ வாய்ப்பேயில்லை.*

*சீனாவும் அமெரிக்காவும் இந்தியாவும் கொடுக்கும் "பொய்யான" வாக்குறுதிகளை நம்பி இந்த நாட்டை முன்னகர்த்தி செல்லும் இந்த "ரணில் - ராஜபக்ஷ" அரசால் இந்த நாட்டுக்கு அஞ்சுசதத்து பிரயோசனமும் வராது எண்டு எங்களுக்கு வடிவாத் தெரியும்.*

*ஆனால், இதை இன்றுவரை உணராத பேரினவாத பௌத்த பிக்குகளின் கைகளில் "ஆபத்தான அதிகாரம்" இருக்கும் வரை இந்த நாடு உருப்படாது.*

*ஆட்சி அதிகாரத்தில் இருந்து கோட்டாபயவை கலைக்கும் போராட்டத்தில் பௌத்த பிக்குகளுக்கும் எதிராக "பொங்கிய" தெற்கு சிங்கள மக்கள் இன்று மீண்டும் அதே பௌத்த பிக்குகளுடன் கைகோர்த்து நிக்கிறார்கள்.*

*அப்ப "நாடு" எப்படி உருப்படும்?*

*சிங்கள பௌத்த பேரினவாத "சிந்தனையில்" இருந்து இறங்கிவந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப தெற்கு மக்கள் விரும்பினால்;*

*தமிழ்மக்களை நோக்கி அவர்கள் மிக "வேகமாக" நடந்துவர வேண்டும்.*

*ஏன் நீங்கள் எங்களிடம் வரமாட்டியளோ? எண்டு சிங்கள் மக்கள் கேட்பதற்கு முன்பாக அவர்கள் ஒருக்கால் இந்த நாட்டின் 30 ஆண்டுகால வரலாற்றை திறந்த மனதோடு திரும்பிப் பார்க்கவேணும்.*

*அதைவிட்டுப்போட்டு கொழும்பில் நிண்டு சஜித்தும் அரகலய போராட்டக்காரர்களும் "கத்தி குழறுவதால்" எந்த மாற்றமும் நிகழாது. "ரணில் - ராஜபக்ஷ" ஆட்சியை மாற்றவும் முடியாது.*

*ரணில் ஒரு நரி எண்டால் ராஜபக்ஷ ஒரு சிங்கம்.*

*நரியும் சிங்கமும் ஒண்டு சேர்ந்து ஆட்சி செய்யும் "காட்டில்" எந்த விலங்குகளும் நிம்மதியாக வாழவோ அல்லது நித்திரை கொள்ளவோ முடியாது.*

*ஆக;*


*தெற்கில் வாழும் சிங்கள மக்கள் தங்களின் பிள்ளைகளின் "எதிர்காலத்தில்" அக்கறை இருந்தால்;*

*இந்த நாடும் மீண்டெழ வேண்டுமானால்;*

*நிம்மதியாக வாழவேண்டும் என்று விரும்பினால்;*

*"நல்ல முடிவுகளை" விகாரைகளுக்கு வெளியில் நிண்டு எடுக்கவும்.*

# தேர்தல் ஆணைக்குழுவை நெருக்கடியில் தள்ளியுள்ள ஜனாதிபதியின் உரை



**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

மார்ச் மாதம் 09ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமென்று ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தபோதும் அந்தத் தேர்தலை நடத்த பணம் இல்லை என்றும் வாக்கும் இல்லை, தேர்தலும் இல்லை, தேர்தல் ஆணைக்குழு சட்டபூர்வமாக தேர்தல் நடத்துவதென்று எந்த திகதியையும் நிர்ணயிக்கவில்லை, அதனால் தேர்தலும் இல்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 பெப்ரவரி 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கின்றது. தேர்தல் ஒன்று நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாகவோ அல்லது அரசியல் அமைப்புக்கமைவாகவோ எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி அதிஉன்னதமான சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தில் தெரிவித்தமையே இவ்வாறு கேள்விக்குறியை தோற்றுவித்திருக்கின்றது.

கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலஅவகாசம் நிறைவடைந்தது. அதிலிருந்து அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இறங்கி இதுவரையிலும் தேர்தல் நடக்கலாம் என்ற நம்பிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. ஆனாலும் இடையிடையே தேர்தல் நடத்த அதற்கான 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இல்லை என்று நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வருகின்றார். அதன் காரணமாக தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி (சமகி ஜன பலவேகய), ஜாதிக ஜன பலவேகய (ஜே.வி.பி.) மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ஜனாதிபதி நேற்று முன்தினம் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் தோன்றி இவ்வாறானதொரு உரையை நிகழ்த்தினார். அந்த உரையில் தேர்தலொன்று நடக்க இருப்பது தமக்குத் தெரியாது என்றும் முற்றுமுழுதாக மார்ச் 09ஆம் திகதி தேர்தல் நடக்கும் என்று ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு செய்தமையானது சட்டத்திற்கும் அரசியல் அமைப்புக்கும் முரணானது என்றும் அதனால் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா வெளியிட்டிருந்த அறிவிப்பு செல்லுபடியற்றது என்றும் தெரிவித்து அரசாங்கத்துக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையில் வெளிப்படையான மோதல் ஒன்று இருந்து வருகின்றமையை திட்டவட்டமாக புடம் போட்டு காட்டினார்.

ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் தோன்றி தேர்தல் நடத்த முடியும். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று மன்றுக்கு தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி, அரசியல் சார்பான நடுநிலையற்ற ஒருவர் என்றும் நடுநிலையான ஒரு சட்டத்தரணி மன்றில் ஆஜராகியிருந்தால் அந்த கருத்தை ஏற்க முடியும் என்றும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி என்றவகையில் நாட்டின் தலைவரான ஜனாதிபதியே நீதிமன்றத்தையும் சவாலுக்குட்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார்.

ஏற்கனவே இந்தத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்காக மூன்று பேர் சதி செய்ததாக மக்கள் கருதுகின்றனர். நிதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் அச்சகர் கங்காணி லியனகே ஆகியோரே அவர்களாவர். தபால் மூல வாக்குச்சீட்டுகளை அச்சிட பொலிஸ் பாதுகாப்பு வழங்கவில்லை என்று பிரதம அச்சகர் பொலிஸ் மா அதிபரை குற்றஞ்சுமத்தி இருந்தார். அதேபோன்று தேர்தலை நடத்த பணம் வழங்கவில்லை என்று நிதி அமைச்சர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையில் தேர்தலை பின்போட வேண்டும் என்று ஓய்வுபெற்ற கேர்ணல் ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் மே மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கின்றது. ஆனாலும் தேர்தலுக்கான திகதி மார்ச் 09ஆம் திகதி என்றிருக்கையில், அது தொடர்பான மனு மீதான மேலதிக விசாரணை மே மாதம் வரை ஒத்திப்போடப்பட்டமையும் வியப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

இவ்வாறு பார்க்கின்றபோது நாட்டில் அனைத்துமே தலைகீழாகவே நடப்பதாக உணர முடிகின்றது. எதுவானாலும் ஜனநாயக மரபுகளையும் விழுமியங்களையும் மதித்து கௌரமளிக்கும் நாடு என்றவகையில் இலங்கைக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்துவருகின்றது. ஆனாலும் சர்வதேசத்தின் மத்தியில் ஆபிரிக்க அல்லது சோஷலிச சம தர்ம நாடுகளில் போன்று சர்வாதிகாரப் போக்கில் ஆட்சி நிர்வாகம் நடக்கும் நாடு என்ற அவப்பெயர் கிடைப்பதற்கான சாத்தியமான சூழ்நிலைகளே உருவாகி வருகின்றன. அதிலும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியான தனி நபர், எல்லை மீறிய அதிகாரங்களால் சர்வாதிகாரியாக மாறும் சந்தர்ப்பங்கள் இரண்டாவது குடியரசு யாப்பான 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் இருக்கின்றது என்று அதனை விமர்சனம் செய்தவர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டு கட்டுப்பணங்கள் செலுத்தப்பட்டு பல கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்து தேர்தல் பிரசாரங்களையும் முன்னெடுத்து வந்து தேர்தலுக்கு மேலும் 14 நாட்கள் இருக்கும் நிலையில், சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தலை நடத்தும் அறிவிப்பு சட்டரீதியற்றது என்றும் அது தேர்தல் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவர் அல்லது இரண்டு பேரின் தன்னிச்சையான முடிவு என்றும் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானம் என்றும் பொறுப்புவாய்ந்த ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் மிகவும் சுலபமான முறையில் தெரிவிக்கின்றமையானது நாடாளுமன்றத்தையும் அதில் அங்கம் வகிக்கின்ற ஆளும் கட்சி உட்பட 224 பிரதிநிதிகளையும் கேலிக்கூத்தாக மதித்த ஒரு சந்தர்ப்பமாகும்.

அதேநேரம், ஜனாதிபதி என்றவகையில் ஜனாதிபதி பதவி என்ற நிலையைத் தவிர, வேறு எந்த அதிகாரமும் இருக்கக்கூடாது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. அவர் ஒரு சர்வாதிகாரி போன்று செயற்பட்டு நிதி அமைச்சு பொறுப்பை தன்னகத்தே வைத்துக்கொண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட 1000 கோடி ரூபாவையும் பணம் இல்லை என்று தயவுதாட்சண்யமின்றி மறுத்து வருகின்றமை நாட்டில் ஒரு கசப்பான அனுபவத்தையும் முன்மாதிரியையும் காட்டுவதாக அமைகின்றது.

அதேநேரம் ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கருத்து தெரிவிக்கையில் மார்ச் மாதம் 09ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதென்று எடுத்த முடிவானது அரசியலமைப்புக்கும் தேர்தல் சட்டங்களுக்கும் உட்பட்டதாகவே அமைகின்றது. அந்தத் தீர்மானம் செல்லுபடியானதாகும் என்று தொவித்துள்ளார்.

அதேநேரம் தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க அதன் கோரமான மூன்று அங்கத்தவர்களாவது இருந்திருக்க வேண்டும். ஆனால், மார்ச் 09ஆம் திகதி தேர்தல் நடத்துவதென்று எடுக்கப்பட்ட தீர்மானமானது இரண்டு உறுப்பினர்களைக்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானமாகும். அதனால் செல்லுபடியற்ற தீர்மானத்தைக்கொண்டு செய்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. தேர்தலை பின்போடவோ நிதி வழங்கவோ தேர்தல் ஒன்று இல்லை என்று ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்தமையானது திட்டமிட்டபடி தேர்தல் நடக்காது என்பதை வெளிப்படையாக செய்த அறிவிப்பாக அமைகின்றது.

ஆனாலும் தேர்தலுக்காக திணைக்களம் இதுவரையில் 50 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட அரச பொது நிதியை செலவு செய்திருக்கின்றது. நாடு பொருளாதார நெருக்கடியொன்றை சந்திக்கின்ற நிலையில் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட தூரநோக்கம் இல்லாத இத்தகைய தீர்மானங்களால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாத்திரமன்றி களத்தில் இறங்கியுள்ள அரசியல் கட்சிகள், வேட்பாளர்களும் கணிசமான அளவு பணத்தை தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையில் விரயமாக்கியுள்ளனர். இத்தகைய இழப்புகளுக்கு யார் பொறுப்பு கூறுவது. ஆரம்பம் முதலே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொதுஜன பெரமுன சார்பான அரச அதிகாரிகள் இந்தத் தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை.

நாடு பொருளாதார நெருக்கடியொன்றை எதிர்நோக்கி வருவது உண்மை. அந்த நெருக்கடி தொடர இடமளிக்க முடியாது. நாட்டில் ஸ்திரமான அரசியல் நிலை ஏற்பட வேண்டும். ஏற்கனவே 69 இலட்சம் மக்களது வாக்குகளுடன் நாடாளுமன்றத்தில் 145 பெரும்பான்மை ஆதரவுடன் பதவிக்கு வந்த ஜனாதிபதி, நாட்டு நலனை முன்னிலைப்படுத்தாமல் எடுத்த சில முடிவுகள் காரணமாக இரண்டு வருடங்களில் அவரை நாயைத் துரத்துவதுபோன்று மக்களால் துரத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி என்ற பதவியில் இருந்துகொண்டு செய்த தவறும் அவர் பதவிக்கு வந்தவுடன் நாட்டு நிர்வாகம் அரசியல் அடிப்படை தெரியாத தமக்கு விசுவாசமான இராணுவ ஓய்வுபெற்ற அதிகாரிகளை உயர் பதவிகளுக்கு நியமித்துக்கொண்டார்.

அவ்வாறே ஆலோசகர்கள் என்றிருந்தவர்களும் கூட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் கப்ரால் உட்பட துறை சார்ந்த நிபுணத்துவம் உள்ளவர்கள் இருக்கவில்லை. அப்போது கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த சில தீர்மானங்களை அதே மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷ மோசமான தீர்மானம் என்று விமர்சனம் செய்கின்ற அளவிற்கு தூரநோக்கம் இல்லாத தீர்மானங்களாக இருந்துள்ளன. அதனால்தான் நாட்டைவிட்டு ஜனாதிபதி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது என்று அதே பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய பின்னணியை அறியாமல் - நடந்து முடிந்தவைகளிலிருந்து தக்க பாடம் படிக்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு நடந்துகொள்வது நாட்டுக்கு அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. தேர்தல் நடத்தப்படக் கூடாது என்பது ஆளும் கட்சியுடன் இருக்கின்ற பொதுஜன பெரமுன மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பானவர்களது எண்ணப்பாடாக இருந்துவந்தது. இந்தச் சூழ்நிலையில் எந்தத் தேர்தலாக இருந்தாலும் அவசியம் இல்லை என்பதாகும். காரணம், ஏற்கனவே ஆளும் கட்சியாக இருந்த பொதுஜன பெரமுன கட்சி தொடர்பாக மக்கள் வெறுப்படைந்துள்ள நிலையில் வருகின்ற தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகய மற்றும் ஜே.வி.பியின் செல்வாக்கு ஓங்கி வருவதால் தேர்தல் முடிவு மோசமான பிரதிபலனை வெளிப்படுத்தும் என்பதாகும்.

அவ்வாறான பிரதிபலன் வெளிப்பட்டால் அடுத்து 2024ஆம் ஆண்டு நடக்கவுள்ள பொதுத் தேர்தல், அதன் பின்னரான ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் மக்கள் ஆதரவு வேறு திசையில் சென்றால் ரணில் சார்பான அணியொன்று இல்லாவிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷ சார்பான அணியினருக்கு அரசியல் ரீதியாக பின்னடைவு ஏற்படலாம் என்ற அச்சம் இருக்கின்றது. இந்த அச்ச நிலையே திட்டமிடப்பட்ட தேர்தலை பின்போடுவதற்கு வழிவகுத்த காரணிகளாகும்.

## நிதி மோசடியில் ஈடுபட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட
# கல்முனை மாநகர சபை ஊழியர்கள் இருவர் தலைமறைவு

***(சாய்ந்தமருது செய்தியாளர்)***

நிதி மோசடியில் ஈடுபட்ட கல்முனை மாநகர சபை ஊழியர்கள் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ள நிலையில், அவர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை உடனடியாக கைதுசெய்து, சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், பொலிஸ் உயரதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதிக் கையாடல் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் எவருக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றிவந்த இரு ஊழியர்கள் நிதிக் கையாடலில் ஈடுபட்டுள்ள விடயம் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, நான் ஆணையாளருக்கு வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் அவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக் கப்பட்டு, நிதிக் கையாடல் சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முகத்தோற்றளவில் அவ்விரு ஊழியர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியிருப்பதால் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் அவர்கள் இருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டி ருக்கின்றனர்.

அத்துடன், இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



குறித்த ஊழியர்களின் சேவைக் காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி, முறைகேடுகள் எவையும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

குறித்த நிதிக் கையாடல் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் எம்மால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் அம்பாறை விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் இவ்விடயம் பொறுப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, குறித்த இருவரும் தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், எவ்வாறாயினும் இவர்களைக் கைதுசெய்து, சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கல்முனை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை நான் வலி யுறுத்திக் கேட்டுள்ளேன். அத்துடன், இவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கான பணிப்புரைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் எவர் மீதும் கருணை காட்டப்பட மாட்டாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு, நிதி மோசடியுடன் எவர் சம்பந்தப்பட் டிருந்தாலும் உரிய தண்டனைகள் பெற்றுக்கொடுக் கப்படும் - என்றார்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்போல் நடித்து நிதி மோசடி

***(சாவகச்சேரி நிருபர்)***

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியிலுள்ள கிராமமொன்றில் நேற்று முன்தினம் காலை சமுர்த்தி உத்தியோகத்தர் போன்று பாசாங்கு செய்த நபர் இரண்டு வீடுகளில் நிதி மோசடியில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் கிராமத்திலுள்ள இரண்டு வீடுகளுக்கு சென்ற நபரொருவர் கிராமத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் என தன்னை அறிமுகப்படுத்தி புதிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும், ஒரே தடவையில் இருபதாயிரத்தை செலுத்தி மாதாந்தம் ஐயாயிரம் என்ற உதவித்தொகையை தொடர்ச்சியாக பெறமுடியும் எனவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை நம்பி பெண்ணொருவர் 20 ஆயிரம் ரூபாவையும், மற்றொரு பெண் 15 ஆயிரம் ரூபாவையும் குறித்த நபரிடம் கொடுத்துள்ளனர்.

அதன்பின்னர் சந்தேகமடைந்து சமுர்த்தி உத்தியோகத்தரை தொடர்புகொண்டபோதே தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்துகொண்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.


## வெலிகந்த கிளை
## “புதிய இடத்திற்கு”

**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**
**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன்,**
**2023 பெப்ரவரி 25ஆம் திகதி தொடக்கம் எமது நிறுவனத்தின் வெலிகந்த கிளையானது அதிக இடவசதியுடைய எமது கட்டிடத்தின் புதிய இடத்திற்கு நகர்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**எமது புதிய முகவரி**
**புதிய நகரம், வெலிகந்த**

**தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி,**
**முகாமைத்துவம்,**

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**வெலிகந்த கிளை - தொலைபேசி : 0763036017 / 027 4847142**

COMMERCIAL CREDIT

# ஜனாதிபதியும் முள்வேலி சிறையும்!

அக்கினியான்

“நாடு இன்று எதிர்கொண்டுள்ள யுத்தம் வடகிழக்கு யுத்தத்தைவிட கொடுமையானது, வட கிழக்கு யுத்தத்தில் இனங்கள் பிளவுபட்டன. ஆனால், இந்த யுத்தத்தை அனைத்து இனங்களும் இணைந்து போராட வேண்டியுள்ளது. பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் விடுவோமாயின் இன்றைய பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வி அடைவோம்” நாட்டின் இன்றைய யதார்த்த நிலமையை மிக துல்லியமாக தெரியப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. பாராளுமன்றத்தில் நிகழ்த்திய அக்கிராசன உரையின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

நாடு இன்று பல்முனையில் பல நெருக்கடிகளை சந்தித்து கொண்டிருக்கிறதென்பதை நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கலாம். பொருளாதார நெருக்கடிகள், அரசியல் குழப்பங்கள், இனமுறுகல்கள், நிர்வாக பலவீனங்கள், வெளிநாட்டவர் தலையீடுகள் என எல்லா திசைகளிலுமிருந்து நெருக்கடிகளும், சவால்களும் போர் முனைப்புக்களும், நாட்டை நோக்கி வந்து கொண்டேயிருக்கிறது. இதிலிருந்து மீட்சி பெறுவதென்பது கனவு காணமுடியாத ஆகாய விளக்காகவே தெரிகிறது. நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளிலிருந்து மீட்சி பெறவைக்கக்கூடிய ஒரு அநாதரட்ஷகர் ஒருவர் அவதரிக்கமாட்டாரா? என ஒவ்வொரு குடிமகனும் பிரார்த்திக்கவேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருக்கிறது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் புற்றுநோய்போல் செல்லரிப்பு செய்து கொண்டிருக்கிறது. நிதி அற்ற வங்குரோத்து நிலை இதன் காரணமாக பண்டங்களுக்கான விலையேற்றங்கள், பணவீக்கம், வெளிநாட்டுக்கடன் அதிகரிப்பு, மின் கட்டண அதிகரிப்பு, வரிச்சுமை என பல ஊனப்போரில் நாடு கொதித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறம் அரசியல் பிரச்சினைகள் என்றவகையில் வேட்பு மனு கோரியும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாமல் திண்டாடும் நிலை. “மின் கட்டணத்தை உயர்த்தாதே, வரியை விதிக்காதே, உள்ளூராட்சித் தேர்தலை உடனே நடத்து'' என எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களும் இன்னொருபுறம், “மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்து, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்து, அரசியல் தீர்வை முன் வை'' என்ற வட கிழக்குப்புல போராட்டக்காரர்களின் நடைபவனிகளும், ஆர்ப்பாட்டங்களும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துங்கள். கடன் மறுசீரமைப்பு செய்யுங்கள் என சர்வதேச நாணய நிதியத்தின் நெருக்குவாரங்கள் என ஏகப்பட்ட போர் பிரகடனங்களுக்கு தாக்குப்பிடிக்கமுடியாமல் நாடு மூச்சுத்திணறும் நிலைதான் இன்றைய நிலை. நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பேன். மீண்டுமொரு மறுமலர்ச்சி யுகத்தை உண்டாக்கிக் காட்டுவேன் என்று வீராப்பு பேசிக்கொண்டு சாதாரண கட்சியின் தலைவராக இருந்த தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றுக்குள் நுழைந்த ரணில் விக்கிரம சிங்க என்ற சாதாரண கட்சியின் தலைவன் ஆனை மாலை போட்டதால் மின்னாமல் முழங்காமல் ஜனாதிபதி கதிரையில் ஏறிக்குந்திக்கொண்டார்.

இந்த சந்தர்ப்பம் வரலாற்றில் எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. ஆரூடத்தில் குறிப்பிடுவார்கள் இது குருச்சந்திரயோகமென்று. 75ஆவது சுதந்திரத்தை மிக சிறப்பாக ஆடம்பரமில்லாவிட்டாலும் கொண்டாடியிருக்கிறோம். இந்த 75 வருட காலத்தில் நாடு இத்தகையதொரு நெருக்கடிக்கு முகம்கொடுத்ததாக அறிய முடியவில்லை. சுதந்திரம் கிடைத்த இரண்டொரு வருடங்களிலேயே வட கிழக்கு தமிழர்கள் பிரச்சினை தலைதூக்கத் தொடங்கியது. இதனால் போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புகள், இனக்கலவரங்கள், பகிஷ்கரிப்புகள், அரசியல் ஒப்பந்தங்கள் என ஒன்றின்பின் ஒன்றாக தேசிய தலைமைகள் நாட்டை காக்கவேண்டியிருந்தது.

1983ஆம் ஆண்டுக்குபின் சுமார் 30 வருட யுத்தம் நாட்டின் அடிப்படையையே புரட்டிப்போட்டது. மீண்டும் இனக்கலவரங்கள், போர் அழிப்புகள், இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள் என இறுதியுத்தம். இதனால் காணாமல் போனவர்கள், மனிதவுரிமை மீறல்கள், யுத்த குற்றச்சாட்டுகள், சர்வதேச நெருக்கடிகள், மனிதவுரிமை தீர்மானங்கள், கொரோனா கொடுமைகள், ஆட்சி மாற்றத்துக்கான பேராட்டங்கள், பொருளாதரா நெருக்கடிகள் என்னும் சங்கடங்களை சமாளிக்க முடியாமல் நாடு அல்லோலப்பட்டமையை மறந்து விடமுடியாது. இவ்வாறானதொரு நிலையில்தான் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக நாட்டை தற்போது ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் பொருளாதார யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இன்றைய யதார்த்த நிலையை தனது உரையில் உறைக்கும்படி கூறியிருப்பது கவனத்துக்குரியது மாத்திரமல்ல, கவலைப்படவேண்டிய விடயமும் ஆகும்.

இவற்றை தனித்தனியாக புரிந்துகொள்வது தேசப்பிரஜைகள் ஒவ்வொருவருடைய தார்மீக கடமையாகும். வருமான வரி மீதான அதிகரிப்பு, மின்கட்டண அதிகரிப்பு



உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் அநீதிக்கு எதிராகவும் எதிர்ப்பு தெரிவித்து அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை தொடர்ந்து நடத்திவருகின்றன.

### வரிச்சட்டம்

வரிச்சட்டத்துக்கு எதிராக கடந்த 22ஆம் திகதி 40 துறைகளைச் சேர்ந்த தொழில் வல்லுனர்கள் பங்குபற்றுதலூடாக கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றதன் காரணமாக கொழும்பு மாநகரம் கொலுகொலுத்துப் போனதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது ஒருபுறமிருக்க, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறுகோரி எதிர்க்கட்சிகள் கடந்த 20ஆம் திகதி (20.02.2023) பாராளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக 47 நிமிடங்கள் சபாநாயகர் பாராளுமன்றை ஒத்தி வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினர் பதாதைகளை ஏந்தி தமது எதிர்ப்பைக்காட்டினர். இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நளின் பண்டார, ஜே.சி.அலவத்துவல, துஷார இந்துனில், சமந்த விஜேசிறி தமது கடுமையான எதிர்ப்பை அரசாங்கத்துக்கு காட்ட முற்பட்டனர்.

அரச வருமானங்களில் வரிவருமானம் கணிசமான பங்கை வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக வரி விதிப்பில் ஒரு பொதுத்தன்மையும் நியாயத்தன்மையும் இருக்கவேண்டுமென வரி நிபுணர்கள் கூறுவது வழக்கம். வரிவிதிப்பானது, உற்பத்தியாளர்களை உற்பத்திக்கு தூண்டுவதாகவும் மக்களுக்கு சுமை அற்றதாகவும் இருக்கவேண்டுமென பொருளாதார அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். அவ்வாறு இல்லையாயின், வரிவிதிப்பானது நாட்டின் பொருளாதாரத்தையே நிர்க்கதியாக்கி விடுமென்பது பொதுவான கருத்தாகும்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி முறையானது சாதாரண மக்களையே பாதிக்கும் விடயமாக மாறியிருப்பதனால் மேற்படி வரி விதிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சத்துக்குமேல் மாத வருமானம் பெறுவோர் வரி செலுத்தவேண்டிய கட்டாயம் தற்போது இவ்வரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனால் அரச பணியாளர்கள் மற்றும் தனியார் துறையினர் பெரும்பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள் என்ற காரணத்தைகாட்டி எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது பற்றி உரையாற்றும்போது, வரியை ஒரு இலட்சத்துக்கு என்று கொள்ளலாம் இரண்டு இலட்சத்துக்கு உயர்த்தும்படி வேண்டினார்கள். ஆனால், அதை என்னால் நிறைவேற்றமுடியவில்லை என்று பகிரங்கப்படுத்தியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறுகோரியும் கடந்த 20ஆம் திகதி கொழும்பில் பொதுவெளியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

### உள்ளூராட்சித் தேர்தல்

இலங்கை ஜனநாயக அரசியலில் ஆரம்ப ஆட்சி அமைப்பாக கருதப்படுவது உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆகும். அந்த வகையில், இலங்கையிலுள்ள சுமார் 340 உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தும் அதிகாரத்துடன் நாடு பூராகவும் வேட்பு மனுக்கள் கோரப்பட்டு திகதி அறிவிக்கப்பட்டதன் பின் தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்ற காரணம் காட்டப்பட்டு முதல் கட்டமாக தபால்மூல வாக்கெடுப்பு காலவரையறையின்றி தேசிய தேர்தல் ஆணைக்குழுவால் தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது ஜனநாயகத்துக்கு செய்யும் துரோகமென குற்றம் சுமத்தி எதிர்த்தரப்பினர் ஆளுக்கு ஆள் ஒவ்வொரு பக்கமாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். திறைசேரி தேர்தலுக்கான நிதியை ஒதுக்கி தரவில்லை. அரச தரப்பினர் தேர்தலை நடத்த ஒத்துழைப்பு தருகிறார்களில்லை. எனவே, எதிர்வரும் 9ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கான காரணம், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை கருத்தில்கொண்டு தேர்தல் நடத்துவதற்கு தடை விதிக்கும்படி ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி கேர்ணல் விஜயசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுமீது நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்தே தேர்தல் திணைக்களம் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது. ஏலவே, தேர்தலை உரிய நேரத்தில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடுமாறுகோரி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர்நீதிமன்றில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த மனுவை நீதிமன்று விசாரணை செய்ய எடுத்தபோது தேர்தல் திணைக்களம் உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது என தெரிவித்ததன் காரணமாக மேற்படி இரு மனுக்களையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில் கேர்ணல் விஜய சுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை இம்மாதம் 23ஆம் திகதி விசாரணக்கு எடுத்துக்கொள்வதாக உயர் நீதிமன்றம் அறிவித்திருந்த நிலையில்தான் தபால்மூல வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டதும் உரிய நேரத்தில் நடத்த முடியவில்லை என தேர்தல் திணைக்களம் உயர்நீதிமன்றுக்கு அறிவித்து நிதி விடுக்காமை நிலமை தொடர்பில் விளக்கமளித்த சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. இவ்வாறான நிலையில்தான், தேர்தலை நடத்தும்படி ஆர்ப்பாட்டங்களை எதிர்க்கட்சியினர் அடுக்கடுக்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலமையில் தான் ஜனாதிபதி நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை எடுத்துக்கூறும் வகையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் திகதி குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும். ஆனால், பிரதம நீதியரசர் உட்பட சகல நீதியரசர்களும் ஒன்றாக அமர்ந்தாலும்கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை நீதிமன்றில் தீர்க்கக்கூடியவொன்றல்ல என்ற நிலமையை தெரிவித்ததன் மூலம் இரண்டு விடயங்களை சூசகமாக தெரிவித்திருக்கிறார். தேர்தலை தற்போது நடத்தக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதார நிதியில்லை. மற்றையது தேர்தலை ஒத்திவைப்பதைத்தவிர மாற்றுவழி தற்போதைக்கு இல்லை என்ற தனது முடிவை மறைமுகமாக தெரிவித்திருப்பதால் தேர்தல் தற்போதைக்கு நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்பது தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலமையை எதிர்த்தரப்பினர் இப்படி விமர்சிக்கப்பார்க்கிறார்கள். ஜனாதிபதியும் அவருக்கு அனுசரணையாக நின்றுகொண்டிருக்கும் பொதுஜன பெரமுனவும் இந்த தேர்தலில் தாம் வெற்றிபெற வாய்ப்பில்லை என்ற சூழ்நிலை தளம்பல் காரணமாக தேர்தலை நடத்துவதற்கு தயங்குகிறார்கள் என்று நேரடியாகவே ஜனாதிபதியை நாடிக்கொண்டிருக்கிறார்கள். இதேநேரம் கடந்த 20ஆம் திகதி தொடக்கம் பாராளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைக்கு வந்திருப்பதனால் ஜனாதிபதி இந்த தேர்தலையும் நடத்தப்போதில்லை. காரணம் ஜனாதிபதி தன்னை சுதாகரிக்கும்மட்டும் அது நடைபெறப்போவதில்லை. குறிப்பாக, ரணில் பதவியிலிருக்கும் வரை எந்த தேர்தலும் நடைபெறப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியினர் கடுமையாக சாடிவருகிறார்கள்.

இந்த நிலையை புரிந்துகொண்டே அரச தரப்பிலிருந்து நிதி மற்றும் ஏனைய வசதிகள் கிடைப்பதில் தாமதங்கள் காணப்படுவதால் திட்டமிட்ட வகையில் தேர்தலை நடத்துவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழு உயர்நீதிமன்றுக்கு அறிவித்திருப்பதன் காரணமாக தேர்தல் நடைபெறப்போவதில்லை என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இதை உறுதிப்படுத்தியுள்ள முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. அதனை தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டியது மாத்திரமே எஞ்சியுள்ளது என உறுதிப்படுத்தியுள்ளார்.

### மின்கட்டண அதிகரிப்பும் மக்கள் ஆர்ப்பாட்டங்களும்

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மின்கட்டண அதிகரிப்பானது உற்பத்தி நிறுவனங்கள், வியாபார தலங்கள், சாதாரண பொது மக்களை அதிகளவில் பாதித்து வருகிறதென்பதை நாளாந்த போராட்டங்கள் மூலம் தெரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. சர்வதேச நாணய நிதியைப்பெறும் நோக்கில் அதன் நிபந்தனைக்கு அமைய, மேற்படி மின்கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கம் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு மின்பாவனையாளர்களால் முன்வைக்கப்பட்டு வருகிறது.

ஏலவே 2021, 2022 ஆகிய காலப்பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அடிக்கடி மின்கட்டணங்களை உயர்த்தி வந்த அரசாங்கம் தற்போது நிதியளிப்பு நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய கடந்த ஆண்டு 75வீதத்தாலும் தற்போது மீண்டும் 66 வீதத்தால் மின் கட்டணத்தை அதிகரித்ததன் காரணமாக சுமார் 17 இலட்சத்துக்கு மேற்பட்ட மின்பாவனையாளர்கள் குறிப்பாக தாழ்மட்ட வருமானம் பெறுவோர் பெரிதும் பாதிக்கப்படுவதோடு பண்டங்களின் விலைகள் விஷம்போல் உயர்வதனாலும் உணவுப்பொருட்களின் விலைகள் மின்னாமல் முழங்காமல் உயர்த்தப்படுவதனாலும் பல வீழ்ச்சிகளை சந்தித்து வருகிறார்கள். இதற்கு காரணம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை எதிர்பார்த்து அரசு செயற்படுகிறது. மேற்படி கடனை வழங்க நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனையே என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இதன் காரணமாகவே மக்கள் வீதிக்கிறங்கி போராட்டம் நடத்தவேண்டிய அவலத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

### மறுசீரமைப்பு என்னும் மாய மந்திரம்

இலங்கையின் நிதி நெருக்கடியை போக்குவதற்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக தருவதாக சர்வதேச நாணய நிதியம் உடன்பட்டிருந்தபோதும் அரசாங்கத்தின் தொடர் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் மேற்படி கடன் உதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடுமையான நிபந்தனைகளை விதித்திருப்பதை கேட்டறியக்கூடியதாகவுள்ளது. இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளான ஜப்பான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் கதைத்து கடன் மறுசீரமைப்பு செய்யும்படி நிபந்தனை விதித்ததற்கமைய இலங்கை அரசாங்கம் மேற்படி நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உடன்பாட்டுக்கு வந்திருந்தன.

இங்கு மறுசீரமைப்பு என்பது என்னவென்று பார்ப்பின், இலங்கை தனக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பெற்றுக்கொண்ட கடன் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தி மேற்படி கடன்களை எவ்வாறு மீளச்செலுத்துவது எக்காலப்பகுதிக்குள் செலுத்தப்படவேண்டும் என்ற கால நிர்ணயத்தை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்குவதை அது குறிக்கும். இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் தொடர்பான அல்லது நிதியியல் உதவி தொடர்பான பேச்சுவார்த்தையை ஆரம்பித்தபோது இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் என்பவை கடன் மறுசீரமைப்பு செய்வதற்கு தாம் உடன்படுவதாக தெரிவித்த நிலையில் சீனா மட்டும் இந்த விவகாரத்துக்கு பின்னடிப்பு செய்தது. இதனால் நாணய நிதியத்திடம் உதவியை பெறுவதில் பல சவால்கள் ஏற்பட்டன. அண்மைக்காலத்தில் இலங்கைக்கு சீனா வழங்கிய கடன்கள் அதிகமாக காணப்பட்ட நிலையில் இந்த பின்னடிப்பு இலங்கைக்கு பாரிய சவாலாக அமைந்தது. இலங்கை சீனாவிடமிருந்து பெற்றுள்ள கடன்களை மீளச்செலுத்துவதில் இரண்டு வருட கால அவகாசம் வழங்குவதாக சீன அறிவித்திருப்பதாக ஒரு தகவல் வெளிவந்திருந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியம் சீனா இலங்கைக்கு நிதியியல் உத்தரவாதத்தை வழங்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கையினால் நிதியத்திடமிருந்து கடன் உதவியை பெற்றுக்கொள்ளமுடியும் என நிதியம் அறிவித்தபோதும் சர்வதேச அரசியல் முரண்பாடுகள் காரணமாக சீனா உத்தரவாதம் வழங்குவதில் ஏற்படுத்திவரும் இழுத்தடிப்புக்கள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை பெற்றுக் கொள்வதில் காலதாமதங்களும், இழுத்தடிப்புகளும் இடம்பெற்றுவருவதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை பல சவால்களை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது.

### தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுப்பிரச்சினை

“இரா.சம்பந்தனும் நானும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டோம். எங்கள் இருவருக்கும் பொதுவான ஒரு கனவுண்டு. நாம் இருவரும் பாராளுமன்றில் இருக்கும்போதே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை காணவேண்டுமென்று முயன்று வருகிறோம். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகிறோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடைய செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்” இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும். இந்த கனவின் வெளிப்பாடாகவே ஒற்றை ஆட்சிக்குள் அதிகபட்ச அதிகாரப்பகிர்வே சிறந்த தீர்வு என்று விளம்பியதுடன் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என அடித்துக்கூறியிருந்தார். அதன் மறுதலிப்பாக இடம்பெற்றதென்ன 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது என்று நான்கு பௌத்த பீடங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ள நிலையில், 13ஆவது திருத்தத்துக்கு எதிராக தெற்கில் பௌத்த பிக்குகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தேரர்களின் எதிர்ப்பை அடுத்து 13 திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்று கருத்துகளை வெளியிட்டிருந்த சிங்களத் தலைமைகள் சிலர் தமது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கும் நிலையே ஏற்பட்டுள்ளது.

இவ்வகை சூழ்நிலைகள் என்று கருதப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகள், அரசியல் கொந்தளிப்புகள், எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள், நிர்வாக பலவீனங்கள், இன நெருக்கடிகள் என்ற எல்லா திசையும் சுற்றிவளைக்கப்பட்டிருக்கும் முள்வேலி சிறைக்குள் அகப்பட்டுப்போய் கிடக்கும் ஜனாதிபதி, இவற்றை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார், மேற்படி சவால்களை முறையடித்து நாட்டை மீட்டுத்தரப்போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# தமிழரை கடவுள்தான் காப்பாற்றவேண்டுமென கூறி தந்தை செல்வா இறக்கவில்லை!

தந்தை செல்வா 1977, ஏப்ரல் 26இல் தமிழீழ கனவுடனே இறந்தார். அவர் இறப்பதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் 1970ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலத்தில்தான், தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் எனக் கூறினார். இதனை திரிபுபடுத்தி சிலர் தந்தை செல்வா இறக்கும்போது இதனைக் கூறிவிட்டு இறந்ததாகக் கூறுவது பச்சைப்பொய்.

இலங்கை தமிழரசுக் கட்சி 1949, டிசம்பர் 18இல் தந்தை செல்வாவால் ஆரம்பம்...

1949இல் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள்.

கல்லோயாத் திட்டம் மூலம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மாத்தறை, அம்பாந்தோட்டை பகுதி சிங்களவர்கள் குடியேற்றத் திட்டங்கள் 44 உருவாக்கப்பட்டது.

அதில் 38 சிங்களவருக்கும், தமிழருக்கு 06 மட்டுமே வழங்கப்பட்டன.

இதனை தமிழரசுக் கட்சி எதிர்த்துக் குரல் கொடுத்தது.

1956இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தனிச்சிங்களச் சட்டம் 24 மணிநேரத்தில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியது.

1957இல் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்.

1957, ஜூலை 26இல் பண்டா - செல்வா ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தில் எழுதப்பட்டவை.

1) வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்.

2) சிறுபான்மை மக்களின் தேசிய மொழியாக தமிழ்மொழி அங்கீகரிக்கப்படவேண்டும்.

3) வடக்கு, கிழக்கில் தமிழ்மொழி மாகாண மொழியாக நிர்வாகம் செய்யவேண்டும்.

4) நாட்டில் எப்பாகத்திலும் தமிழ்மக்கள் தமது கருமங்களை தமிழில் ஆற்றவும், தமது பிள்ளைகளுக்கு தமிழில் கல்வி பயிலவும், தமிழ் பண்பாட்டை வளர்க்கவும் உரிமை பாதுகாக்க வேண்டும்.

5) பிரதேச சபை சட்டத்தின் ஊடாக பெருமளவு பிரதேசங்கள் அங்குள்ள மக்களுக்கு வழங்கவேண்டும்.

இதுதான் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் சுருக்கம்.

ஆனால், இந்த ஒப்பந்தம் பண்டாரநாயக்கா வடக்கு, கிழக்கை தமிழருக்கு விற்றுவிட்டார் என ஜே.ஆர்.ஜெயவர்தனா கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பாதயாத்திரை செய்து பௌத்த பிக்குகளும் இணைந்து இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தனர்.

1958இல் சிங்கள, தமிழ் கலவரம் ஆரம்பம்.

நாடுமுழுவதும் கலவரம்,

துறைநீலாவணையில் சிங்களக் குண்டர்கள் மற்றும் படையினருக்கு எதிராக துறைநீலாவணையில் மோதல். சிங்களக் குண்டர்கள் பின்னோக்கி ஓடினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தடைசெய்யப்பட்டு தந்தை செல்வா உட்பட பலர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

1960, மார்ச் 21, பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 19 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளில் அமோக வெற்றிபெறுகிறது.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைவிட நான்கு தொகுதிகளில் அதிக ஆசனங்களைப் பெற்றதால் இலங்கை தமிழரசுக் கட்சியை தமக்கு ஆதரவு தருமாறு கோரியது.

தமிழரசுக் கட்சி ஆதரவு தருவதானால் 4 கோரிக்கையை நிபந்தனையாக வைத்தது.

1) பண்டா - செல்வா ஒப்பந்தம் செயல்படுத்தப்பட வேண்டும்.

2) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்.

3) இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட காலக்கெடு திகதி நீக்கப்பட்டு இரண்டு தலைமுறையாக நாட்டில் பிறந்த அனைவருக்கும் குடியுரிமை வழங்குவதுடன், நாடற்ற தமிழர் என்ற வார்த்தை முழுமையாக நீக்கப்படவேண்டும்.

4) குடியுரிமைப் பிரச்சினை தீரும்வரை பாராளுமன்றத்தில் ஆறு நியமனப் பிரதிநிதிகளில் நான்கு பேர் மலையக மக்களின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி இந்த நிபந்தனைகளை ஏற்கவில்லை. ஆட்சி நிலையற்றதால் பாராளுமன்றம் கலைக்கப்படுகிறது.

1960, ஜூலை 21இல் மீண்டும் தேர்தல். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கிறது.

1961, ஜனவரி 01இல் வடக்கு, கிழக்கு எங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஒத்துழையாமை போராட்டம் ஆரம்பம்.

1961, பெப்ரவரியில் சத்தியாக்கிரகப் போராட்டம்.

1961, ஏப்ரல் 14இல் தமிழரசு தபால்சேவை போராட்டம்.

இந்தப் போராட்டத்தில் தபால் மா அதிபராக செனட்டர் நடராசா நியமிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு முழுவதும் போராட்டம் இடம்பெற்றது.

இதனை தடுக்க இலங்கை அரசு 1961, ஏப்ரல் 17இல் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி 48 மணிநேர ஊரடங்கு சட்டம் அமுலாக்கி திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம் உட்பட 74 பேரை கைதுசெய்து பனாகொடை முகாமில் தடுத்துவைப்பு.

சுதந்திரன் பத்திரிகை தடைசெய்யப்பட்டது

மலையகத் தலைவர் தொண்டமான் யாழ்ப்பாணம் சென்று சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குகிறார். இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

தோட்டத்தொழிலை அத்தியாவசியமாக்கும் சட்டம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

1961, ஏப்ரல் 25இல் இந்த சட்டத்தை எதிர்த்து ஐந்து இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள் வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

1963இல் சிங்களத் திணிப்பை எதிர்த்து கருமங்களை தமிழில் ஆற்றத்தூண்டும் "எல்லாம் தமிழ் இயக்கம்" எனும் பெயரில் தமிழரசுக் கட்சியால் ஒரு போராட்டம் முன்எடுக்கப்படுகிறது.

1964, ஜனவரி 01 முதல் வடக்கு, கிழக்கில் தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்படுத்தப்போவதாக அரசு அறிவிப்பு.

இதனால் 2000, சிங்கள ஆசிரியர்களை வடக்கு, கிழக்கில் அனுப்ப அரசு அறிவிக்கின்றது.

இதனை எதிர்த்து மாணவர்கள், பெற்றோர், தமிழரசுக் கட்சி பகிஷ்கரிப்பு போராட்டம். மாபெரும் கண்டனப் பேரணி வடக்கு, கிழக்கில்.

1964, சாதி ஒழிப்புப் போராட்டம் சமத்துவம் தேவை என தமிழரசுக் கட்சி விழிப்புணர்வுப்போராட்டம்.

1964இல் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்.

இந்திய வம்சாவழி மக்களை இந்தியாவுக்கு திருப்பியனுப்பும் ஒப்பந்தம். இதனை தமிழரசுக் கட்சி எதிர்த்தது.

1965, மார்ச் 24இல் டட்லி - செல்வா ஒப்பந்தம்.

மாவட்ட சபைகள் கட்டமைப்பு வழங்கப்பட்டது.

காணி அதிகாரங்கள் வழங்கப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெறும்போது முதலில் அந்த மாவட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னரே மிகுதி இருந்தால் வெளிமாவட்ட மக்களுக்கு வழங்கலாம் என ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், அது செயற்படுத்தப்படவில்லை

1968இல் மீண்டும் கிழக்கு மாகாணம் திருகோணமலையில் கித்துள் ஊற்று எனும் இடத்தில் ஒரு சிறுகுளம் அமைக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட திட்டம் தீட்டப்பட்டபோது அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சி தடுத்து தமிழ் இளைஞர்களை அங்கு குடியேற்றியது,

இதனை சிங்கள உதவி அரச அதிபரைக்கொண்டு தமிழ் இளைஞர்களுடைய வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

1969இல் மாவட்ட சபை பற்றிய பிரேரணை பாராளுமன்றத்தில்

இதன் சட்டமூலத்தை மு.திருச்செல்வத்தினால் தயாரித்து ஐக்கிய தேசிய கட்சியிலும், இலங்கை தமிழரசுக் கட்சியும் ஆராயப்பட்டு இதன் வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திகதி ஒதுக்கிய சந்தர்ப்பத்தில் இதற்கு எதிராக பௌத்தபிக்குகள், சிங்கள கடும்போக்கு ஊடகவியலாளர்கள், சிங்கள - பௌத்த அமைப்புகள் தீவிர எதிர்பிரசாரங்களை முன்னெடுத்தனர்.

இதனால் பிரதமர் டட்லி சேனநாயக்கா பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை கொண்டுவரமாட்டேன் என பின்வாங்கினார்.

இந்நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சி மீண்டும் ஏமாந்து திருகோணமலையில் தமிழ் பல்கலைக்கழகம் அமைக்கவும், திருக்கோணேசர் ஆலய சூழலை புனிதப் பிரதேசமாக மாற்றவும் தீர்மானம் நிறைவேற்றி இதற்கான முயற்சிகளை எடுத்தபோது இது சிங்கள நாடு என கூறி டட்லி சேனநாயக்கா அதனை எதிர்த்தார்,

1970, பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன 116 ஆசனங்களுடன் ஆட்சியமைத்து தரப்படுத்தல் முறை ஏற்பாடுகள் இடம்பெற்றன.

தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசம் பாதிப்பு ஏற்படும் நிலையால் தமிழ் மாணவர்கள் வடக்கு, கிழக்கில் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்த நேரத்தில்தான் 1970இல் தந்தை செல்வா தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் எனக் கூறினார்.

1971இல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தரப்படுத்தல் முறை அறிமுகமானது. இதனை எதிர்த்து "தமிழ் மாணவர் பேரவை" தோற்றம் பெற்றது.

1972, மே 22, தேசிய குடியரசு நாடு எனும் புதிய அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றம். இதனை இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்த்துக் குரல் கொடுத்தது.

அதே 1972, ஜூன் மாதம் தமிழர் கூட்டணி என்ற அமைப்பு அரசியல் கட்சிகள், தொழில்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், கட்சிசார்பற்ற பொதுவான பிரமுகர்கள் ஒன்றிணைத்து முதலாவது குடியரசு தின பகிஷ்கரிப்புக்கு எதிராக சாத்வீகப் போராட்டங்களை வடக்கு, கிழக்கில் முன்னெடுத்தனர்.

தமிழ் மாணவர் பேரவை தேசிய கொடி எரிப்பு, பஸ் எரிப்பு, கறுப்புக்கொடி போராட்டங்களை முன்னெடுத்தனர்,

இதே ஆண்டு 1972இல் யாழ்ப்பாணம், உரும்பராய் இந்துக்கல்லூரிக்கு வருகைதந்த பிரதி அமைச்சர் சோமச்சந்திரசிறி என்பவரின் காருக்கு சிவகுமாரன் என்ற மாணவன் குண்டு வீசியபோது அவர் மயிரிழையில் தப்பினார்.

இதன் எதிரொலியாக வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசா சுடப்பட்டபோது அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்,

தமிழர் கூட்டணி ஆறு அம்சக் கோரிக்கையை தயாரித்து தந்தை செல்வா, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு வழங்கினார்.

அந்த ஆறு அம்சக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டவை.

1) அரசியலமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமை தமிழ் மொழிக்கும் வழங்கப்பட வேண்டும்.

2) இலங்கை மத சார்பற்ற நாடாக ஏற்று சகல மதங்களையும் சமமாக பேணவேண்டும்.

3) நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஏற்று பூரண குடியுரிமை வழங்கும் வகையில் குடியுரிமைச் சட்டம் அரசியல் யாப்பில் இடம்பெறவேண்டும்.

4) நீதிமன்றம் மூலம் நிலைநாட்டக்கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டும்.

5) சாதியையும், பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பதையும் அரசியல் யாப்பு மூலமாக ஒழித்தல் வேண்டும்.

6) அதிகாரம் பரவாலக்கப்பட்டு மக்கள் பங்குகொள்ளும் ஜனநாயக ஆட்சியமைப்பு ஏற்படுத்தல் வேண்டும்.

இந்த மகஜர் தந்தை செல்வாவால் பிரதமர் சிறிமாவோவிடம் நேரடியாக கையிளிக்கப்பட்டது. ஆயினும் இதனை அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை.

1973இல் தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பு தோற்றம் பெற்றது.

1974இல் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974ஆம் ஆண்டு ஜனவரி 3 இலிருந்து ஜனவரி 10 வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டு வரிசையை ஆரம்பித்து வைத்திருந்தவரான அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுநர் வண. சேவியர் தனிநாயகம் அடிகளாரால் நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மாநாட்டு ஊர்தியில் பண்டார வன்னியன் வேடம் போட்டு சிவகுமாரன் என்ற இளைஞன் அலங்கார ஊர்தியில் வருகைதந்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974இல் மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் பதினொரு பேர் இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியாகினர்.

அதன்பின்னர் சிவகுமாரன் தலைமறைவாகின்றார். சிவகுமாரனை காட்டிக்கொடுப்பவருக்கு பத்தாயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என யாழ்ப்பாணத்தில் பொலிஸார் அறிவிக்கின்றனர்.

1974, ஜூன் 5இல் யாழ்ப்பாணம் உரும்பிராயில் பொலிஸார் சுற்றிவளைத்து சிவகுமாரனை கைதுசெய்ய முற்பட்ட வேளையில் சயனைட் நஞ்சருந்தி மரணமடைந்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் முதன்முதலில் நஞ்சு அருந்தி உயிர் நீத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1974இல் தியாகி பொன். சிவகுமாரனின் மரணத்தின் பின்னர் தமிழ் புதிய புலிகள் என்ற அமைப்பை வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற இளைஞர் ஆரம்பிக்கின்றார்.

1976, மே 05இல் புதிய புலிகள் என்ற விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என பெயர் மாற்றம் பெற்று கரந்தடித் தாக்குதல்களில் ஈடுபடுகின்றது.

1976, மே 14,ல் தமிழர் கூட்டணி என்ற பெயரை மாற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் பெயரில் தந்தை செல்வா யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையிலிருந்து மாறி ஈழத் தமிழர்களுக்காக ஈழத் தந்தை எனப்படும் செல்வநாயகம் தலைமையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றிணைந்து வட்டுக்கோட்டை எனும் தொகுதியில் வழகம்பரை அம்மன் கோவில் அருகில் மிகப் பிரம்மாண்ட அரங்கில் பிரகடனம் செய்தனர்.

1. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.

2. அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும்.

3. அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புகளோடு நாம் முன்னெடுக்க வேண்டும்

இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்னிறுத்தி 1977, ஜூலை 21ஆம் திகதி வடக்கு, கிழக்கில் 23 தேர்தல் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தியது. மூன்று முஸ்லிம் தொகுதிகளும், மட்டக்களப்பு கல்குடாத் தொகுதியும் தவிர்ந்த 19 தமிழ் தொகுதிகளில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு தமிழ் மக்களின் பூரண அங்கீகாரம் கிடைத்தது.

இந்த பொதுத் தேர்தல் 1977, ஜூலை 21இல் இடம்பெறுவதற்கு சரியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் 1977, ஏப்ரல் 26இல் தந்தை செல்வா இயற்கை மரணமானார்.




தந்தை செல்வா இறக்கும்போது அவர் சமஷ்டிக் கொள்கையுடனோ, தமிழரை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என கூறிவிட்டோ இறக்கவில்லை. வட்டுக்கோட்டை தீர்மானமான தமிழீழக் கனவுடனேயே தந்தை செல்வா இறந்தார் என்ற உண்மையை புரிவது எல்லோரினதும் கடமை.

1978, ஏப்ரல் 25இல் தமிழீழ விடுதலைப் புலிகளால் உத்தியோகபூர்வமாக தாம் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது அதில் 11 நடவடிக்கை தாக்குதல்களை குறிப்பிட்டு, காசி ஆனந்தன் எழுதிய "பத்துத்தடவை பாடை வராது பதுங்கி கிடக்கும் புலியே தமிழா" எனும் கவிதையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் மத்தியில் தமிழ் உணர்வும், தமிழ் எழுச்சியும் மேலோங்கி இருந்தமையால் 36, தமிழ் ஆயுத விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

1979இல் போராட்ட இயக்கங்களை அடக்க பயங்கரவாதத் தடைச்சட்டம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் நீதி அமைச்சர் பதவி பெற்ற கே.டபிள்யூ. தேவநாயகத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியாக செயல்பட்டபோதும் தமிழ் தேசிய கூட்டமைப்பு 2001, ஒக்டோபர் 20இல் உருவாக்கப்பட்டு 2001, டிசம்பர் 06இல் இடம்பெற்ற பொதுத்தேர்தல் வரை மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல்பாடுகள் இடம்பெற்றபோதும் அதன்பின்னர் 2004, பெப்ரவரி 10ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ தேர்தல் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், தேர்தல் சின்னமாக வீட்டையும் பயன்படுத்துமாறு கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் தலைமை பணித்தமையால் இன்றுவரையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி செயல்பட்டு வருவது கண்கூடு.

1949, டிசம்பர் 18இல் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அர்ப்பணிப்பான செயல்பாடுகளால்தான் 73 வருடங்கள் கடந்தும் தமிழ்த் தேசிய அரசியலுக்காக இன்று பல பெயர்களில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், பலருக்கு அரசியல் முகவரிகளும் கொடுத்துள்ளது என்ற உண்மையை அனைவரும் புரிதல் நல்லது.



பா.அரியநேத்திரன்



# மின்கட்டண அதிகரிப்பால் இருளில் மூழ்கும் மக்கள்

**ஜோசப் நயன்**

கொழும்பில் நீண்ட காலங்களாக பல இலட்சரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தாத முன்னாள் அமைச்சரின் வீடொன்றில் மின் துண்டிப்பை மேற்கொள்ளச் சென்ற மின்சார சபை ஊழியரின் கழுத்தை நெரித்து வெளியே தள்ளிய முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவம் ஒன்று கொழும்பில் இடம்பெற்றிருந்தது

ஆனாலும் மன்னார் மாவட்டத்தில் சில ஆயிரம் ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தாத 16 ஆயிரத்து 707இற்கும் அதிகளவான குடும்பங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 8,151 குடும்பங்கள் தற்போதுவரை மீள் மின்சாரம் பெறமுடியாமல் இருளில் வாழ்ந்து வருகின்றன. நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தை எட்டியுள்ள நிலையில், மின் கட்டணங்களும் சடுதியாக அதிகரித்துள்ளன.

அதேநேரம் மின் கட்டணத்தை மீண்டும் உயர்த்துவதற்கான அனுமதியை அண்மையில் அமைச்சரவை வழங்கியிருந்த நிலையில், பலதரப்பட்ட எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்களுக்கு மத்தியில் இம் மாதம் முதல் மின்கட்டணம் 20-70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. மின்கட்டணத்தை உயர்த்தாவிட்டால் தினமும் 6 மணிநேர மின்வெட்டை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுமென முன்னதாகவே மின்வலு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் மன்னாரில் பழைய முறையிலான மின் கட்டணத்தின் பிரகாரமே மின் கட்டணக் கொடுப்பனவுகளை செலுத்த முடியாத நிலையில் கடந்த நான்கு வருடங்களில் 16,707 குடும்பங்களுக்கான மின் இணைப்பை இலங்கை மின்சார சபை துண்டித்துள்ளது

இவ்வாறாக துண்டிக்கப்பட்ட 16,707 குடும்பங்களில் வெறுமனே 8,556 குடும்பங்கள் மாத்திரமே மின்சாரக் கட்டணத்தையும் மீள் இணைப்புக்கான தண்டப்பணத்தையும் செலுத்தி மீண்டும் மின் இணைப்பைப் பெற்றுள்ளன. மிகுதி 8,151 குடும்பங்களும் மின் கட்டணத்தையும் செலுத்த முடியாமல் மின்கட்டண மீள் இணைப்பு தண்டப்பணத்தையும் செலுத்த முடியாத நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் இருளில் வாழ்ந்து வருகின்றன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவுகளையும் அதேநேரம், பழைய முறையிலான மின்கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலையில் மன்னார் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் 22,725 சமுர்த்தி நிதி உதவி பெறுகின்ற குடும்பங்களும் 7,568 சமுர்த்திக்காக காத்திருக்கும் குடும்பங்களும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் மின் துண்டிப்பு என்பது இக்குடும்பங்களை பெரிதும் பாதித்துள்ளதுடன், புதிய கட்டணமுறை இவர்களையும் இவர்களை சார்ந்துள்ளவர்களையும் மிகவும் நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது.

அத்துடன், பாவனையாளர்கள் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் மின் துண்டிப்பு இடம்பெறுகின்ற அதேநேரம், குறித்த மின் இணைப்பை மீள் பெறுவதற்கான கட்டணத்தையும் சடுதியாக அதிகரித்துள்ளது இலங்கை மின்சார சபை. அதன் பிரகாரம் மீள் இணைப்புக்கு 2019, 2020ஆம் ஆண்டுகளில் 1,250 ரூபா தண்டப்பணமாக அறவிட்ட நிலையில்,





Table 1

| | No of Disconnections | No of Reconnection | Reconnection charge | Paid by Consumer |
|---|---|---|---|---|
| 2019 | 9,673 | 5,943 | 1,250 | 7,428,750 |
| 2020 | 1,871 | 1,070 | 1,250 | 1,337,500 |
| 2021 | 1,637 | 371 | 3,000 | 1,113,000 |
| 2022 | 3,526 | 1,172 | 3,000 | 3,516,000 |

தற்போது பாவனையாளர்களின் சுமையை மேலும் அதிகரிக்கும் விதமாக 2021, 2022ஆம் ஆண்டுகளில் மீள் இணைப்புக்கான கட்டணத்தை 3,000 ரூபாவாக அதிகரித்துள்ளது இலங்கை மின்சார சபை.

இலங்கை மின்சார சபையிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக கோரப்பட்ட தகவலின் பிரகாரம்

2019ஆம் ஆண்டு மன்னார் மின்சார சபை எல்லைக்குள் 9,673 மின் பாவனையாளர்களின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும்,

2020ஆம் ஆண்டு 1,871 மின் பாவனையாளர்களின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும்,

2021ஆம் ஆண்டு 1637 மின்பாவனையாளர்களின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும்,

2022ஆம் ஆண்டுமுதல் 10 மாதம் வரையிலான தரவின் பிரகாரம் 3,526 மின்பாவனையாளர்களின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும் இலங்கை மின்சார சபை தகவல் வழங்கியுள்ளது.

குறிப்பாக, கொரோனா காலப்பகுதி உட்பட்ட பொருளாதர நெருக்கடி நிலையிலும் தொடர்ச்சியாக இலங்கை மின்சார சபையினரால் மின் இணைப்பு துண்டிப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளமை குறித்த தரவுகள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாறான துண்டிப்புகளின் பின்னர் 2019ஆம் ஆண்டு 1,250 ரூபா தண்டப்பணத்துடன் மின் கட்டண நிலுவையையும் செலுத்தி 5,943 குடும்பங்கள் மாத்திரமே மீள் இணைப்பைப் பெற்றுள்ளதாக மின்சார சபை தெரிவிக்கின்றது.

மேலும் 2020ஆம் ஆண்டு 1,250 ரூபா தண்டப்பணத்துடன் மின் கட்டண நிலுவையையும் செலுத்தி 1,070 குடும்பங்கள் மாத்திரமே மீள் இணைப்பைப் பெற்றுள்ளன.


2021ஆம் ஆண்டு 3000 ரூபா தண்டப்பணத்துடன் மின்கட்டண நிலுவையை செலுத்தி 371 குடும்பங்களும், 2022ஆம் ஆண்டு 1,172 குடும்பங்களுமே மீள் இணைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளன.

இவ்வாறான மிக நெருக்கடியான காலப் பகுதியை பயன்படுத்தி இலங்கை மின்சார சபை மன்னார் மின் பாவனையாளர்களிடம் மீள் இணைப்புக்கான தண்டப்பணமாக மாத்திரம் சுமார் ஒருகோடியே முப்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா (1,33,95,250 ரூபா) வசூலித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

ஏற்கனவே மின்சாரக் கட்டணங்களையே செலுத்த முடியாத நிலையில் தவித்த பல ஆயிரக்கணக்கான மக்களிடம் தண்டப்பணம் என்ற அடிப்படையில் மேலதிகமாக கட்டணங்கள் இலங்கை மின்சார சபையால் வசூலிக்கப் பட்டுள்ளமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதிலும் குறிப்பாக, 2019ஆம் ஆண்டு அதிகளவாக 9,673 துண்டிப்புகளை மேற்கொண்டு அதில் 5,943 மீள் மின்சார இணைப்பின் ஊடாக எழுபத்து நான்கு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (74,28,750 ரூபா) 2022 முதல் பத்து மாதங்களில் மாத்திரம் 3,526 மின் துண்டிப்பு'களை மேற்கொண்டு அதில் 1,172 மீள் இணைப்புகளை வழங்கி முப்பத்தைந்து இலட்சத்து பதினாறாயிரம் ரூபா (35,16,000 ரூபா) வருமானமாகவும் இலங்கை மின்சார சபை பெற்றுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இம்மாதம் மேற்கொள்ளப்படவுள்ள புதிய மின்சாரக் கட்டணத்தின் பிரகாரம் மின்கட்டணங்கள் 20% தொடக்கம் 70% உயர்த்தப்படும்போது 30 யுனிட் மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களின் மின் கட்டணம் 1,500 ரூபாவை தாண்டுவதோடு,100 யுனிட் பயன்படுத்துபவர் களின் மின்கட்டணம் 8,000 ரூபாவுக்கு மேல் உயரப்போகிறது.




Infromation on Thambapavani Wind Power Plant ( 103.5MW )

X 1000 / 24 × 30

| Year | Month | Proposed (GWh) | Actual Generated (GWh) | Amount Spent Fixed O & M (LKR) |
|---|---|---|---|---|
| 2021 | Jan-21 | | | |
| | Feb-21 | | | |
| | Mar-21 | | | |
| | Apr-21 | | | |
| | May-21 | | 36.70 | |
| | Jun-21 | | 53.07 | |
| | Jul-21 | 39.30 | 50.06 | 147,582,412 |
| | Aug-21 | 49.50 | 53.54 | 147,582,412 |
| | Sep-21 | 42.50 | 48.37 | 147,582,412 |
| | Oct-21 | 17.50 | 32.38 | 147,582,412 |
| | Nov-21 | 13.10 | 23.11 | 147,582,412 |
| | Dec-21 | 17.90 | 18.10 | 147,582,412 |
| 2022 | Jan-22 | 17.69 | 18.10 | 129,584,097 |
| | Feb-22 | 18.26 | 16.15 | 129,584,097 |
| | Mar-22 | 10.59 | 19.63 | 129,584,097 |
| | Apr-22 | 5.00 | 11.92 | 129,584,097 |
| | May-22 | 37.37 | 51.05 | 129,584,097 |
| | Jun-22 | 51.20 | 49.16 | 129,584,097 |
| | Jul-22 | 45.60 | 35.37 | 156,326,826 * |
| | Aug-22 | 44.40 | 44.82 | 156,326,826 * |
| | Sep-22 | 42.20 | 59.94 | 156,326,826 * |

*Forecasted Fixed O & M cost (2022 Jul to 2022 September) is given.

மன்னார் மாவட்டத்தில் மீள் புதிப்பிக்கக்கூடிய சக்தி ெளங்களான காற்றாலை மின் சக்தி செய ற்றிட்டத்தின் ஊடாக 2021ஆம்ஆண்டு 8 மாதங்களில் 315.33 GWh மின்சாரமும் 2022ஆம் ஆண்டு 9 மாதங்களில் 306.14 GWh மின்சாரமும் மொத்தமாக 17 மாதங்களில் 621.47 GWh உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 621.47 GWh என்பது 62,14,70,000 unitக்கு சமனானதாகும். இந்த 17 மாத காற்றாலை மின் உற்பத்திக்காக 2,13,19,79,532 ரூபா செலவு செய்யப்பட்டதன் அடிப்படையில் காற்றாலை மின் செயற்றிட்டத்தின் ஊடாக ஒரு மின் அலகை உற்பத்செய்ய வெறுமனே 3 ரூபா 43 சதமே செலவாகின்றது. அதேநேரம் 2023ஆம் ஆண்டு கடந்த இரு வருடங்களை விட அதிகமான அளவு மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற நிலையில், இவ்வாறான மின்கட்டண அதிகரிப்பு மன்னார் மாவட்டத்தை மாத்திரமல்லாமல் அனைத்து மாவட்ட மின் பாவனையாளர்களையும் பாதித்துள்ளது.



01. Total No of Disconnection

| Year | No of Disconnections |
|---|---|
| 2019 | 9673 |
| 2020 | 1871 |
| 2021 | 1637 |
| 2022 | 3526 |

02. Total No of Reconnection

| Year | No | Reconnection Charge | Paid by Consumer |
|---|---|---|---|
| 2019 | 5943 | 1,250.00 | 7,428,750.00 |
| 2020 | 1070 | 1,250.00 | 1,337,500.00 |
| 2021 | 371 | 3,000.00 | 1,113,000.00 |
| 2022 | 1172 | 3,000.00 | 3,516,000.00 |

As soon as we received the information for question No. 3 & 4 we will inform you

தற்போது 01 யுனிட் மின்சாரத்திற்கு மக்களிடமிருந்து 29.14 சதம் அறவிடப்படுகின்றது. ஆனால், 01 யுனிட் மின்சாரத்தை உற்பத்திசெய்ய 56.90 சதம் செலவாகும்போது மொத்த உற்பத்தியின் அடிப்படையில் 423 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது.

வெறுமனே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தப் போவதாக தெரிவிக்கும் இலங்கை மின்சார சபை, பாவனையாளர்கள் அறியாத வாறு நிலையான விதிப்பு என்ற போர்வையில் 500 ரூபா தொடக்கம் 1,500 ரூபா வரை மேலதிகமாக பணம் வசூலித்து வருகின்றது

குறிப்பாக, இந்த நிலையான விதிப்பனவு என்பது 2021, 2022ஆம் ஆண்டுகளில் சாதாரண மின் பாவனையாளர்களிடம் அதாவது, 100 மின் அலகை விட குறைவாக பயன்படுத்துவோரிடம் வெறும் 30-90 ரூபாவாகவே காணப்பட்ட நிலையில், தற்போது மின்பாவனையின் பிரகாரம் 500 தொடக்கம் 1,500 வரையில் விதிக்கப்படுகின்றது

இவ்வாறு இலங்கை மின்சார சபையின் மின்கட்டணம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட விதிப்பனவுகளின் ஊடாக மின்பாவனையாளர்களின் மின் கட்டண சுமை அன்றாடம் அதிகரித்து வருகின்றது

மின்சார சபை ஒவ்வொரு முறையும் எவ்வளவு தான் மின் கட்டணத்தை உயர்த்தினாலும் அவர்கள் தரப்பினர் மீண்டும் மீண்டும் நஷ்டம் என்றே கூறுகின்றனர். ஆனால், உண்மையில் இவர்களின் நிர்வாகத்தில் பலவீனம் இருக்கிறது.

குறிப்பாக, மின்சார சபையின் செலவுகள் அதிகம். மின்சார சபை பொறியியலாளர்கள் போன்ற உயர் பதவியில் உள்ளவர்களுக்கு 8 முதல் 12 இலட்சம்வரை சம்பளம் வழங்கப்படுகிறது. இதற்கு மின்சார சபை நீண்டகாலமாக வரியும் செலுத்துகிறது. இவ்வாறான காரணங்களே மின்சார சபையின் நட்டத்துக்குக் காரணம் என மின் கட்டண அதிகரிப்பால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆலம் தெரிவிக்கின்றார்

கடந்த கால அரசாங்கங்களில் அமைச்சர்களாக செயற்பட்ட 82 அமைச்சர்கள் மின் கட்டணம் செலுத்தாமல் உள்ளதாக அண்மையில் வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார்

அத்துடன், அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவின் வீட்டுக்கான மின்சாரக் கொடுப்பனவு கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்படவில்லை எனவும் அவரின் வீட்டுக்கான மின்சார கட்டண நிலுவையாக 1,20,56,803.38 உள்ளதாக மின்சார சபை சுட்டிக்காட்டியிருந்தது அதில் 80 இலட்சத்தை அவர் செலுத்தியுள்ளார். ஆனால், மிகுதி பணத்தை செலுத்தவில்லை என ஊடகங்களும் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

மின்கட்டண உயர்வு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பேசினாலும், நாடாளுமன்றத்தில் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மின் கட்டணம் செலுத்தாமல் இருப்பது குறித்து அவர்கள் பெரும்பாலும் பாராளுமன்றத்தில் பேசுவதில்லை.

குறிப்பாக,பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, ராஜித சேனாரத்ன, ரஞ்சித் சியம்பலாபிட்டிய உள்ளிட்டோரும் மின்சாரக் கட்டணங்கள் செலுத்தத் தவறியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை கவனிக்கப்படவேண்டியுள்ளது

நாட்டில் பொதுமக்களுக்கு ஒரு சட்டமும் அரசியல்வாதிகளுக்கும் அமைச்சர்களுக்கும் ஒரு சட்டமும் காணப்படுவது இவ்வாறான விடயங்களை அரசாங்கம் அவ்வப்போது பகிரங்கமாக செய்வதனூடாக தெட்டத்தெளிவாகி வருகின்றது.

இலட்சக்கணக்கில் மின்சாரக் கட்டணம் செலுத்தாத அரசியல்வாதிகள் நாட்டின் அரியணையில் வாழ்வதுடன், நூறு ரூபா, ஆயிரம் ரூபா மின்கட்டணம் செலுத்தாத ஏழைகள் இருளிலும் வாழ்வதே இந்த நாட்டில் இப்போதைய நிலையாகக் காணப்படுகின்றது

40 ஆயிரம் மின்பாவனையாளர்களைக்கொண்ட மன்னார் மாவட்டத்திலேயே 16,000 குடும்பங்கள் பழைய முறையிலான மின்கட்டணம் செலுத்த முடியாது மின் துண்டிப்புக்கு ஆளாகியுள்ள நிலையில் ஏனைய மாவட்டங்களை உற்றுநோக்கினால் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் மின் துண்டிப்புக்கு உள்ளாகியிருக்கலாம்.

இவ்வாறான நிலையில் புதிய முறையிலான மின்கட்டண விதிப்பை நடுத்தர குடும்பங்கள் உட்பட்ட பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்கள் எவ்வாறு சமாளிக்கப்போகின்றன என்பதுடன், மின் கட்டண அதிகரிப்பின் காரணமாக ஏற்படப் போகும் மின்சாரம் சார்ந்த உற்பத்திகளுக்கான விலை அதிகரிப்பை எவ்வாறு சமாளிக்கப் போகின்றார்கள் என்பது பலரின் கேள்வியாகும்.

# கடலுடன் சங்கமித்தது மையவாடி

## செய்வதறியாது திணறும் மாளிகைக்காடு!

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் மரணத்தை அடைந்தே தீரவேண்டும். ஒரு மனிதனின் மரணத்தின் பின்னர் அவன் பின்பற்றும் சமயத்தின் அடிப்படையில் அல்லது அவனது பிரதேசத்தின் விழுமியங்களின், கோட்பாடுகளின் அடிப்படையில் அவனது இறுதிச்சடங்கு நடைபெறுவது வழமை. அப்படியாக பாரம்பரிய முஸ்லிம் கிராமம் ஒன்றில் முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யமுடியாத வகையில் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்த மையவாடி, கடலரிப்பில் காவுகொள்ளப்பட்டு, திண்டாட்டிக்கொண்டிருக்கும் மக்களின், ஒரு ஊரின் நிலையையே இன்றைய 'தமிழன்' உங்கள் முன் கொண்டுவந்துள்ளது.

இயற்கை அழகுடன் கூடிய முஸ்லிம்கள் அதிகம் வாழும் கிழக்கு மாகாணத்தில், நெல் விளைச்சல் கூடிய அம்பாறை மாவட்டத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணான காரைதீவை அண்டிய கிராமமான மாளிகைக்காடு சகல துறையிலும் முன்னேறியுள்ள மீன்பிடியிலும் பிரசித்திபெற்ற ஊர். இந்த ஊரில் கடந்த இரண்டரை வருடங்களாக ஜனாஸா மையவாடி கடலரிப்பில் பகுதி பகுதியாக காவுகொள்ளப்பட்டு இப்போது அரைவாசிக்கு மேல் கடலில் அள்ளுண்டு சென்றுவிட்டது. மீதியும் விரைவில் கடலுடன் சங்கமித்துவிடும் நிலையே இருக்கிறது.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசலின் ஜனாஸா மையவாடியின் சுற்றுமதில்கள் கடலரிப்புக்குள்ளாகி இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும் அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஊடகங்களின் வாயிலாக பல நாட்களாக சுட்டிக்காட்டப்பட்டு வேண்டுகோள் விடுக்கப்பட்டுவந்த நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை காலை ஜனாஸா மையவாடியின் சுற்றுமதிலின் ஒரு பகுதி கடலரிப்புக்கு இலக்காகி இடிந்து விழுந்தது. கடலரிப்பைத் தடுத்து ஜனாஸா மையவாடியின் சுற்றுமதிலை பாதுகாக்க காரைதீவு பிரதேச சபையின் உதவியுடன் குறித்த துறைக்குப் பொறுப்பான காரைதீவு பிரதேச செயலக அதிகாரியின் ஆலோசனையுடனும் மேற்பார்வையுடனும் மண்மூடைகளை அடுக்கி குறித்த மதிலை காப்பாற்ற பொதுமக்களால் ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால், அந்த தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கையும் கைகூடவில்லை.

மதிலின் இன்னும் பல பகுதிகளும் இடிந்து விழுந்ததால் நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் கடலரிப்பின் காரணமாக வெளியேறும் நிலை ஏற்பட்டது. கடலரிப்பினால் நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் வெளியேறி அண்மித்த பிரதேசங்களில் கரையொதுங்கும் நிலையும் இதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்பிருப்பதனால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசலால் அரச அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபையினர், அரசியல் கட்சிகளின் பிரதேச அமைப்பாளர்கள், பொதுமக்கள் என பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு அந்நூர் கலாசார மண்டபத்தில் அவசர கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்த அவசர கூட்டத்தில் ஜனாஸா மையவாடியின் சுற்றுமதில்கள் கடலரிப்புக்கு உள்ளாகி இடிந்து விழாமல் பாதுகாக்க நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசலுக்கு அண்மித்த பகுதியில் புதிதாக ஜனாஸா மையவாடி ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பது என்றும் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் இந்தக் கட்டுரை எழுதும் நிமிடம் வரை செயலுருவாக்கம் பெறவில்லை என்பது துரதிர்ஷ்டவசமான ஒன்றாக அமைந்துள்ளது.

ஜனாஸா மையவாடியின் சுற்றுமதில்களின் நிலையின் மோசத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அறிந்த நான், கடலரிப்பின் மூலம் ஜனாஸாக்கள் வெளிவர ஆரம்பிக்கும் நிலையை உணர்ந்து நகர அபிவிருத்தி மற்றும் கரையோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கோட்டயக்கொட மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அமைச்சில் சந்தித்து பிரதேச மக்கயால் மண்மூடைகள் அடுக்கப்பட்டு குறித்த மதில்கள் தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டாலும் கடலரிப்பு உச்சநிலையில் இருப்பதால் சுவர் இடிந்துவிழும் நிலையிலேயே உள்ளது.

சுவர் இடிந்து வீழ்வதனால் ஜனாஸாக்கள் வெளியாகும் நிலை உள்ளது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதை விளக்கினேன். அத்துடன், ஜனாஸா மையவாடியின் சுற்றுமதில்களின் நிலையை அறிந்து அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சரும், பணிப்பாளர் நாயகமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறித்த துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் நிபுணர்களைக்கொண்டு துரித கதியில் கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க கரையோர பாதுகாப்புத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நம்பிக்கை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் அந்தப் பணி இடம்பெற்றதா என்பதை இப்போது தொடர்ந்தும் கவனிக்கவேண்டியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

மையவாடி சுவர்கள் மீண்டும் கடலரிப்புக்கு உள்ளாகி முழுமையாக இடிந்து வீழ்ந்ததுடன், தற்காலிக தீர்வாக பிரதேச மக்களால் இடப்பட்ட மண்மூடைகளும் கடல் அலைகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தொடர்ந்தும் சேதமாகி கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டன. இம்மையவாடியின் நிலை தொடர்பில் ஆராய










அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஷன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் உட்பட பலரும் களத்திற்கு விஜயம் செய்து நிலைகளை ஆராய்ந்ததுடன், அனர்த்த முகாமைத்துவ நிதிகளைக்கொண்டு அவசரமாக கடலரிப்பை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை காரைதீவு பிரதேச சபையூடாக முன்னெடுக்க தீர்மானித்ததாகவும் தெரிவித்தனர். தொடர்ந்தும் கடலரிப்புக்கு இலக்கான மாளிகைக்காடு ஜனாஸா மையவாடியை அண்மித்த சாய்ந்தமருது 15ஆம், 17ஆம் பிரிவுகளுக்காக மையவாடியாக அடையாளப்படுத்தப்பட்டு அண்மையில் அமைக்கப்பட்ட ஜனாஸா மையவாடியின் சுற்றுச் சுவரின் ஒரு பகுதி கடலரிப்பினால் உடைக்கப்பட்டு கடலுக்குள் சரிந்தது.

அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு பகுதி தொடர்ந்தும் இவ்வாறு கடலரிப்புக்கு இலக்காகி வருவதனால் அப்பிரதேசங்களில் வாழும் மீனவர்களும், பொதுமக்களும் கடுமையான சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி தொடர்பில் பல முன்னெடுப்புகள் நடைபெறுவதாக வாய்மூலமே அறிவிக்கப் பட்டுவரும் இச்சூழ்நிலையில் தீர்வில்லாமல் நாட்கள் கடந்துசெல்வது அப்பிரதேச மக்களுக்கு மிகப்பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பு காரணமாக இயற்கை மற்றும் கடற்றொழில் வளங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

காரைதீவு பிரதேச மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி கடலரிப்பினால் முற்றாக பாதிக்கப்பட்டு ஜனாஸாக்கள் வெளிவருவதனால் உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தர அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தின் தலைமையில் உருவாக்கப்பட்ட சமூக சேவகர்களை கொண்ட செயற்பாட்டுக் குழு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவந்தது. அதனடிப்படையில் இவ்விடயம் தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பிரதேச அரசியல்வாதி களின் முயற்சியால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து இந்தப் பிரச்சினையின் அவசர நிலையை விளக்கியதன் பலனாக உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பித்தார். உடனடியாக கள விஜயம்செய்த கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள் இப்பிரச்சினையின் சாதக, பாதக நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தத்திற்கிணங்க, இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கடலரிப்பிலிருந்து மையவாடியைப் பாதுகாக்க பாதுகாப்பு அரணும் அமைக்கப்பட்டது. பின்னர் வந்த நாட்களில் கடலரிப்பின் உக்கிரநிலை காரணமாக துரதிர்ஷ்டவசமாக நிர்மாணிக்கப் பட்ட தடுப்புச்சுவரும் இந்த வருட கடல் கொந்தளிப்பினால் பயனற்றுப்போய் கடலரிப்புக்கு இலக்காகி கடலுடன் சென்றுவிட்டது.

கடல் கொந்தளிப்பிலிருந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடியைப் பாதுகாக்க நிர்மாணிக்கப்பட்ட அணைக்கட்டுக்குப் பக்கத்தில் 10 - 12 அடி ஆழமான பாரிய குழிகள் ஆரம்பத்தில் விழுந்துள்ளதுடன், கடலரிப்பினால் கடலை நோக்கி மண் இழுபட்டுச் சென்றுள்ளதனால் அணைக்கட்டும் பலமிழந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி ஆபத்தை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மீண்டும் எழுந்துள்ளது. அதுமட்டுமன்றி, மையவாடிக்கு அண்மையிலுள்ள விநாயகர் ஆலயம், பாதுகாப்புப் படை காரியாலயம் போன்றன கடலரிப்புக்கு இலக்காகியுள்ளன. இது விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீனவர்களின் மீன்பிடிப் படகுகளும், வள்ளங்களும் நிறுத்த இடமின்றி வீதிக்கு அருகில் இழுத்து வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன், கொங்கிரீட் வீதிகளும் கடலரிப்பில் உடைந்து கடலுடன் சங்கமித்துள்ளன. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் முற்றாக கடலரிப்புக்கு இலக்காகியுள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது. ஜனாஸா மையவாடி மாத்திரமின்றி கடலிருக்கிறது கரையில்லை என்ற நிலையே இப்போது இங்கு தோற்றம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா மையவாடி கடலரிப்புக் குள்ளாகி பாவிக்க முடியாத நிலைக்கு நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. உடனடியாக மாற்று இடத்தில் புதிய ஜனாஸா மையவாடியை அமைக்கவேண்டிய தேவையுள்ளதால் உடனடியாக புதிய காணியொன்றை இதற்காக பெறவேண்டியுள்ளது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து புதிய காணியொன்றை வழங்குமாறு கோரி மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் தம்மால் முடியுமான முயற்சிகளை செய்துவருகின்றது. அரச காணி பற்றாக்குறை காரணமாக சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலின் உதவியை இப்போது அந்நூர் ஜும்மா பள்ளி நிர்வாகம் நாடியுள்ளது. இது விடயமாக ஜனாதிபதி, பிரதமர், காணியமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு மாளிகைக்காடு அல்-மீஸான் பௌண்டஷன், ஸ்ரீ லங்கா கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளது.

மேற்படி அரச முக்கியஸ்தர்களுக்கு முன்வைத்துள்ள கோரிக்கையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில், காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராம மக்களின் ஜனாஸா மையவாடி கடலரிப்பில் முழுமையாக சேதமாகியுள்ளதுடன், ஜனாஸாக்கள் கடலில் அள்ளுண்ட போன வரலாறுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாளிகைக்காடு ஜும்மா பெரியபள்ளி வாசலின் பராமரிப்பிலுள்ள அந்நூர் ஜனாஸா அடக்கஸ்தலம் மோசமான கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு வருகின்றன. மாளிகைக்காடு, மக்கள் முழுமையாகவும் சாய்ந்தமருது மக்கள் சில பகுதியினரும் அடங்கலாக 10,000 மக்கள் அளவில் பாவிக்கும் இந்த மையவாடியை தொடர்ந்தும் பாவிக்க முடியாத நிலை உள்ளதையும் இங்கு தெளிவாக விளக்கியுள்ளனர். எந்தவொரு தற்காலிக நடவடிக்கையும் இந்த சிக்கலை தீர்க்காது.

எனவே, காரைதீவு பிரதேச செயலகம் அல்லது சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்குள் பொருத்தமான அரச காணியை ஒதுக்கி இடர் முகாமைத்துவ நிலையம், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு பிரதேச செயலாளர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் மற்றும் காரைதீவு பிரதேச சபை என்பன ஒன்றிணைந்து உடனடித் தீர்வொன்றை வழங்கவேண்டி மாளிகைக்காடு அல்- மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா கோரிக்கை முன்வைத்துள்ளதுடன், காரைதீவு பிரதேச செயலாளர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர் போன்றோர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளனர்.

அரச காணி இல்லாமையை சுட்டிக்காட்டிய அரச உயர் அதிகாரிகள் நாடு இப்போது இருக்கும் நிலையில் தனியார் காணிகளை சுவீகரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களையும் விளக்குகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் இன்னும் சில மாதங்களில் ஜனாஸா நல்லடக்கம் செய்ய இடமில்லாமல் மக்கள் திண்டாடும் நிலை உருவாகும். அண்மையில் உள்ள மையவாடிகளும் அடர்த்தியால் ஒத்துழைக்க முடியாத நிலை உருவாகலாம். இது தொடர்பில் அவசர நடவடிக்கை தேவை. அமைச்சர்கள், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் குறித்த பிரச்சினைக்குத் தீர்வை வழங்கக்கூடியவர்கள் என எதிர்பார்ப்பவர்கள் தொடர்ந்தும் இவ்விடயத்தில் கரிசனை யுடன் செயலாற்ற வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் உரிய தீர்வை துரித கெதியில் பெற்றுக்கொடுக்க காரைதீவு சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டும் வகையில் உள்ளது.

சனநெரிசல் கூடிய இப்பிரதேசத்தில் அரச காணியென்பது மருந்துக்கும் இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. ஆனாலும் வேண்டியளவில் தனியார் காணிகள் இருக்கின்றன. இந்த தனியார் காணிகளை கொள்வனவு செய்யவேண்டுமாக இருந்தால் பெருந்தொகைப் பணம் தேவை.

இந்தப் பணத்தை எப்படி திரட்டுவது? காணியை எங்கிருந்து யார் மூலமாக பெற்றுக்கொள்வது என்பதே இப்போது மாளிகைக்காடு மக்களின் கவலையாக அமைந்துள்ளது. ஜனாஸா நலன்புரி அமைப்பின் வாகன அறிமுக நிகழ்விலும் இவ்விடயம் தொடர்பில் பலரும் பிரச்சினை களின் ஆழத்தை எடுத்துரைத்து மகஜரும் கையளித்தனர். அங்கு கலந்துகொண்டிருந்த காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் இப்பிரச்சினைகளை தீர்ப்பதிலுள்ள நடைமுறைச் சிக்கலான நியாயமான காரணங்களை எடுத்துரைத்தார். அவசரமான தேவையாக உள்ள இந்த பிரச்சினையைத் தீர்க்க பல்வேறுபட்ட அரச அதிகாரிகளை அணுகி பேசியதிலிருந்து அரச உயர்மட்ட உதவிகளை நாடவேண்டிய நிலைக்கு மாளிகைக்காடு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது மட்டும் நிரூபணமாகிறது.

மனிதன் மரணித்த பின்னர் அவனது மண்ணறை நிம்மதியாக அமைய வேண்டும். அந்தக் கொடுப்பனவை மாளிகைக்காடு, சாய்ந்தமருது மக்கள் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கடலரிப்பில் காவு கொள்ளப்பட்ட மையவாடிக்குப் பதிலாக மாற்று இடத்தை பொலிவேரியன் கிராமத்தில் உருவாக்க வேண்டிய நிலை உள்ளது. இதனை சாத்தியப்படுவது அவசியமாகிறது; அவசரமாகிறது.

உமர் அலி உஸ்மான்



# பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமை - அரசியலுக்கல்ல!

## ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

அரசாங்கம் தேர்தலை ஒத்திவைப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியபோதிலும், தேர்தலை நடத்துவதற்கான உறுதியான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அரசாங்கம் தேர்தலை ஒத்திவைப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியபோதிலும், தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கான உரிய திகதியை இதுவரை சட்டபூர்வமாக அறிவிக்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற விவாதத்தில் கடந்த (23) கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசியலுக்கு அன்றி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கே தான் முன்னுரிமை வழங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாவிட்டால் நாடொன்று எஞ்சாது எனவும் வலியுறுத்தினார்.

இங்கு மேலும் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கடந்தவாரம் வாக்கெடுப்பொன்றை கோரியுள்ளனர். பொதுவாக இவ்வாறு வாக்கெடுப்பு கோருவதில்லை. மின்சக்தி என்பது அத்தியாவசிய சேவை. ஏன் இதனை எதிர்க்கிறார்கள்? ஏன் இந்த சேவைகளை எதிர்க்கிறார்கள். தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதை எதிர்க்கட்சி எதிர்க்கிறதா? இது குறித்து விவாதம் தேவையெனில் அதனை வழங்க முடியும். ஆனால், அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் விவாதம் கோரவில்லை. தேர்தலை ஒத்திவைப்பதாகக் கூறியே விவாதம் கேட்டிருந்தனர். தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை. ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஒன்று இல்லை.

பொதுவாக, இந்த விவாதத்தில் கலந்துகொள்வதில்லை என்று நான் அறிவித்திருந்தேன். ஏனென்றால், எனக்கு அரசியல் தேவையில்லையென்று நான் கூறியிருந்தேன்.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவும் நீதிமன்றத்திற்கு சென்று, தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்று கூறுகிறது. எனினும், சத்தியக் கடதாசியொன்று வழங்கியிருப்பதால் இதுகுறித்து பேச நினைத்தேன். அப்படியில்லையெனில், எனக்கு கீழுள்ள நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பாரிய அநீதி ஏற்படும்.

தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்க முடியாதிருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு திறைசேரியின் செயலாளர் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் உண்மை யில்லை.

முதலில் இந்த நாட்டின் பொருளாதார நிலைமையையும், தேர்தல் ஒன்றை நடத்த பணம் இல்லை என்பதையும் அதேபோல் இது பொருளாதாரத்திற்கு உகந்ததல்ல என்றும், உறுப்பினர் எண்ணிக்கை 5,000இற்கு குறைந்தபின்னர் தேர்தலை நடத்துமாறும் கடந்த டிசம்பர் 14ஆம் திகதி, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு நான் அறிவித்திருந்தேன். நானே அவர்களுக்கு முதலில் இதுபற்றி அறிவித்தேன். இதுகுறித்து நான் விளக்கமளித்திருந்தேன். இது சாதாரண ஆணைக்குழு அல்ல.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இந்த பாராளுமன்றமே நிறைவேற்றியது. இந்த 21ஆவது திருத்தத்தைப் பார்த்தால், இடைக்கால விதிமுறைகளின் மூன்றாவது பிரிவில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த திருத்தம் நடைமுறைக்கு வரும் தினம் முதல் குறித்த ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர் பதவி வகிக்கும் அனைவரினதும் பதவிகள் இடைநிறுத்தப்படுகின்றன. இந்தத் திருத்தத்தில் நீங்கள் கையெழுத்திடப்பட்ட தினம் முதல் அந்தப் பதவிகள் உடனடியாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதாவது ஒக்டோபர் 31ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருகிறது. இது சாதாரண ஆணைக்குழு அல்ல. எவ்வாறாயினும், இந்த திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தும் திகதிக்கு முன்னர் ஏதாவது ஆணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி வகிக்கும் ஒருவருக்கு, குறித்த ஆணைக்குழு, அரசியலமைப்பின் (vii) பிரிவின்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள திகதி வரை தமது குறித்த பதவிகளின் அதிகாரங்களையும், பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

எனவே, தற்காலிக ஆணைக்குழுவொன்றே இருக்கிறது. இந்த தற்காலிக ஆணைக்குழு, விசேடமாக அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்திற்கே பொறுப்பு கூறுகிறது. வேறு யாருக்கும் பொறுப்புக்கூறத் தேவையில்லை. எனவே, உங்களுடனும் பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி, இந்த ஆணைக்குழு பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எனினும், நான் அறிந்தவரையில், அப்படி எதுவும் நடக்கவில்லை. இது முதலாவது தவறு.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நான் தனியாக சந்தித்தபோது, தற்போதுள்ள நிலை குறித்து அவர்களுக்கு அறிவித்துள்ளேன். ஜனாதிபதி என்ற வகையில் நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். செயலாளர் மீது குற்றஞ்சுமத்தத் தேவையில்லை. ஜனாதிபதி என்ற வகையில் நான் தேவையானவற்றை அறிவித்தேன்.

அதன்பின்னர், ஜனவரி 5ஆம் திகதி மாலை 3 மணிக்கு, நானும், பிரதமரும், சட்டமா அதிபரும், இவர்களைச் சந்தித்தோம். தேர்தலை ஒத்திவைப்பதற்காக நாம் இவர்களைச் சந்திக்கவில்லை. அந்தசமயம், ஆணைக்குழுவில் பிளவு ஏற்பட்டிருந்தது. டிசம்பர் 23ஆம் திகதி தேர்தலை நடத்த தீர்மானித்ததாக அவர்கள் கூறினார்கள். எனினும், வேட்பு மனுவை ஏற்பதற்கான திகதியைத் தீர்மானித்திருக்கவில்லை என்று இரண்டு உறுப்பினர்கள் கூறினார்கள். திகதியைத் தீர்மானித்ததாக ஒருவர் கூறினார். ஒருவர் இரண்டு பக்கமும் கதைத்தார். ஐந்தாவது உறுப்பினர் கண்டி ஆஸ்பத்திரியில் இருந்தார். இதனால், கூட்டங்களின் அறிக்கைகளைத் தருமாறு சட்டமா அதிபர் கோரியிருந்தார். அறிக்கைகள் இல்லை என்று அவர்கள் கூறினார்கள்.

எனவே, நீங்கள் அனைவரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்தால், எவ்வாறு செயல்படுவது என்பதைக் கூற முடியும் என்று சட்டமா அதிபர் அறிவித்தார். இதுகுறித்து ஒன்றுகூடிக் கலந்துரையாடி திகதியொன்றை தீர்மானிக்குமாறு அவர் கூறினார். எனினும், அவர்கள் சாலிய பீரிஸ் சட்டத்தரணியை வைத்துக்கொண்டு பணிகளை முன்னெடுத்தனர். சாலிய பீரிஸ், அரசியலுடன் தொடர்புபட்ட சட்டத்தரணி என்றும் அவரை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்றும் ஆளுந்தரப்பினர் என்னிடம் வினவினார்கள். அரசியலுடன் தொடர்புபடாத சட்டத்தரணியொருவரை நியமிக்குமாறு கூறினார்கள். அல்லது சட்டமா அதிபரை வழங்குமாறு கோரினார்கள்.

இந்த நிலைமையில் சட்டமா அதிபரை ஈடுபடுத்துவது சிரமம் என்று கூறியிருந்தேன். இந்தச் சூழ்நிலையில், நான் தலையிடப் போவதில்லை என்று கூறினேன். சட்டத்தரணியொருவரை பணியமர்த்துவதாயின், எந்தவொரு கட்சியுடனும் தொடர்புபடாத சட்டத்தரணியொருவரை தெரிவு செய்ய வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

எவ்வாறாயினும், இதன்பின்னர் இதுகுறித்து எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை. வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தை தயாரிக்கும்போதே தேர்தலுக்கு 10 பில்லியன் கோரி மதிப்பீட்டறிக்கையை வழங்கியிருந்தார்கள். எனினும், 9ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்கள். 06 பில்லியன் ரூபா முற்பணம் கோரி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

ஆரம்பத்தில் 10 பில்லியன் ரூபா தேவையெனக் கூறினார்கள். பண வீக்கம் உள்ள நிலையில் 5 பில்லியன் ரூபா தேவை என்று கேட்டுள்ளனர். எனவே, இந்த மதிப்பீட்டறிக்கை குறித்து அமைச்சு மீண்டும் ஆராய்ந்துள்ளது. பொலிஸார் அதிகமாக கோருகின்றனர்.

10 பில்லியன் ரூபா செலவு உள்ள இடத்தில் 5 பில்லியன் ரூபாவில் தேர்தலை நடத்த முடியும் என்று ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் கூறுகிறார். எரிபொருள் விலை உள்ளிட்ட அனைத்தும் அதிகரித்துள்ளதால் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை. இன்னும் அதிகமாக தேவை என்று பொலிஸார் கூறுகின்றனர். ஏனைய திணைக்களங்கள் முழுமையான மதிப்பீட்டறிக்கையை அனுப்பவில்லை. ஏனைய திணைக்களங்களின் மதிப்பீட்டறிக்கைகள் குறித்து தாம் அறிவிக்கமாட்டோம் என்று இரண்டாவது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். ஒவ்வொரு திணைக்களத்தில் இருந்தும் ஒவ்வொரு மதிப்பீடுகளை எங்களுக்கு அனுப்புகின்றனர். பணம் இல்லாத நிலையிலும், ஏற்கெனவே தேர்தலுக்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால், தேர்தல் ஆணைக்குழு இந்த அடிப்படை பிரச்சினையை சீர் செய்ய வேண்டும். இவற்றுக்கு நிதியமைச்சு பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை. அரசியலமைப்பின் பிரகாரம், ஆணைக்குழுவின் பணிகளும், அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவினால், ஆணைக்குழுவின் தலைவருக்கோ, ஆணைக்குழுவின் வேறொரு அதிகாரிக்கோ வழங்க முடியும். ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைய, அதன் கட்டுப்பாட்டின் கீழ், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அல்லது வேறொரு அதிகாரியினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். 104 e6 பிரிவில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஆணைக்குழுவின் கடிதத்தின் எந்த இடத்திலும் 104 e6 பிரிவு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. எனினும், ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இந்தக் கடிதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், 09.01.2023ஆம் திகதி மற்றும் ஜனவரி 26 ஆம் திகதிகளில் தேர்தலின் முதற்கட்டப் பணிகளுக்காக, முற்பணம் வழங்குமாறு கோரியுள்ளபோதிலும், அந்த முற்பணம் இதுவரை கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இந்த முற்பணம் வழங்கியிருந்தால், குறித்த அதிகாரிக்கு எதிராக எமக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்தக் கடிதத்தில் கணக்காளருக்கு ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. தனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கடிதத்தில் கூட அவர் குறிப்பிட்டிருக்கவில்லை. இதனை வழங்கியிருந்தால், அடிப்படை உரிமையை மீறியதாக பணிப்பாளர் நாயகத்திற்கு எதிராக எவருக்கு வேண்டுமானாலும் நீதிமன்றம் சென்றிருக்க முடியும். இதன்பின்னர் அரச சேவை ஆணைக்குழு ஊடாக அவருக்கு தண்டனை வழங்கி, அவரை பணி நீக்கம் செய்திருக்க முடியும்.

இதன்பின்னர், தலைவர் பெப்ரவரி 3ஆம் திகதி கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இந்தக் கடிதத்திலும், தனக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிடவில்லை. தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் என்று எந்தவொரு கடிதத்திலும் குறிப்பிடவில்லை.

பெப்ரவரி 10ஆம் திகதி அறிவித்தவாறு தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக இரண்டு அரசியல் கட்சிகளினால் SEFR 062022 SEFR 072022 ஆகிய இலக்கங்களைக் கொண்ட இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழுவினால் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டபூர்வமான பணிகளை முன்னெடுத்துள்ளதால், இதனை நிராகரித்து, தேர்தல் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறு உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், அப்படியானதொரு தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கவில்லை.

"ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, 2023 ஜனவரி 18ஆம் திகதி வெளியிடப்பட்ட குறிப்பு தொடர்பில் தெரிவித்தார். அந்த குறிப்பிற்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச்சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக 01 முதல் 05 வரையான பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அதனால் மெண்டமூஸ் உத்தரவொன்று தேவையில்லை என மனுதாரர் தரப்பினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மெண்டமூஸ் உத்தரவொன்று தேவையில்லையென்றால் நீதிமன்றத்தினால் வழங்குவதற்கு தீர்ப்பெதுவும் கிடையாது.

07ஆவது பிரதிவாதியான பிரதமரிடம் எந்த நிவாரணமும் கோரப்படவில்லை என அவர் சார்பாக ஆஜரான நெரீன் புள்ளே நீதிமன்றத்தில் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு எந்தப் பிணைப்பும் கிடையாது.

அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப்பொன்றை வழங்குமாறு கோரியிருக்கலாம். இதில் எதனையும் மனுதாரர்கள் கோரவில்லை. இதன்படி எந்தவொரு அதிகாரியையும் குறைகூற முடியாது. இறுதியாக தேர்தல் குறித்து பிரச்சினை இருந்தது. நாம் அறிந்தவகையில், இதுவரையில் தேர்தல் திகதியொன்று சட்டபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. சிலர் மார்ச் 9ஆம் திகதி குறித்து பேசுகின்றனர். ஆனால் 9ஆம் திகதி குறித்து எனக்கு எதனையும் கூறமுடியாது. நான் அறிந்தவகையில் 9ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான சட்டபூர்வமான தீர்மானம் எதுவும் இல்லை.

104ஆவது சரத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு கோரத்திற்கு 3 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஜனவரி 22ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் செய்தியொன்று வெளியாகியது.

தேர்தல் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் கடந்த இரவு 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்து கொண்ட கூட்டமொன்று நடந்ததாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். ஐந்தாவது உறுப்பினர் எம்.எம். மொஹமட் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் இருந்து இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துள்ளார். எனவே, ஆணைக்குழுவின் தலைவரும், உறுப்பினர் எம்.எம். மொஹமட்டும் இணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். அதன்பின்னர், இதற்கான அனுமதியை ஏனையவர்களிடம் பெற்றுக்கொண்டதாக தலைவரே கூறியுள்ளார்.

இவர்கள் இருவருமே தீர்மானம் எடுத்துள்ளனர். எனவே, ஏனைய மூன்று உறுப்பினர்களிடமும் கேட்டால், அவர்கள் வேறொரு நிலைப்பாட்டில் உள்ளனர். இதற்கான சாட்சியங்களும் என்னிடம் இருக்கின்றன.

இதன்படி, உத்தியோகபூர்வமாக தேர்தல் நடத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை. இதற்கு பணம் வழங்கினால், செயலாளரை பணி நீக்கம் செய்து, அவருக்கெதிராக வழக்கு தொடருமாறு பொலிஸாருக்கு கூற நேரிடும். இதே நிலைமையே அச்சக திணைக்களத் தலைவருக்கும் நடக்கும். இவர்கள் தமது தொழில்களை இழப்பார்கள். இவர்களை குறைகூற முடியாது. இவர்கள் அரச அதிகாரிகள். உண்மையில் நாட்டில் பொருளாதார நிலைமையொன்று இருக்கிறது. உண்மையில் எங்களிடம் பணம் இல்லை. அத்துடன் தேர்தலை நிறுத்தத் தேவையும் இல்லை. அவர்களின் பணிகளை அவர்களுக்கு முன்னெடுக்க முடியும். இதுகுறித்து அனைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான தீர்வை காண முடியும். எனினும், தற்போது பணம் இல்லை. இது அனைவருக்கும் தெரியும். ஆனால், தற்போது தேர்தல் ஒன்றும் இல்லை. தேர்தலை நடத்த பணம் இல்லை. பணம் இருந்தாலும் தேர்தல் ஒன்றும் இல்லை.

இந்த ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கே பொறுப்புகூற வேண்டும். தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தெரிவுக்குழுவை நியமித்து, இந்தத் தகவல்களை சேகரித்து அறிக்கையொன்றைத் தயாரித்து உயர் நீதிமன்றத்திற்கு அந்த அறிக்கையை அனுப்ப வேண்டும்.

நிதி குறித்த அதிகாரம் எங்களுக்கே இருக்கிறது. மெக்னா கார்ட்டா தொடக்கம் 1688 புரட்சி காலம் முதலே அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. நான்காவது சரத்தின்கீழ், இந்த அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. எனவே, இதுகுறித்து பரிசீலித்து, அறிக்கை சமர்ப்பித்து உயர் நீதிமன்றத்திற்கு இதனை அனுப்பிவையுங்கள்.

வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதி அனைத்தையும் ஒரேதடவையில் வழங்க முடியாது. குறித்த திகதியில் வழங்குமாறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. வருட இறுதிக்குள் அவற்றை செலவிடவேண்டும். செலவிட முடியாவிட்டால் திருப்பி அனுப்ப வேண்டும். வருமானம் வருமாக இருந்தால் செலவிடலாம். 4 டிரில்லியன் வரவேண்டிய நிலையில் ஒரு டிரில்லியன் தான் வருமானம் கிடைப்பதாக இருந்தால் நான் ஒரு டிரில்லியன் தான் என்னால் செலவிட முடியும். மத்திய வங்கிக்கு அறிவித்து பணம் அச்சிடுவதாக இருந்தால் அது குறித்து பாராளுமன்றத்திடம் வினவ வேண்டும். ஆனால் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் பிரகாரம் பணம் அச்சிட முடியாது.

சுற்றுநிருபத்தின் மூலம் தேர்தலை ஒத்திவைக்க முடியுமா என்று கேட்கின்றனர். அப்படி செய்ய முடியாது. ஆனால் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால் மட்டுமே எதையாவது செய்ய முடியும். உத்தியோகபூர்வமாக மூன்று பேர் தீர்மானிக்க வேண்டிய இடத்தில் இருவர் மட்டுமே இருந்துள்ளனர். எனவே, எப்படி தேர்தலை நடத்த முடியும். இந்த அதிகாரிகள் பொறுப்புகூற வேண்டும். முதலில் தேர்தலை அறிவிக்க வேண்டும். நாம் சட்டத்தின்படியே பணியாற்றியுள்ளோம். நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் அனைத்து தேர்தல்களையும் உரிய நேரத்தில் நடத்துவோம்.

கடன் குறித்து பாரிஸ் மாநாட்டுடனும், இந்தியாவுடனும், சீனாவுடனும் பேசி இணக்கப்பாட்டிற்கு வந்து, ஐ.எம்.எப். இடமிருந்து முடிவொன்றைப் பெறும் வரையில் இந்தப் பணத்தில் கைவைப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம். நான் பொருளாதாரத்திற்கே முன்னு ரிமை வழங்குகிறேன். இதனை சீர்செய்யவில்லையெனில், நாடொன்று எஞ்சாது. நாட்டை இழந்து, அரசியலமைப்பைப் பாதுகாக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். நாட்டைப் பாதுகாத்தால் மட்டுமே அரசியலமைப்பைப் பாதுகாக்க முடியும். ஜனாதிபதியின் முதல்கடமை நாட்டைப் பாதுகாப்பதாகும். பொருளாதார நெருக்கடிக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பது தொடர்பில் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணையை மார்ச் 3ஆவது வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதமருக்கு அறிவித்துள்ளேன். ஆளுந்தரப்பு அதனை ஆதரிக்கும். தேர்தல் ஆணைக்குழுவை மாற்றுமாறும் எதிரணி கோரியது. அதனை ஏற்கிறோம். அடுத்த வாரம் அதனை நிறைவேற்றுவோம் - என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# அதிகார மோதல்: அடங்குவது எப்போது?


ரஷ்ய தாக்குதலால் உக்ரைனில் ஏற்பட்ட மனித பேரவலம்...

இன்று உலகின் ஒவ்வொரு நாடும் தனது அதிகார - ஆயுத பலத்தால் சக்தியிழந்த - வளர்ந்து வரும் நாடுகளை அடிபணிய வைத்து உலக நாடுகளுக்கு 'தாதா'வாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆதிக்க வர்க்கத்தின் அதிகாரப்பசிக்குள் சிக்குண்ட சிறிய - வறிய நாடுகளோ சிதைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றன. இதற்கு வரலாற்றை புரட்டவேண்டிய அவசியமில்லை. அதற்கு நிகழாண்டில் உக்ரைன் - ரஷ்யப் போரே எடுத்துக்காட்டு.

உக்ரைன் - ரஷ்யப் போர் மூண்டு ஒரு வருடமாகியும் இன்றும் நீண்டுகொண்டிருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பின்னும் இரத்தவெறி கொண்ட காட்டேரியாக போர்க்களத்தில் நின்றுகொண்டிருக்கிறது ரஷ்யா. இழப்பதற்கு இன்னும் என்ன இருக்கிறது என்ற நிலையிலும் ''எதிர்கொள்ளத் தயார்...'' என நெஞ்சை நிமிர்த்தி களத்தில் நின்றுகொண்டிருக்கிறது உக்ரைன்.

மாண்டு கிடக்கும் மனிதத்துக்கு மத்தியில் தமது பலத்தை உலகறியச் செய்ய பசியடங்கா பேய்களாக போர்க்களத்தில் ஆயுதங்களைக் குவித்து உக்ரைனை உசுப்பேற்றிக் கொண்டிருக்கின்றன மேற்குலக நாடுகள். மேற்குலகின் அதிகாரப் பசிக்கு இரையாகி இன்று சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடக்கிறது உக்ரைன்.

ரஷ்யா - உக்ரைன் இரண்டும் அந்நிய நாடுகளல்ல. சோவியத் ஒன்றியத்தின் இரட்டைக் குழந்தைகள். பண்பாட்டு, கலாசாரத்தால் ஒருமைப்பட்டவை. 1945 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்துள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் பிளவுக்குப் பின்னர் சுதந்திரம் பெற்று தனி நாடாக தங்களுக்கென புதிய அரசியலமைப்புச் சட்டத்தோடு செயற்பட்டு வருகிறது உக்ரைன்.

இப்போதும் உக்ரைன் தன் எல்லைகளை ரஷ்யாவோடும், ஐரோப்பிய ஒன்றியத்தோடும் பகிர்ந்துகொண்டுள்ளது. ஆனால், கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக்கொண்டுள்ளது உக்ரைன். இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக உக்ரைனில் வாழ்ந்து வருகின்றனர்.

2014ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்த ஜனாதிபதி விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், உக்ரைனின் தெற்குப் பகுதியிலுள்ள கிரீமிய தீபகற்பத்தைக் கைப்பற்றியது ரஷ்யா. மேலும், கிழக்கு உக்ரைனில் கணிசமான பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்தது ரஷ்யா. இதுதான் ரசோ - யுக்ரேனியன் (Russo-Ukrainian) போராக உருவெடுத்தது.

இருந்தபோதிலும், இன்றுவரை ரஷ்யா கலாசார, பண்பாட்டு விழுமிங்களால் பின்னிப் பிணைந்துள்ளது. இப்படியிருக்கையில் ஒன்றியத்தில் ஒட்டிப் பிறந்த இந்த இரட்டைக் குழந்தையான உக்ரைன் மீது ரஷ்யாவுக்கு ஏன் இத்தனை வன்மம்?

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவுக்கே சவால் விடும் வகையில் வலிமை பெற்று விளங்கிய சோவியத் ஒன்றியம், ஏனைய ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக 1949ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதே நேட்டோ கூட்டமைப்பு.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுடன் தொடங்கப்பட்ட அந்த அமைப்பு, சோவியத் ஒன்றியம் சிதறி வலுவிழந்த பின்னர் கலைக்கப்படுவதற்கு பதில் மேலும் மேலும் உறுப்பினர்களை சேர்த்துக்கொண்டு தனது பலத்தை பெருக்கியது.

ஆரம்பத்தில் 12 உறுப்பு நாடுகளைக் கொண்டிருந்த நேட்டோவில் தற்போது 30 நாடுகள் உள்ளன.

அதிலும், எந்த சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக நேட்டோ உருவாக்கப்பட்டதோ, அதே சோவியத் ஒன்றியத்தில் அங்கம் வகித்த நாடுகளையும் நேட்டோ தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இப்படி நேட்டோ அமைப்பு தங்களை நாலாபுறமும் சுற்றிவளைப்பதற்கு ரஷ்யா நீண்டகாலமாகவே எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் உக்ரைனில் கடந்த 2014ஆம் நடைபெற்ற தீவிர போராட்டத்தால், ரஷ்ய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதி பெட்ரோ போரஷென்கோவின் ஆட்சி கவிழ்ந்தது.

அதனைத் தொடர்ந்து, கிழக்கு உக்ரைனின் கிளர்ச்சிப் படையினருக்கும், உக்ரைன் இராணுவத்துக்கும் இடையே உள்நாட்டுப் போர் வெடித்தது. ரஷ்ய ஆதரவுடன் போரிட்ட கிளர்ச்சியாளர்கள், லுஹான்ஸ்க், டொனட்க்ஸ் ஆகிய கிழக்குப் பிரதேசங்களில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றினர்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐரோப்பிய நாடுகளின் முன்னிலையில் ரஷ்யாவும் உக்ரைனும் பெலாரஸ் தலைநகர் ~மின்ஸ்கில் மேற்கொண்ட ஒப்பந்தத்தில், போர் நிறுத்தம் மேற்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டது.

எனினும், அந்த ஒப்பந்தத்தை அடிக்கடி மீறி வந்ததாக இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்நிலையில், நேட்டோவில் இணைவதற்கு ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியின் தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது.

அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோவில் உக்ரைன் இணைந்தால் தனக்கு பாதுகாப்பு இருக்காது என்று உணர்ந்த ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்க எத்தனித்தது.

இதனையடுத்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைனை மீட்பதற்காக மேற்கொள்ளப்படும் 'சிறப்பு இராணுவ நடவடிக்கை' என்னும் அறிவிப்போடு போருக்கான பிள்ளையார் சுழியை போட்டார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின். ''சுண்டைக்காய் நாடு, நசுக்கிவிட்டுத் திரும்பிவிடலாம்'' என்னும் நம்பிக்கையோடு கிட்டத்தட்ட 2 இலட்சம் வீரர்கள் உக்ரைனுக்குள் ஊடுருவினர்.

அதேநேரத்தில் ரஷ்யா வலிமை பெறுவதை ஐரோப்பிய நாடுகளும் அச்சுறுத்தலாக நினைத்ததால் அமெரிக்கா உட்பட பல்வேறு மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவைச் சுற்றி படைகளைக் குவித்தன.

இவற்றுக்கு நடுவேதான் ''மரம் அமைதியை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை'' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன்விளைவால் ரஷ்யாவின் ஏவுகணைகள் உக்ரைனைத் துளைத்தெடுத்தன. நாற்புற தாக்குதலால் நசுங்குண்டது உக்ரைன்.

ரஷ்ய தாக்குதலால் உக்ரைனின் பல முக்கிய நகரங்கள் சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன. தலைநகர் கீவ், கிழக்கு உக்ரைனிலுள்ள கார்கிவ் (உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரம்), துறைமுக நகரான மரியுபோல் மற்றும் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், ஜபோரிஜியா மற்றும் தெற்கு உக்ரைனிலுள்ள மிக்கலேவ், கெர்சன் போன்ற பகுதிகள் மக்கள் வாழத் தகுதியற்றுப் போய்விட்டன. வரலாற்றுச் சின்னங்கள் பல ஒரே ஆண்டில் சிதிலமடைந்து போய்விட்டன.

2 இலட்சம் இராணுவ வீரர்கள், 200இற்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் உட்பட 42 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 57 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு, 15 ஆயிரம் பேர் காணாமல்போயுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை எல்லாவற்றையும்விட மிகக் கொடுமை, ஒரு கோடியே 88 இலட்சம் பேர் தங்களின் தாய்நாடான உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்திருப்பதுதான்.

உக்ரைனின் பல பகுதிகளை ரஷ்யா தன் வசமாக்கியது. இந்நிலையில்தான் இனியும் ரஷ்யாவை விட்டு வைத்தால் உக்ரைனை வீழ்த்தி உலக அரங்கில் ரஷ்யா தன் படைபலத்தை நிரூபித்துவிடும் என்ற பேரச்சத்தில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் என்று பலவும் பல பில்லியன் டொலர் கணக்கில் ஆயுதங்களை உக்ரைனுக்கு அள்ளிக் கொடுத்தன.

சுதாரித்துக் கொண்ட உக்ரைன், பேரழிவைப் பற்றிக் கவலைப்படாமல் தடுப்பாட்டத்தைத் தொடங்கியது. வடக்கிலும் தெற்கிலும் ரஷ்யர்களை எதிர்கொண்டு வெற்றிபெற்றதோடு, இழந்த பகுதிகள் சிலவற்றையும் அந்நாடு மீட்டெடுத்தது. அத்துடன், ரஷ்ய வீரர்கள் நிகழ்த்திய போர்க் குற்றங்களையும் வெளிச்சம்போட்டுக் காட்டிவிட்டுள்ளது.

எனினும், போர் இன்னும் முடியவில்லை. தொடர்ந்துகொண்டிருக்கிறது. அப்பாவிகள் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

போர் தொடங்கி கடந்த 24ஆம் திகதியுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

ரஷ்யா போரைத் தொடர்வதும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி வருவதும் போரை நீடிக்கச் செய்துள்ளது. இந்த இரு நாடுகள் தவிர, மசகு எண்ணெய் - உணவுப்பொருள் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம் என பிற நாடுகளின் மக்களையும் இந்தப் போர் பாதித்திருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இரகசியப் பயணமாக உக்ரைன் சென்று அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கியைச் சந்தித்தார். ரஷ்யாவுக்கு இதுவரை தார்மீக ஆதரவை வழங்கிவரும் சீனா, இனி ஆயுத உதவிகளையும் வழங்கலாம் என அமெரிக்கா எச்சரிக்கிறது.

மேற்குலகம், குறிப்பாக நேட்டோவின் பாத்திரம் இந்தப் போரை மேலும் சிக்கலானதாக மாற்றிவிட்டுள்ளது. நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கித் தன் பரப்பை விரிவாக்கிக்கொண்டே போவதை ரஷ்யாவுக்கான எச்சரிக்கை மணியாகவே புட்டின் பார்க்கிறார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி உக்ரைனில் தன் இராணுவக் கூடாரத்தை அமைப்பதே நேட்டோவின் இலக்கு. இதை அனுமதித்தால் நாளை ரஷ்யாவின் இருப்புக்கே ஆபத்து நேரலாம் என்கிறார் புட்டின். நேட்டோவில் சேர முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா கோபம் கொண்டதன் பின்னணியும் இதுதான்.

உக்ரைனை நேட்டோ உறுப்பினராக்கும் எண்ணமோ அங்கே இராணுவத்தை நிறுத்தும் எண்ணமோ இல்லை என்கிறது நேட்டோ. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதும் உக்ரைனின் சுதந்திரத்தைப் பேணிக்காப்பதும்தான் எங்கள் இலக்கு என்கின்றன அமெரிக்காவும் மேற்குலகும். வெளியே சொல்லப்படும் இந்த எளிய நோக்கங்களுக்காக மட்டுமே உக்ரைனின் பின்னால் இவர்கள் அனைவரும் அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பது நம்பும்படியாக இல்லை.



உக்ரைன் போர் என்பது உக்ரைனுக்கான போர் அல்ல. இது பனிப்போரின் நீட்சி. அதனால்தான் அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் என்று பலவும் பில்லியன் டொலர் கணக்கில் உக்ரைனுக்குக் கொட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இதை உக்ரைனும் பெரும்பாலும் உணர்ந்திருக்கும். வெளிப்படுத்தாவிட்டாலும் இந்த அடிப்படைப் புரிதலை அனைவரும் கொண்டிருப்பதால், இது விரைவில் முடியப்போகும் போரல்ல என்பதை அனைவரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர்.

இந்நிலையில்தான் ''உக்ரைனை விட்டு ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும். உக்ரைனில் அமைதி நீடிக்க ரஷ்யா போரை நிறுத்த வேண்டும்'' என்று கடந்த வியாழக்கிழமை ஐ.நா.சபையின் உக்ரைன் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது. ஐக்கிய நாடுகள் சபையின் இந்த ஆணைக்கு ரஷ்யா செவிசாய்க்குமா என்பது கேள்விக்குறியே.

உக்ரைனுக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளும், ரஷ்யாவுக்கு சீனாவும் உதவி செய்வதை நிறுத்த வேண்டும். ரஷ்ய - உக்ரைன் தலைவர்கள் நேரில் சந்திக்க வேண்டும். இரு தரப்பையும் சமாதானப்படுத்த ஐ.நா. தீவிரமாகத் தலையிட வேண்டும். இதெல்லாம் நடக்காமல் இந்தப் போர் முடிவுக்கு வருவதற்கு சாத்தியமில்லை.

• கே.சுபானி

> ''பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பின்னும் இரத்தவெறி கொண்ட காட்டேரியாக போர்க்களத்தில் நின்றுகொண்டிருக்கிறது ரஷ்யா. இழப்பதற்கு இன்னும் என்ன இருக்கிறது என்ற நிலையிலும் ''எதிர்கொள்ளத் தயார்...'' என நெஞ்சை நிமிர்த்தி களத்தில் நின்றுகொண்டிருக்கிறது உக்ரைன். மாண்டு கிடக்கும் மனிதத்துக்கு மத்தியில் தமது பலத்தை உலகறியச் செய்ய பசியடங்கா பேய்களாக போர்க்களத்தில் ஆயுதங்களைக் குவித்து உக்ரைனை உசுப்பேற்றிக் கொண்டிருக்கின்றன மேற்குலக நாடுகள்''






உக்ரைன் - ரஷ்யப் போர் ஓராண்டு நிறைவடைந்த நிலையில் உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஈபிள் கோபுரம், உக்ரைன் தேசிய கொடியின் வர்ணமான நீலம் மற்றும் மஞ்சள் நிறத்தில் ஒளிரச் செய்யப்பட்டது.

# சாத்தியமாக வேண்டும் சத்துணவுத் திட்டம்!

**தங்கராஜா யுவராஜ்**

உணவு - உலகத்தில் இந்த ஒரு சொல்லுக்காகவே மனிதன் போராடிக்கொண்டிருக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் ஒருவேளை உணவையாவது உண்டுவிட மாட்டோமா என்று போராடிக்கொண்டிருக்க மறுபுறம், ஒரு கூட்டம் அந்த எண்ணமே இல்லாது உணவை வீண்விரயம் செய்து கொண்டிருக்கின்றது.

உலகின் பல்வேறு நாடுகளில் மனிதர்கள் உணவை கையாள்வதிலும், அதைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். உதாரணமாக ஆபிரிக்க நாடுகள், தெற்காசிய நாடுகளில் பெரும்பாலான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு எமது நாடும் விதிவிலக்கல்ல. உணவுப் பொருட்களின் விலையேற்றம் அதிகமாக இருக்கும் முதல் 5 நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. உலக வங்கியின் கடந்த ஆண்டு மதிப்பீட்டின் படி, உணவுப் பணவீக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் லெபனான் முதலிடத்திலும் அதைத் தொடர்ந்து சிம்பாப்வே, வெனிசுவேலா மற்றும் துருக்கி ஆகியவை உள்ளன.

இந்தப் பட்டியலில் இலங்கைக்கு அடுத்தபடியாக ஈரான், ஆர்ஜென்டினா, சூரினாம், எத்தியோப்பியா மற்றும் மால்டோவா ஆகிய நாடுகள் உள்ளன.

இலங்கையில் உரத்தட்டுப்பாடு காரணமாக விவசாய உற்பத்தி 40வீதம் முதல் 50வீதம் வரை குறைந்துள்ளதாகவும், உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அந்நிய செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது. உரம் மற்றும் எரிபொருள் (நிலத்தை பண்படுத்தல், போக்குவரத்து மற்றும் அறுவடை நடவடிக்கைகளுக்கு) பற்றாக்குறை உணவு உற்பத்தி, விநியோகத்தை கட்டுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு தனவந்த நாடுகள் உதவி வருகின்றன. இருப்பினும் நாட்டு மக்களின் உணவுத் தட்டுப்பாடு தீர்ந்தபாடில்லை. இதில் குறிப்பாக மலையக மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி, சம்பளப் பற்றாக்குறை, தொழில் இன்மை என பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்கும் உணவு பற்றாக்குறையும் போசாக்கின்மையும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதாவது மலையக பெருந்தோட்ட

**பொருளாதார நெருக்கடியால் நாடு பெரும் பாதிப்பை சந்தித்துள்ள நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் முன்னெடுக்கப்படவுள்ள சிறுவர்களுக்கான சத்துணவுத் திட்டம் காலத்தின் தேவையாகும். இது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் போசாக்குக் குறைபாட்டை ஓரளவுக்கேனும் தீர்க்கக் கூடியதாக இருக்கும்**

பகுதிகளில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து இலவச மதிய உணவுத் திட்டத்தின் இணைப்பாளரும், பிரஜா சக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி 'தமிழன்' வார இதழுக்கு கருத்து தெரிவிக்கையில்,

உலக சுகாதார அமைப்பு, உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கமைய, சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கண்காணிப்பின்கீழ், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த உணவு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில், எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் பரீட்சார்த்த நிகழ்வு கடந்த மாதம் கண்டி ரங்கல டக்குவாரி தோட்டப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. அந்த செயற்திட்டம் வெற்றியளிக்கவே இதை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டுசெல்ல எண்ணியதன் விளைவாகவே தற்போது நாடளாவிய ரீதியில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்

இலவச உணவுத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 15 ஆயிரம் சிறார்கள் பயன்பெறுவார்கள். அதன்பின்னர் ஏனையோரையும் உள்வாங்குவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான முழுமையான பங்களிப்பை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் வழங்குகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் பட்டினி வீதமும் அதிகரித்துள்ளது. மலையகத்திலும், இந்நிலைமை மோசமாகவுள்ளது. அத்துடன், சிறார்கள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினையும் காணப்படுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு நடவடிக்கையாகவே அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய இலவச சத்துணவு வேலைத்திட்டம் சிறார்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



மலையகத்தில் ஒன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இந்த செயற்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். அந்தவகையில், மலையகத்தில் காணப்படும் ஆயிரத்து 500 சிறுவர் பராமரிப்பு நிலையங்களை உள்ளடக்கி இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இதன் முதல் கட்டமாக 700 முதல் 1000 சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக எதிர்வரும் ஆறு மாதத்தில் இருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு நடத்திச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் உலக சுகாதார நிறுவனமும், சுகாதார அமைச்சும் இந்த உணவுத் திட்டத்தில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவில் எவ்வளவு கலோரிகள் இருக்க வேண்டும் என்ற பட்டியலையும், அதற்கான அறிவுறுத்தல்களையும் எமக்கு வழங்கியுள்ளன. அதன் அடிப்படையிலேயே சிறுவர்களுக்கான உணவுப் பொதி தயாரிக்கப்படவுள்ளது.

அதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மனிதவள அபிவிருத்தி நிதியமும் இணைந்து இந்த செயற்திட்டத்திற்கான அனைத்துப் பொருட்களையும் அந்தந்த தோட்டங்களில் உள்ள கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்படும். அவை தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் பலருக்கு கேள்விகள் எழலாம். அனைத்து சிறுவர்களுக்கும் இந்த உணவுத்திட்டம் கிடைக்குமா? அல்லது தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரம் கிடைக்குமா என்ற அச்சம் எழக்கூடும். இது குறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை. இந்தத் திட்டத்தின் ஊடாக ஒன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களும் இதனால் பயன்பெறுவர். ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இரண்டு சிறுவர்கள் மாத்திரமே இருப்பார்களானால் அவர்களுக்கும் எமது இந்த திட்டத்தின் ஊடாக உணவு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பெருந்தோட்டப் பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டம் அமையப்பெறவுள்ளதோடு ஏழு முதல் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி இதனை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

அதன்படி இந்த உணவுத் திட்டத்தில் உணவுப் பொதி ஒன்றில் சோறு (சிவப்பரிசி), ஒரு கீரை வகை, ஒரு மரக்கறி, முட்டை மற்றும் யோகட் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளோம். அத்தோடு சில சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு நன்கொடையாக கிடைக்கும் பால், பழச்சாறு போன்றவற்றை உள்ளடக்கிய பூரணமான உணவுப்பொதி ஒன்று எமது சிறுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

உலக வங்கி உட்பட சர்வதேச அமைப்புகள், மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சு உட்பட உள்நாட்டு ஸ்தாபனங்களையும் இணைத்துக்கொண்டு குறித்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று



பாரத் அருள்சாமி
(இலவச மதிய உணவுத் திட்டத்தின் இணைப்பாளர்)

பிரஜாசக்தி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தின் தரவுகளின்படி 6.3 மில்லியன் மக்கள் அல்லது இலங்கையின் சனத்தொகையில் 36 சத வீதத்திற்கும் அதிகமானோர் உணவுப் பாதுகாப் பற்றவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், உணவு பற்றாக்குறை மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக இவர்களில், சுமார் 5.3 மில்லியன் மக்கள் உணவைக் குறைத்து அல்லது உணவைத் தவிர்த்து வருகின்றனர். மேலும் குறைந்தது 65 ஆயிரத்து 600 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளதாகவும் அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக பணவீக்கம், வாழ்வாதார இழப்பு, மற்றும் உணவு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறை காரணமாக இலங்கையில் இந்த நெருக்கடி உருவாகியுள்ளதாகவும் இந்த நிலைமை இன்னும் மோசமடையக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

அத்தோடு, விண்ணை முட்டும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை கடினமாக்கியுள்ளதாக உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த வகையில், சுமார் 6.7 மில்லியன் மக்கள் போதுமான உணவை உட்கொள்வதில்லை என்றும், 5.3 மில்லியன் மக்கள் பகலில் உட்கொள்ளும் உணவின் அளவை குறைத்து வருகின்ற அதேநேரத்தில், 60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் சத்து குறைவான, மலிவான உணவை உட்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான காலசூழ்நிலையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிறுவர்களுக்கான இலவச உணவுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்த செயற்திட்டம் தற்போது இலங்கையில் குறிப்பாக மலையத்திற்கு அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது.

இதேவேளை, வறுமையால் சிக்கித்தவிக்கும் இந்த மலையக மக்களுக்கு பலராலும் உதவிகள் என்ற போர்வையில் செயற்திட்டங்கள் பல கொண்டுவரப்பட்டாலும் அவை அவர்களைச் சென்றடைந்தனவா? என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுகிறது.

உதாரணமாக, கடந்த சில மாதங்களுக்கு முன் மஸ்கெலியா ஆர்ப்பிகோ பிளான்டேஸனுக்கு உட்பட்ட பிரவுன்ஸ்விக் பிரிவில் உள்ள ஏழு தோட்டங்களில் தேயிலை மலைக்கு தொழிலுக்குச் செல்லும் பெண்களுக்கு இலவச மதிய உணவுத் திட்டம் என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அது இடைநடுவே கைவிடப்பட்டது. இவ்வாறு மலையக மக்களின் தேவைகருதி உருவாக்கப்படும் செயற்திட்டங்கள் அவர்களுக்கு நன்மை பயக்காவிட்டாலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தும்விதமாக அமைந்துவிடக்கூடாது.

நாடு இக்கட்டான நிலைமையில் இருக்கும்போது இவ்வாறானதொரு இ.தொ.காவின் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மலையக சிறுவர் சமுதாயத்தை இலக்குவைத்து ஆரம்பிக்கப்படவுள்ள இந்த உணவுத் திட்டம் வெறுமனே அரசியல் நாடகமாக அல்லாது தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.




**(எலக்ரிக் தராசும் ஏமாத்துற எம்.பியும்)**

**கலை** : சரசக்கா தேத்தணி கொண்டாந்தியா. வீட்டுல தூள் முடிஞ்சிக்கா வெறுந் தண்ணியத்தா கொண்டாந்தே தண்ணி தாவோ சாயத்தணிக் கொஞ்சம் தாவே..

**சரசு** : என்னத்தபுள்ள சொல்ல.. காலையிலஇருந்து இந்த தேயிலகாட்டுலத்தா கெடயா கெடக்குறோ ஆனா மாச கடசில குடிக்கிறதுக்கு சாயத்தண்ணி இல்ல. பாத்தியா.. இதுதா வாங்கி வந்த வரோ.. இந்தா புள்ள காலயில ஊத்துனதுதா சூடா இருக்கு..

**கலை** : கொண்டாக்கா கொண்டா.. இன்னக்கி என்னமோ சரியான தண்ணி தாவமா இருக்குது..

**சரசு** : இந்தா குடி புள்ள.. தண்ணிதாவோ எடுக்குதுனா தடுமல்எது புடிக்கப்போகுதோ தெரியல. கவனொபுள்ள.. நோய இழுத்துக்காத..

**கலை** : என்னானு தெரியலக்கா.. நேத்து அந்திக்கி பச்சதண்ணீல குளிச்சே.. சேரலயோ தெரீல...

**சரசு** : அதுதா புள்ள சொல்றது, அந்திபட்டு குளிக்க வேணானு.. இந்தகாலத்து புள்ளங்க எங்க அதலா கேக்குதுங்க.. மாச கடசீல தேத்தண்ணி குடிக்ககொட தூள் இல்ல. இதுல மருந்து நோயினு சொல்லி வீட்டுல இருந்தா நல்லா இருக்கு.

**கலை** : நீ சொல்றது சரித்தாக்கா.. நாம கெடயா கெடக்குற தேயிலகாட்டுல இதுல இருந்து எடுக்குற சாறுலத்தா நம்ப நாட்டுக்கே வருமானோ. ஆனாபாரு நமக்கு கெடக்கிறது என்னமோ சக்கத்தா. அது என்னா லேபர் டஸ்ட்டு.. இதலா எவ்வளோ வயித்தெரிச்ச..

**சரசு** : அதுதாபுள்ள காலாகாலமா கஸ்டப்பட்டு ஒழக்கிற தொழிலாளிக்கி கடசீல சக்க மட்டுதா மிச்சோ.. எங்க நம்ப கங்காணிய காணோ?

**கலை** : ஐயா பனிய மலயில இருக்காருபோல. இங்கன இருந்தா இன்நேரத்துக்கு நெறய கத சொல்லிருப்பாரு..

**சரசு** : என்னபுள்ள கத சொல்றது? அந்த மனுசனுக்கு நம்ப நெலமதானு தெரியு.. என்னா கம்பனிகாரங்களுக்கு பயோ அதுதா புள்ள..

**கலை** : சொல்லயிலயே மேல வாறாருக்கா.. பாரு வந்து சும்மா சத்தம் போடுவாரு..

**சரசு** : ஆமா ஆமா.. அதுதானே அந்த மனுசனோட பழக்கோ.. வரட்டு ஒருகத இருக்கு ஐயாக்கிட்ட கேக்கனு..

**கலை** : என்னா கதக்கா?

**கங்காணி** : (வெற்றிலை எச்சிலை துப்பியபடி) என்னா அங்க ஒரே கதையா இருக்கு வேலையபாருங்கடி.. றாத்த பிரச்சன தெரியுந்தானே?

**சரசு** : பாத்தியா றாத்த கத சொன்னாரே இததா கேக்கனு..

**கலை** : ஐயா கொஞ்சோ வாங்களே ஒரு கத ஒன்னு..

**கங்காணி** : என்னா புள்ள சொல்லு..

**சரசு** : இல்லங்கயா இந்த பொகவந்தலாவையில இருக்க எஸ்டேட் ஒன்னுல எலக்ரிக் தராசுலத்தா நெறுக்கனுனு என்னமோ பிரச்சனத்தானே என்னாங்கயா அது...

**கங்காணி** : ஆ.. அதா, ஆமா அந்த எஸ்டேட்டுல கம்பனிகாறங்க புதுசா எலக்ரிக் தராசுலத்தா நெருக்கனுனு சொல்லி பிரச்சன புள்ளங்க..

**கலை** : இது என்னாடா புதுக்கதயா இருக்கு.. தராசுல நெறுக்குறது பிரச்சனயா? இப்ப நிம்மதியா நெறுக்கவு முடியாதா?..

**கங்காணி** : அதுதா புள்ளங்க கம்பனிகாறங்க எலக்ரிக் தராசுல நெறுக்கனுங்கிறாங்க. அதுல என்னமோ பட்டுன் சிஸ்டமா.. அவுங்களுக்கு ஏத்தமாதி மாத்துறாங்களா.. பத்தாததுக்கு வழமயா கூடைக்கினு சொல்லி ரெண்டுக்கிலோ வெட்டுறது எலக்ரிக் தராசுல பத்துகிலோ வெட்டுறானுங்களா..

**சரசு** : என்னாடாஇது... அநியாயத்துக்குமேல அநியாயமா இருக்கு.. எடுக்குற கிலோவுல இப்ப தராசுக்குனு பாதிகிலோ வெட்டிட்டா என்னாத்தா மிஞ்சு? றாத்த எப்புடித்தா போட்றது?

**கங்காணி** : அதா புள்ளங்க அந்த கம்பனிகாறங்க ஒருநாளக்கி முப்பது கிலோவுக்கு மேல கொழுந்து எடுக்க சொல்றாங்க..

**கலை** : நல்ல கதயா இருக்கே.. நாங்களா என்னா மனுசங்களா? மெஸினா? இருவத்தஞ்சி கிலோவ தூக்கிக்கிட்டே நடந்துபோக முடியல... இதுல முப்பது நாப்பதுனு கேட்டா நாதியத்து போய்ருவோங்கயா.. சீ.. என்ன மனுசனுங்க? கொஞ்சகூட மனசாட்சி இல்லாம..



**கங்காணி** : பொளம்பாதீங்க புள்ளங்க.. அதுக்குத்தா நம்ப தம்பி எம்.பி போய்டு எலக்ரிக் தராசலா வேணா தட்டு தராசுலயே நெறுக்க சொல்லி சத்தம்போட்டு மாத்திருக்காரு.. தெரியுந்தானே நமக்கு ஒன்னுனா கேக்கத்தா நம்ப எம்.பிமார் இருக்காங்களே..

**கலை** : ஆமாங்கயா எல்லாரு ஒரே குட்டயில ஊறுன மட்டத்தா.. என்னா எலக்ஸன் வருது இனி இதவச்சி ஓட்டு வாங்கலாந்தானே.. ஏய்யா சும்மா நீங்கவேற..

**கங்காணி** : ஒங்களுக்காக ஒங்க சார்பா பேசுனாலு பெரச்சனத்தான்டி என்னத்த சொல்ல.. சரி சரி நாங்களு எலக்ரிக் தராசு கேப்பமா...?

**ம.அகிலேஸ்**

# தூறல்கள்

## மீண்டும் பள்ளிக்கு

ஊமயா மொழி பேசி
எங்களோட ஆயிரம் கத
சொல்லும் அந்த.
சுண்ணாம்பு பெருஞ்சுவரு...

சுத்தி சுத்தி ஓடியாடி
எத்தன சந்தோசங்கள்
காக்கா குருவி மாதிரி
சுதந்திர பறவை தானே....

வகுப்பறை மேச மேல
காதோட காது வச்சி
அடிப்பக்கோ தட்டினாக்க
உடுக்கு சத்தம் போல
அற்புதமா ஓச வரும்....

பத்து மணி தாண்டும் முன்ன
வயிறு பசிக்கிதுன்னு
சாப்பாட்ட திருடி தின்ன
சளைக்காத ஞாபகங்கள்...

ராகம் போட்டு சொல்லுமந்த
குட்மோர்னிங் வார்த்தைக்கு
எங்கு போயி தேடுனாலும்
சேந்து நிக்க வார்த்தையில்ல...

ஆண்டுகள் மாறி இன்று
எல்லாமே மாறிப்போச்சு
ஏதோவோர் சந்திப்புக்காய்
பாடசாலை போன நேரம்
என்னம்மோ தெரியவில்ல
கைகளெல்லாம் நீண்டு போயி
செவுத்த தடவியதும்
ஒடம்பே சிலிர்கிறதே...

வயசுல பாதி காலம்
பெத்த தாயப்போல
சொமந்திருந்த பள்ளிக்கூடம்
அதுதானோ இந்த தாகம்...

திரும்ப ஒரு தடவ
தெசய திருப்பிவிட்டு
பள்ளிக்கூட பாதத்துள
பசியாற சாப்பிடணும்...
நண்பரெல்லாம் சேர்ந்து
அப்போ ஒன்னாக
நின்ன எடம்
இப்ப ஒத்தயில மனசு.
ஏதோ செய்கிறது...

*(என் நெஞ்சம் கொண்ட ஈரம்)*
*எம்.ராமதாஸ்*
*இறம்பொடை*

## கோழிக் குஞ்சு

குஞ்சு குஞ்சுக் கோழி
கொத்தி தின்னும் கோழி
அஞ்சி அஞ்சி ஓடும்
அம்மா சிறகால் மூடும்

வெள்ளை மஞ்சள் குஞ்சு
வெண்ணிற மேனி பஞ்சு
கிளறி இரையைத் தேடும்
கீச்சு கீச்சு பாடும்

சின்னச் சின்னக் கால்கள்
சீராய் ரெண்டு கண்கள்
கண்ணை யது கவரும்
காணும் போதே வளரும்

சிறகு முளைத்த குஞ்சு
சீற்ற மில்லா குஞ்சு
சேர்ந்து வெளியில் திரியும்
சேயாய் பணிகள் புரியும்

வண்ண வண்ணக் குஞ்சு
வடிவு நிறைந்த குஞ்சு
என்னை வந்து கொத்தும்
எழிலாய் தாயை சுத்தும்

*- வரக்காமுறையூர்*
*ராசிக்-*

## மண்வாசத்திலிருந்து....

*முடிவு சொல்லி முடிச்சி வைகா*

உச்சி முன் வகுப்பும்
உதட்டோரப் புன்சிரிப்பும்
மச்சிக்கு நல்லாரிக்கி அவ
மனசிலென்ன கல்லாரிக்கி?

அன்பால் அழைப்பாண்டு
ஆவலில ஓடி வந்தன்
மொகத்த கிறுக்கிக்கி - இப்ப
மொக்காடு போட்டுப் போறா

பேசுவா எண்டுதான் நான்
பேதலிச்சி காத்திருந்தன்
வேப்பங்கா போல கையிக்க
வெறுக்கா அவ என்னெரியா..?

அச்சி மாசம் செய்வமெண்டு
ஆசைய வளத்துப் போட்டு
நோம்புக்கு முன்ன அவ
நோக்காடா இரிக்கிறென்ன..?

வேக்காடு என்னெண்டு
வெளக்காம அவ நிண்டு
ஆக்காட்டி போலென்ன
அலையவெச்சி போறென்ன..?

கண்ணிருண்டு வருகிறது
கதறியழத் தோணுறது
என்ன முடிவெண்டாச்சிம்-புள்ள
எனக்கொழுப்பம் செல்லிப் போகா!

*- ரோஷான் ஏ.ஜிப்ரி -*
*வாங்காமம், இறக்காமம்.*

## தமிழே அமுதே...

தமிழே அமுதே தரணியின் விழுதே
தாகம் தீர்த்திடும் மொழியின் சுனையே
நலம் விளைக்கும் நற்றமிழ் மொழியே
நானிலம் எங்கிலும் உந்தன் கலையே

இயன் மொழியே இனிமையின் கடலே
ஐந்திலக்கணம் பறையும் இறையனார் வழியே
கொள்ளைச் சிறப்புகள் கூடிட்ட தமிழே
முல்லை மலராய் மணக்கும் மொழியே

பத்துப்பாட்டு எட்டுத்தொகையில்
வீரமும் கொடையும்
புறத்திணை அகத்திணையில்
பகுத்திட்ட வரலாறும்

அறவழிக்குத் திருக்குறளும்
அன்பில் நெகிழத் திருவாசகமும்
பன்னூறு இலக்கியங்கள்
பாங்காக வளம் சேர்க்கும்

இயற்கையாக எளிமையாக
இலக்கணத்தின் செழுமையாக
இடர்களின்றிய ஒலியாக
அமைந்திட்ட எம் தாய்மொழியை

இதயத்தின் துடிப்பாயெண்ணிப் போற்றுகிறோம்
ஆழ்ந்தகன்று அதைக்கற்றிடவே தேடுகிறோம்

நானிலத்தில் உன்னமிழ்தம் அருந்திட விளைகின்றோம்
நித்தியமாயுன் பெருமை ஓங்கிட
வாழ்த்துகிறோம்

நயங்குன்றாத் தூயதமிழ் வளர்கவே
நனிசிறந்த நல்மொழியே நீ வாழ்கவே

*Dr ஜலீலா முஸம்மில்*
*ஏறாவூர்*

# தமிழன் தர்பார்



இது எங்க ஏரியா

## புதுக் குரங்கு

கொஞ்சம் இடைப்பட்ட காலமாக நான்காவதாக ஒரு குரங்கு மற்ற மூன்று குரங்குகளுடன் இடம்பிடித்துள்ளது...
அப்படி என்ன அந்த குரங்கிடம் அதிசயம்..
இது மற்ற மூன்று குரங்குகளின் குணங்களையும் மொத்தமாக கொண்டுள்ளது...
அது எப்படியென்று கேக்கிறீங்களா...?
யாரையும் பார்க்காது.! யார் பேச்சையும் கேட்காது.! யாரிடமும் பேசாது.! தனியா உட்கார்ந்து செல்போன் நோண்டிகிட்டே இருக்கும்!



## சைக்கிள்ல இவ்வளவு விசயம் இருக்கா..?

தினமும் சைக்கிள் ஓட்டுபவனால் இலங்கை மட்டுமல்ல உலகப் பொருளாதாரமே சீரழியும்...
ஆச்சரியமா இருக்கா? தொடர்ந்து படிங்க.....
ஏன்னா அவன் கார் வாங்க மாட்டான்...
அதற்காக கடன் வாங்கவும் மாட்டான்...
வட்டியும் கட்ட மாட்டான்...
பேங்க் பைனான்ஸ் கம்பெனிக்கு சல்லி பைசாவுக்கு கூட பிரயோஜனம் இல்லாதவன்...
கார் இன்சூரன்ஸ் பண்றதுக்கு வர மாட்டான்...
இந்த பெற்றோல் டீசல்.... ம்ஹும்...
வாய்ப்பே இல்ல...
இவனால் அமெரிக்கா, சவூதி அரேபியாவுக்கும் கூட எந்த பயனும் இல்ல... சர்வீஸ் ஸ்பேர் பார்ட்ஸ் எதற்கும் இவன் செலவு செய்யறது இல்ல...
பார்க்கிங் கட்டணம்னு பெருசா எங்கேயும் செலுத்த மாட்டான்...
இதெல்லாம் போய்த் தொலையட்டும்னு உட்டா...
இவனுக்கு சுகர் வராது... இதய நோய் வராது... குண்டாகவும் மாட்டான்...
ஆஸ்பத்திரி, டாக்டர், மருந்து கடை இதெல்லாம் இவனுக்குத் தேவையே இல்லை...
உலகப் பொருளாதாரம் வளர இவன் எதுவும் செய்ய மாட்டான்..



## ஏழு ஜென்மம்!


ஒரு நாள் சித்திரகுப்தன் வருத்தமாக பிரம்மனிடம் சொன்னார்,
''பெண்கள் தொடர்ந்து ஆண்டுதோறும் வரலட்சுமி பூஜை செய்து வந்தால், இப்பொழுது இருக்கும் கணவனே, ஏழு ஜென்மத்துக்கும் கணவனாக அவர்களுக்கு கிடைப்பான், ஆனால்,



அதில் ஒரு சிக்கல் இருக்கிறது.''
''என்ன சிக்கல்?'' பிரம்மா வினவினார்.
''பெண்கள் அதே கணவன்தான் வேண்டும் என்கிறார்கள். ஆனால், ஆண்கள் வேறு பெண்தான் வேண்டும் என்கிறார்கள், அதுதான் சிக்கல்.
இருவரையும் திருப்தி செய்ய, என்ன செய்ய வேண்டும்?''
என்றார் சித்திரகுப்தன்.
இடையில் குறுக்கிட்ட நாரதர் சொன்னார்,
''பூமியில் எல்லாம் தெரிந்த ஞானி ஒருவர் இருக்கிறார், அவர் பெயர் சாணக்கியர், அவரைப் பாருங்கள், இதற்கு தீர்வு கிடைக்கும்''
என்றார்.
சித்திரகுப்தர், சாணக்கியரை சென்று பார்த்தார். சாணக்கியரும் எவ்வளவோ யோசனை செய்து பார்த்தார், ஒன்றும் சரிவரவில்லை.
கடைசியாக, அந்த கணவர்களிடமே கேட்டு விடுவோம் என்று முடிவு செய்து, அவர்களிடம் பேசினார்கள்.
கணவன்மார்களில் ஒருவர், ஒரு யோசனை சொன்னார்.
அதைக்கேட்டு சாணக்கியர் அவரை கட்டிப்பிடித்து வாழ்த்து கூறிவிட்டு,
''இதை விட சிறந்த தீர்வு வேறு எதுவும் இருக்க முடியாது'' என்று கூறிவிட்டு இதை அந்த பெண்களிடமே கேட்டு விடுங்கள் என்று சொன்னார்.
இந்த தீர்வை, சித்திரகுப்தன் அந்தப் பெண்களிடம் கூறினார். அதற்கு அந்த பெண்கள், சித்திரகுப்தனை கையெடுத்து கும்பிட்டுவிட்டு
''எங்களுக்கு அடுத்த ஜென்மமே வேண்டாம்'' என்று சொல்லிவிட்டார்கள் .
''அப்படி என்னதான் தீர்வு அது?''
சித்திரகுப்தன் அந்த பெண்களிடம், ''பிரம்மா நீங்கள் கேட்ட அதே கணவன்தான் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டார், ஆனால், ஒரு நிபந்தனை, ஏழு ஜென்மத்திற்கும் அதே மாமியார்தான் இருப்பார், அதற்கு உங்களுக்கு சம்மதமா என்றார் ....!!!


## அண்டா குண்டா

சிவன் கோயிலில் பெருமாள் சிலை இருக்கிறது. ஆனால், பெருமாள் கோயிலில் சிவன் சிலை இல்லையே, ஏன்?
இந்த வினாவிற்கு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அளித்த விளக்கம் இதோ,
ஒரு கூட்டத்தில் ஒரு பெண்மணி வாரியாரிடம்,''ஐயா நான் பெரும்பாலும் சிவன் கோயில்களில் பெருமாள் சந்நிதியைப் பார்த்திருக்கிறேன். ஆனால், ஏன் பெருமாள் கோயில்களில் சிவன் சந்நிதி இருப்பதில்லை?'' என்று கேட்டார்.
அதற்கு வாரியார் திருப்பிக் கேட்டார்:
''அண்டாக்குள்ள குண்டா போகுமா, குண்டாக்குள்ள அண்டா போகுமா?''
அந்த அம்மையார் சிறிதுநேரம் யோசித்த பிறகு, ''சுவாமி, எனக்குத் தெரிந்தவரை அண்டா தான் பெரியது, அதனால் அண்டாக்குள்ள தான் குண்டா போகும்'' என்றார்.
உடனே வாரியார் சிரித்துக்கொண்டே ''அது போலத்தான் அம்மா சிவன், அவர் அண்டா, நாராயணன் குண்டா, அதனால்தான் பெருமாள் கோயில்களில் சிவன் சந்நிதி இருப்பதில்லை, ஆனால், சிவன் கோயில்களில் பெருமாள் சந்நிதி உள்ளது'' என்று சொன்னார்.



## பதவிக்கு அலையும் கழுதை

மன்னன் ஒருவன் வேட்டையாடப் போவதற்கு முன் தனது அமைச்சரை அழைத்து, ''மழை வருமா?'' எனக் கேட்டான்.
''வராது'' என்றான் அமைச்சன்.
வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த விவசாயி ஒருவன் கொஞ்ச நேரத்தில் மழை வரும் என எச்சரித்தான்.
அதைப் பொருட்படுத்தாமல் போன மன்னன், வேட்டை ஆடிக் கொண்டிருந்தபோது கடும் மழை வந்து நன்றாய் நனைந்துபோனான்.
திரும்பும் வழியில் அந்த விவசாயியைச் சந்தித்து, ''மழை வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' எனக் கேட்டான்.
அவனோ, ''மன்னா, எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். மழை வரும் முன் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்'' என்றான்.
உடனே மன்னன் அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டு கழுதையை அமைச்சராக்கினான்.
இக்கதையை ஆபிரஹாம் லிங்கன் கூறிவிட்டு சொன்னார், ''அதில் தான் மன்னன் ஒரு தவறு செய்துவிட்டான். என்னவெனில், அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளும் ஏதாவது பதவி வேண்டும் என அலைகின்றன.''



## தன்னம்பிக்கை கதை

ஒரு அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான். கோட்டைக் கதவைக் கைகளால் திறந்து தள்ள வேண்டும். வெற்றி பெற்றால் நாட்டின் ஒரு பகுதி தானமாக வழங்கப்படும். தோற்றால் தோற்றவனின் கை வெட்டப்படும். மக்கள் பலவாறாக யோசித்து, பயந்து யாரும் போட்டியில் கலந்துகொள்ளவில்லை. ஒரே ஒரு இளைஞன் மட்டும் போட்டியில் கலந்துகொள்ள முன் வந்தான்.

''போட்டியில் தோற்றுவிட்டால் கைகளை வெட்டி விடுவார்கள். உன்னுடைய எதிர்காலம் என்னவாகும்?'' என்றார்கள். அவன் சொன்னான், ''ஐயா வென்றால் நானும் ஒரு அரசன், தோற்றால் கைகள்தானே போகும். உயிரில்லையே'' என்று கூறிவிட்டு கோட்டைக் கதவை இளைஞன் தள்ளினான். என்ன அதிசயம்! கதவு சட்டெனத் திறந்துகொண்டது. ஏனென்றால், கோட்டைக் கதவுகளில் தாழ்ப்பாள் போடப்படவில்லை. திறந்துதான் இருந்தது. பல பேர் இப்படித்தான் இருக்கிறார்கள். தோற்று விடுவோமோ, எதையாவது, இழந்து விடுவோமோ என்று எதற்கும் முயற்சிக்காமலேயே விட்டு விடுகிறார்கள்.



அனைவரும் அறிந்த 'முயல்–ஆமை' கதையில் முயலின் தோல்விக்கு முயலாமையே'' காரணம்.



காரைக்கவி

# சீத்துவக்கேடு 228

விளையாட்டுப் போட்டி எண்டதுந்தான் எங்கட பழந்தமிழர்கள் விளையாட்டுகளுக்கு சரியான முக்கியத்துவம் குடுத்தவை எண்டது ஞாபகம் வருகிறது. உவகை எண்ட மெய்ப்பாட்டை மனுஷனுக்கு தரக்கூடிய நான்கு வகைக் களங்களில விளையாட்டும் ஒண்டு எண்டு தொல்காப்பியர் சொல்லுறார்.

தொல்காப்பியர் சொல்லுறதிலை இருந்து மகிழ்ச்சியை விளைவிக்கும் ஒரு செயலே விளையாட்டு எண்டது வடிவா விளங்கும் எண்டு அப்பு சொன்னது ஞாபகம். தொல்காப்பியம் கெடவரல், பண்ணை எண்டு ரெண்டு விதமான விளையாட்டுகளைச் சொல்லுது.

உதில கெடவரல் எண்டது நிலத்தில விளையாடுற விளையாட்டு எண்டும் பண்ணை எண்டது தண்ணியில விளையாடுற விளையாட்டு எண்டும் விஷயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுறவை எண்டுவார் அப்பு. விளை எண்டால் விருப்பம் எண்டபடியால விரும்பியாடுவது விளையாட்டு எண்டு உவை விளக்கம் சொல்லுவினம்.

அந்தக் காலத்தில ஆம்பிளை, பொம்பிளை எல்லாரும் தங்கட தங்கட வயதுக்கு ஏத்த மாதிரி எக்கச் சக்கமான விளையாட்டுகளை விளையாடி இருக்கினம். அதிலையும் பொம்பிளைப் பிள்ளையள் வீட்டால வெளியில போய் தங்கட சிநேகிதிகளோட விளையாட வேணும் அப்பிடி விளையாடினா அவையின்ரை உடம்பும் மனசும் வளரும்.



அப்பிடி பொம்பிளைப் பிள்ளையளை விளையாட விடாமை வீட்டுக்கை அடைச்சு வைச்சா அவையின்ரை வளர்ச்சி இல்லாமல் போறதோடை உண்மையில அது அறமும் கிடையாது எண்டு எங்கடை ஆக்கள் அந்தக் காலத்தில நம்பி இருக்கினம் எண்டு எப்பவோ சொன்ன ஆச்சி உந்த விசயம்

***"விளையா டாயமொடு ஓரை யாடாது***
***இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்***
***அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்....."***

(நற்றிணை 68) எண்ட பிரான் சாத்தனார் பாடிய நற்றிணைப் பாட்டில இருக்கெண்டா.

உங்கை சிலர் என்னமோ அந்தக் காலத்தில தமிழ்ப்பெண்டுகளுக்கு ஒரு சுதந்திரமும் இல்லை எண்டு ஆடு புல்லுத் திண்ட மாதிரி ரெண்டொரு புத்தகங்களை வாசிச்சுப்போட்டு விளக்கம் குடுக்கினம்.

ஆனால், அந்தக் காலத்தில எங்கட பெண்டுகள் எத்தினை விளையாட்டுகள் விளையாடி இருக்கினம் எண்டது சங்கப்பாட்டுகளிலை தாராளமா இருக்கெண்ட ஆச்சி, முந்தி எங்கடை பெண்டுகள் இப்ப நடக்கிற அழகுராணிப் போட்டி மாதிரி அந்த நாளையிலையும் நடந்த அழகுராணிப் போட்டியிலையும் பங்குபற்றி இருக்கினம்.

ஆனால், இப்ப அரைக் கோவணத்தைக் கட்டிக்கொண்டு நெளிஞ்சு நெளிஞ்சு வழுக்கி வழுக்கி பூனை நடை நடக்கிறமாதிரி நடக்காமல் ஒழுங்கா அதில தங்கடை வடிவுகளைக் காட்டி இருக்கினம். ஆனால், அவை உப்பிடி தங்கட வடிவுகளைக் காட்டேக்கை இப்ப மாதிரி வயதுபோன கிழடனவையைக் கொண்ணந்து ஆவேண்டபடி சாத்துவாய் ஊத்த இருந்து புள்ளி போட விடாமை பெண்டுகளுக்கு பெண்டுகள்தான் புள்ளி போட்டிருக்கினம் எண்ட ஆச்சி,

பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடின

***"கானப் பாதிரி கருந் தகட்டு ஒள்வீ***
***வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்***
***சில் ஐங் கூந்தல் அழுத்தி மெல் இணர்த்***
***தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்***
***இயங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலம்புநகச்***
***சில் மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலி"*** (அகம் 261) எண்ட அகநானூறுப் பாட்டிலை உந்த விஷயம் சொல்லிக்கிடக்கு எண்டா.



உலா மகளிர் எண்டிற பெண்டுகள் தங்கடை வடிவுகளைக் காட்டிற எழில் உலாக் காட்சி நடக்கிறதுக்கு தேவையான எல்லா ஆயத்தங்களும் முடிஞ்சிருக்கு. புள்ளியள் போடுகிற பெண்டுகளும் தயாரா இருக்கினம். இந்தா ஒருத்தி ஒயிலாக தேன் ஒழுகிக்கொண்டு இருக்கிற பூக்களிலை செய்த பூங்கொத்தை கொண்டிருக்கிற தன்ரை கையளை ஆட்டி ஆட்டி மேடையிலை நடக்கிறாள்.

அவள் அப்படி நடக்கேக்கை அவளின்ரை காப்புகள் ஒண்டோடை ஒண்டு முட்டுப்பட்டு சத்தம் எழுப்புது.


வண்ண வண்ணப் பூக்களை தன்ரை பின்னலிலை கட்டினபடி நிலம் நோகாமல் அவள் நடந்தாலும் அவளின்ரை கால்சங்கிலியிலை இருந்து வாற ஓசை அங்கை இருந்தவையின்ரை உயிரைப்போய் உரசிப்போட்டு வருகுது.

அப்படி பிசகாத கால இடைவெளியில கை வீசியும் இன்னிசை சிந்திக்கொண்டு நடந்து வந்த அவளுக்கு புள்ளிகளைப் போட்ட பெண் நடுவர்கள் அடுத்த ஆள் வரும்வரையும் காத்துக்கொண்டு இருக்கினம் எண்டது இந்தப் பாட்டுக்குப் பொருள் எண்டு ஆச்சி பொருளையும் சொன்னா.

**(இன்னும் ஆடுவம்)**



# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம்**
**ஜோதிட திலகம் சிவஸ்ரீ**
**வெங்கட சுப்ரமணிய**
**குருக்கள்**

### மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

பணவரவுக்குக் குறைவில்லை. அவசியத் தேவை என்றாலும்கூட இப்போது கடன் வாங்குவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் மூலம் பணவரவு உண்டு. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும். சக ஊழியர்களின் விடயங்களில் தலையிடவேண்டாம். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும். பணியில் இருக்கும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

### ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பணிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாரப் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் கடுமையாக உழைப்பீர்கள். அதற்கேற்ற பாராட்டும் பதவி உயர்வும் கிடைக்கும். ஆனால், சக ஊழியர்களால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம்போல் இருக்கும். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். பிள்ளைகள் மூலம் சிலருக்கு பணவரவு கிடைக்கக்கூடும்.

### மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

தேவையான அளவுக்கு பணவரவு இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கி, அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், கூடுதல் செலவுகள், அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே ஏற்படும். புதிய முதலீடுகளைச் செய்ய நினைத்திருந்தால் அதற்கு ஏற்ற காலம். அதன் மூலம் கூடுதல் இலாபம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கவும், அதன் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்படவும் கூடும்.

### கடக ராசி அன்பர்களே!

கடகம்

பொருளாதார வசதி சுமாராகத்தான் இருக்கும். செலவுகளும் குறைவாகவே இருக்கும் என்பதால் பிரச்சினை எதுவும் இல்லை. குடும்பம் தொடர்பான எந்தவொரு முடிவையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது. தந்தையுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் சற்று தாமதமாக முடியும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு சக பணியாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. பணியில் இருக்கும் பெண்களுக்கு கூடுதல் நேரம் பணி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

பணவரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தால், சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் ஆதாயம் கிடைக்கும். வீடு, நிலம் தொடர்பான முயற்சிகள் ஆதாயம் தருவதாக முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றமான திருப்பம் ஏற்படும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும்.

### கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

எதிர்பார்த்ததைவிட பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. பிறருக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன் வந்து சேரும். உடல் நலன் சிறிய அளவில் பாதிக்கப்படும். திருமண முயற்சிகள் சற்று இழுபறிக்குப் பின்னர் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வேலைக்கு விண்ணப்பம் செய்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். பெண்களுக்கு உற்சாகமான வாரம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் ஏற்படாது. பணியில் இருக்கும் பெண்களுக்கு நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

### துலா ராசி அன்பர்களே!

துலாம்

பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். ஓரளவுக்கு பணப்புழக்கம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் சந்திப்பு மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அரசாங்க வகையில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ எதிர்பார்க்கலாம். வியாபாரத்தில் பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள். சக வியாபாரிகள் தங்கள் வியாபார விடயமாகத் தங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பணியில் இருக்கும் பெண்கள் சக ஊழியர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் கவனம் செலுத்தவும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். பணவரவு திருப்தி தரும். வீண்செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்கள் உதவி செய்வார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வழக்குகளில் பொறுமை அவசியம். குடும்பத்தில் இருப்பவர்கள் கணவன் - மனைவிக்கிடையே சில பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால் அவற்றைப் பொருட்படுத்தாமல் இருப்பது இருவருக்கும் நல்லது. அலுவலகத்தில் நீங்கள் எவ்வளவுதான் உழைத்தாலும் உரிய அங்கீகாரம் கிடைக்காது. சக பணியாளர்களிடம் எதிர்பார்க்கும் உதவி கிடைக்காது. பொறுமையைக் கடைப்பிடிப்பதுதான் நல்லது. வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். கணவரின் மூலம் தேவைக்கு அதிகமாக பணம் கிடைப்பதால் சிறிது சேமிக்கவும் முடியும்.

### தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திருமண வயதில் உள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அதிகாரிகள் கண்டிப்பு காட்டினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம், வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் உற்சாகம் தரும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஊக்கத்துடன் செயல்படுவார்கள். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் கிடைக்கும். பணியில் இருக்கும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

### மகர ராசி அன்பர்களே!

மகரம்

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். பணியின் காரணமாகப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்றுசேரும் வாய்ப்பு ஏற்படும். கடன்கள் விடயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. அலுவலகப் பணியின் காரணமாக சிலர் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதில் கவனம் தேவை. சக வியாபாரிகளிடம் சற்று எச்சரிக்கையாக இருக்கவும். விற்பனையும் இலாபமும் ஓரளவுக்குத்தான் இருக்கும். பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகளின் காரணமாக சற்று சோர்வு ஏற்பட்டாலும் கணவரின் அன்பும் உற்சாகம் தரும். பணியில் இருக்கும் பெண்களுக்கு பணிச்சுமை குறைவது உற்சாகம் தருவதாக இருக்கும்.

### கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

வருமானம் திருப்தி தருவதாக இருக்கும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வழக்குகளில் வழக்கறிஞரின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவது நல்லது. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். செலவுகளில் திட்டமிடல் அவசியம். அலுவலகத்தில் சலுகைகளுடன் நிர்வாகத்தினரின் ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். கடையை விரிவுபடுத்தும் முயற்சி சாதகமாக முடியும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி வரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

### மீன ராசி அன்பர்களே!

மீனம்

இந்தவாரம் சற்று பொறுமையுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டும். தொலைதூரத்தில் இருந்து கிடைக்கும் செய்தி சற்று சஞ்சலப்படுத்தும் என்றாலும் பாதிப்பு இருக்காது. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். தாய்வழி உறவினர்களுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். சிலருக்குப் பணியிடத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் விஷயத்தில் நன்றாக யோசித்து இறங்கவும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். பணியில் இருப்பவர்களுக்கு திருப்தி தரும் வாரம். சலுகைகளும் கிடைக்கும்.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை
## (1823 -1910)

சித்துடுக்க ஓசகேட்டு
ஓடிவரும் மாரியம்மா
வள்ளியம்மே கிழவிமேல
சச்சிரவா எறங்கிவிட்டா...

மலைநாட்டு
நெறிமுறையில்
மாரியம்மன் தாலாட்டு
மகத்தான ஒன்று...

உடுக்கையொலி
உயிர் கொடுக்க
உயிரான அம்மனை
உருகி அழைக்கும்
உயிருள்ள பாட்டு...

அதோ பாடுகிறாள்
பாட்டி வள்ளியம்மா....

"உடுக்க சத்தோ
கேக்குதப்போ
கோப்பிக்காடு
தெறிக்கிதப்போ
மலைநாட்டு பூமியில
ஆத்தா புகழ்வீசுதப்போ...

ஆத்தா நீ மவராசி
மதுரயில மீனாட்சி
காஞ்சியில காமாட்சி
எம் முன்ன வாடி
ராக்காச்சி...

பொங்க படையல்வெச்சி
கற்பூரம்
கொளுத்திவெச்சி
றொம்ப
நேரம்காத்திருக்கே
வந்திருந்து போயிடடி....

பச்சப்புள்ள மொகம்
பாரு
பால்வடியும் வாய் பாரு
நீ போட்டிருக்க
முத்தப் பாரு
முடியாத தேகம் பாரு....

செகப்பு நெற சீலக்காரி
குங்குமத்து
சொந்தக்காரி
மஞ்ச மொகத்தழகி...
எறங்கி வர வேணுமடி...

ஆடாத பேயி எல்லாம்
ஆத்தா உன்
முகம்பாத்தா
அலண்டு போயி நிக்குமடி
அண்டங்காக்கும்
மாரிமுத்தே...

நடுசாம நேரத்துல
நரி போகும் வேளையில
நடைபயணம்
செய்பவளே
நல்ல முத்து மாரியரே....

முத்த நீ பொருக்கிக்கிட்டு
முத்துமால செஞ்சிக்கடி
முத்தான ஒம்முகத்தில்
முத்தினொளி வீசுமடி....

ஆடிமழ ஆத்தா பேயிதடி
ஆனந்தம்மா நீயும்
நனைஞ்சிடடி
ஆடிக்கூழு ஆத்தா
குடிச்சிப்புட்டு
அத்தங்கர பக்கம்
போயிடடி....

காட்டுச்சிங்கம் அம்மா
உன் வாகனமாம்
அந்த கரும்புலியோ
உனக்கு மாலைகளாம்...

அஞ்சித்தல நாகமம்மா..
நீ தலைசாய்க்கும்
பஞ்சுமெத்த
உன் தங்கக்காலு
பாதம் பட்டா
ஆத்தா பட்ட மரம்
செழிக்குமடி..."

கோப்பிக்காடு
மிரண்டு போக
வள்ளியம்மே கிழவியோட
மாரியம்மே தாலாட்டு
கோப்பிக்காட்டு
மக்களுக்கு
வரமாக மாறியது....

கிழவியோடு
மருத்துவங்கள்
பக்தியோட
கிழம்பிவிட
மீண்டும் வருகிறது
தீராத நோய்களது....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்


எம் ராமதாஸ்
இறம்பொடை

---

தமிழன் சிறுகதை

# சித்தியின் வருகை

எஸ். ஏ. கப்பார்.



சித்தி... சித்தி... சித்தி... எப்ப பார்த்தாலும் சித்திதான் சீறிப் பாய்ந்தாள் அக்கா.

சிடுமூஞ்சி. இப்ப என்ன நடந்ததென்று ஆத்திரப்படுறாய்? சொல்ல வந்ததை என்னவென்று காது கொடுக்காமலே கோபப்பட்டால் எப்படி? நானும் எனது தொனியைக் கடுமையாக்கினேன்.

அக்கா! நீ நினைப்பதுபோல சித்தி மோசமானவ இல்ல. ஆரம்பத்தில நானும் சித்திமேல வெறுப்பாகவும் கோபமாகவும்தான் இருந்தேன். மாமா வந்து எல்லா விடயங்களையும் தெளிவாக விளங்கப்படுத்தி நம்மட சம்மதத்தைப் பெற்ற பிறகுதானே வீட்டுக்கு சித்தியைக் கூட்டிவந்தார். சித்தி புறப்படும் வேளையாவது நீ ஒரு வார்த்தை பேசேன்.

நான் தொடர்ந்தேன்.

அக்கா எதையும் காதுக்கு எடுத்துக்கொள்ளவில்லை. அமைதியானேன்.

நான்கு வருடங்களுக்கு முன்...

சில வருடங்கள் சுகயீனமுற்றிருந்த எங்கள் அம்மா அவ்வளவு சீக்கிரம் எங்களை விட்டுப் பிரிந்துவிடுவார் என கனவிற்கூட எண்ணியதில்லை. கவலையை மறப்பதற்கு பல மாதங்களாயின. அம்மாவின் மரணம் சில காலம் அக்காவின் பிள்ளைகளுக்கும் அக்காவுக்கும் பெரும் இழப்பாக இருந்தது. மறுபுறம் அப்பாவின் நிலைமை பெரும்பாடாகிவிட்டது. முன்புபோல தனது வியாபாரத்தில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. ஏனோ தானோவென்று தனது கடமைகளை நிறைவேற்றுவதை அவதானிக்க முடிந்தது.

அவ்வாறு நாட்கள் நகர்கையில் ஒரு நாள் மாமா எங்களது வீட்டிற்கு வந்தார். மாமா மீது எங்களுக்கு அபரிதமான மரியாதை. அவரது வார்த்தைக்கு யாரும் மறுப்புத் தெரிவிப்பதில்லை. கதைக்கும்போது இடையில் குறுக்கறுத்து ஒருபோதும் பதிலளிப்பதுமில்லை.

இஞ்ச பாருங்க. எனக்கும் பெரும் ஆச்சரியமாத்தான் இருக்கு. இது எப்படி சாத்தியமானது என்று எனக்கு தெரியல. நேத்து தம்பி சமீம் அவரது வீட்டுக்கு வரச்சொல்லி போனனான். தம்பி சமீம் அவர்ர பெண்டாட்டியையும் கூட்டிவந்து அம்மாவுக்கு துணையா அந்த வீட்டிலதான் இருக்கார். அம்மாவுக்கு ஒரேயொரு மகன். சமீம் தம்பிக்கு பிள்ளைகளும் இல்ல. அவரது அப்பா காலமாகியும் பல வருடங்களாகிவிட்டன.

மாமா என்ன சொல்ல வருகிறார் எனப் புரியாமல் அக்காவும் நானும் ஒருவரையொருவர் அடிக்கடி பார்த்துக் கொண்டோம்.

மாமா தொடர்ந்தார்.

தம்பி. அவவும் உங்க அப்பாவும் ஒரே வகுப்பில படிச்சவங்களாம். படிச்ச காலத்துல நல்ல நண்பர்களாகவும் இருந்திருக்காங்க. உங்க அம்மா மரணத்திற்குப் பிறகு அவ உங்க அப்பாவோட கதைச்சிருக்கா. ஓங்க அப்பா ஆரம்பத்தில அடியோட மறுத்திருக்காரு. அப்பாவ முழுமையா கவனிக்கிறதுக்கு ஒண்ட அக்காவாலோ உன்னாலேயோ முடியா. நீயும் வேலைக்குப் போற. அவவும் வேலைக்குப் போற. அக்காவுக்கு சின்னப் பிள்ளைகளும் ரெண்டு. அப்பாவுக்கும் உடல் நிலை அவ்வளவு நல்லா இல்ல. அதனால உங்கப்பாவ அவ மறுமணம் செய்து உங்க அம்மாவின் வீட்டுக்கே வந்து இருக்கப்போறாவாம்.

சிறிது நேரம் தலையைச் சொறிந்துவிட்டு மாமா தொடர்ந்தார். இத ஆரம்பத்தில தம்பி சமீமும் மறுத்திருக்கார். பிறகு அம்மா சொன்ன காரணங்களை நியாயமா கருதி ஒத்துக்கிட்டிருக்கார். அதனால உங்க அப்பாகிட்ட கதைக்கிறதுக்கு முன்னே உங்கட சம்மதத்தைக் கேட்கணுமென்றுதான் வந்தனான்.

முதற்தடவையாக மாமாவின் பேச்சுக்கு இடைநிடுவே குறுக்கறுத்தாள் அக்கா.

என்ன நியாயம் மாமா இது? யாரோ ஒருவளைக் கூட்டி வந்து இவதான் இனி அம்மா என்றால் நாங்க ஏத்துக்குவோம் என்று நினைக்கிறீங்களா? அப்பா கண்ணுக்குப் பிறகு சொத்துகளையும் அம்மாட நகைகளையும் சுருட்டிக்கொண்டு போய்விடலாம் என்று திட்டமிடுறாங்க போல. அப்பாவுக்கு நல்ல புத்தி சொல்லாம நீங்களும் துணை போகிறீங்க. சீ...

அக்காவின் வார்த்தைகளைச் சற்றும் எதிர்பாராத மாமா நிலைகுலைந்துவிட்டார். அவரது முகம் கறுத்துப்போனது. என்னால் அவரது முகத்தைப் பார்க்கப் பெரும் சங்கடமாக இருந்தது.

அக்கா. என்ன கதையிது. மாமா என்று ஒரு மரியாதை இல்லாமல்...

எனக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் சற்று மெல்லிய குரலில் அக்காவைக் கண்டித்தேன்.

இந்த இளவெல்லாம் எனக்குத் தெரியாது. அப்படி அப்பா சித்தி கித்தி என்று யாரையாவது கூட்டிவந்தா என்ர வளவுக்குள்ள ஒருவரும் வரப்படா. என்ர பிள்ளைகளையும் பார்க்கக்கூடா.

அக்காவின் வார்த்தைகள் அனலாகப் பறந்தன. தொடர்ந்து நானும் மாமாவும் மாறிமாறி அப்பா சார்பான நியாயங்களை எடுத்துக்கூறி வாதிட்டோம். அவள் மசியவில்லை. இறுதியில் அக்காவைச் சமாதானப்படுத்த முடியாமல் மாமாவும் நானும் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிட்டோம்.

சுமார் மூன்று மாதங்களின் பின் எங்கள் வீட்டிற்கு சித்தி வரப்போவதாக மாமா மூலம் அறிந்தேன். பதிவுத் திருமணத்திற்கான அனைத்து வேலைகளையும் தானே முன்னின்று செய்துமுடித்ததாகவும் மகன் என்ற உரிமையில் என்னால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்பட்டுவிடக்கூடாது எனவும் என்னை மாமா வினயமாக வேண்டிக்கொண்டார்.

காலம் மிக வேகமாக கடந்து சென்றது. சித்தி அம்மா வீட்டுக்கு வந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. இந்த நான்கு வருடங்களில் ஒரு நாளாவது அக்காவின் வீட்டுப் படிக்கட்டில் கூட சித்தி காலடி எடுத்து வைக்கவில்லை. அக்கா சித்தியை ஒருபோதும் அப்பாவின் மனைவியாக ஏற்றுக்கொள்ளவுமில்லை. மதிக்கவுமில்லை. ஆனால் அக்காவின் பிள்ளைகள் சித்தியைப் பார்ப்பதையும் சித்தி அக்காவின் பிள்ளைகளுக்கு ஏதாவது உணவுப் பண்டங்கள் கொடுப்பதையும் அக்கா தடைசெய்யவில்லை.

திடீரென ஒரு நாள் அப்பா மயக்கமுற்று கீழே விழுந்து மூர்ச்சையாகிவிட்டார். அவசர அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். சிகிச்சை பலனளிக்கவில்லை. அப்பா சித்தியையும் எங்களையும் விட்டுப் பிரிந்துவிட்டார். இறுதிக் கடமைகளைச் சிறப்பாக செய்துமுடித்தோம்.

அப்பா மரணித்து ஏழு நாட்களின் பின் சித்தி என்னை அழைத்தார். மாமா என்னிடம் ஏற்கனவே கூறிய விடயமாகத்தான் இருக்கும் என்பதால் என்னை நானே தைரியப்படுத்திக்கொண்டேன்.

மகன், அப்பா மரணித்து ஏழு நாட்களாகிவிட்டன. அவருக்கு நான் செய்யவேண்டிய மார்க்கக் கடமைகள் பல உள்ளன. நாங்கள் கணவன் - மனைவியாக வாழ்ந்ததில்லை. நல்ல நண்பர்களாகத்தான் வாழ்ந்தோம். இருந்தபோதும் ஊர் உலகத்துக்கு கட்டுப்படவேண்டியது நமது கடமை இல்லையா?

சித்தியின் முகத்தை ஆச்சரியத்தோடு பார்த்தேன். சித்தி தொடர்ந்தார்.

உங்க அம்மா மரணித்து சில நாட்களின் பின் உங்கப்பாவை வைத்தியசாலையில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அம்மாவின் மரணம் பற்றி விசாரித்து ஆறுதல் கூறினேன். மிகவும் கவலையுடன் காணப்பட்டார். தனக்குள்ள நோய்கள் பற்றி வேதனைப்பட்டார். நோயின் தாக்கம் அதிகரிக்கும் காலத்தில் தன்னைக் கவனிக்க மனைவி இல்லையே என ஆதங்கப்பட்டார். பிள்ளைகளுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் தானும் மரணித்துவிட வேண்டுமெனக் கூறினார். அதனால் என்ன இன்னொரு திருமணம் செய்துகொள்ளுங்களேன் என்று கூறினேன். வசதி வாய்ப்புகள் இருக்கும்போது மார்க்கமும் அதனை அனுமதிக்கிறதுதானே என்றேன். அவர் மறுத்துவிட்டார்.

சித்தி இடைநிறுத்தி ஒரு பெருமூச்செறிந்தார். அதன் பின் நடந்தவற்றை என்னிடம் கூற சங்கடப்படுகிறார் என உணர்ந்த நான் சித்தியிடம் மேலும் எதுவும் கேட்கவில்லை.

சித்திதான் தொடர்ந்தார்.

மகன் நான் இன்றிரவு என் வீட்டுக்குப் போறன். அப்பா போன பிறகு எனக்கு இங்கு என்ன வேலை. நீங்க உங்கப்பாவையும் என்னையும் நல்லா பாத்துக்கிட்டீங்க. நீங்க நல்லா இருப்பீங்க. அக்காதான் உங்கப்பாவின் நிலைமையையும் என்னையும் புரிஞ்சுக்கல்ல. அக்காவையும் பிள்ளைகளையும் கூட்டிக்கு வாங்க. நான் அவக்கும் சித்திதான்.

சித்தி என்னை அணைத்து உச்சி முகர்ந்தார். நான் திகைத்துப்போய் அமைதியாக நின்றேன்.

இருள் கவ்வத் தொடங்கி வெகு நேரமாகிவிட்டது. சித்தி உள்ளே சென்று அவரது உடுப்புகள் கொண்ட கைக்கு அடக்கமான ஒரு பையை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து எனது காரின் பின் பக்கம் வைக்கச் சொன்னார். ஏதோ நினைத்தவராக வெளியே வந்து அக்காவின் வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைத்தவர் தொடர முடியாமல் பின்வாங்கிவிட்டார்.

மகன், வாங்க போவோம். காரின் முன்பக்கமாக நடந்து சென்று முன் கதவைத் திறந்து இருக்கையில் அமர்ந்து வாகனத்தை இயக்க முற்பட்டபோது என் செல்பேசி அலறியது.

சித்தியின் வருகைக்காக அவரது மகனும் மருமகளும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்- முணுமுணுத்தவாறு வாகனத்தை நகர்த்தினேன்.


---

தமிழன் தொடர்கதை

# அசுரன்

அத்தியாயம்

பாலா சங்குப்பிள்ளை



அத்துடன், இணைப்பு துண்டிக்கப்பட ஆறுமுகத்திடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

பார்த்திபனிடம் பேசிவிட்டு திருவிழாவில் கலந்துகொள்வதற்காக புறப்படத் தயாரான நிலையில்தான் ஆறுமுகத்தின் கைபேசியிலிருந்து அழைப்பு வந்தது. மணிகண்டன் இணைப்பை ஏற்படுத்தினான்.

"ஹலோ.. தம்பி, இப்பத்தான் அஞ்சனாவுக்கு மயக்கம் தெளிஞ்சிருக்கு. சத்திரசிகிச்சை வெற்றிகரமா நடந்ததா டொக்டர் சொன்னாரு. ரெண்டு, மூணு மாசத்துக்கு ரொம்ப கவனமா இருக்கணும்னு சொன்னாரு. அப்புறம்.. கண் முழிச்சவுடனேயே உங்களைத்தான் கேட்டா.. உங்ககிட்ட பேசணும்னா.."

"சத்திரசிகிச்சை முடிஞ்சாலும் அதிகமா பேசுறது நல்லதில்லையே.. கொஞ்சம் ஓய்வு எடுக்க சொல்லுங்க.. நாளைக்குப் பேசுறேன்."

"நானும் எவ்வளவோ சொல்லிட்டேன். கேட்க மாட்டேன்னுது."

"சரி, குடுங்க பேசுறேன்."

"ஹலோ.. நல்லா இருக்கீங்களா..? வேளாவேளைக்கு சாப்பிடுங்க. என்னோட நண்பி ஒருத்தி இருக்கா. பேரு மலர்விழி. அவளுக்கு பண்பரசியையும் தெரியும். ஒரு வாரத்துக்கு முன்னால அவளுக்கு அவளோட கைபேசிக்கு ஒரு நீண்ட செய்தி வந்திச்சி. மலர்விழி நண்பியோட திருமணம் ஒண்ணுக்கு கொழும்பு போனதால தன்னோட கைபேசியை நிறுத்தி வச்சிருந்திருக்கிறாள். நேத்து காலையில அந்த செய்தியை எனக்கு அனுப்பியிருக்கா. ஆனா அதுக்குள்ள நான் வைத்தியசாலைக்கு வந்ததால நான் என்னோட கைபேசியை நிறுத்தி வச்சிருந்திருந்தேன். மயக்கம் தெளிஞ்சி இப்பத்தான் கைபேசியைப் பார்த்தேன். இதுல இன்னொரு அதிர்ச்சி என்னன்னா என்னோட இன்னொரு நண்பி கவிதா.. அவளோட கைபேசிக்குத்தான் இந்த செய்தி வந்திருக்கு. அந்த நேரத்துல அண்ணன் திருமணத்துக்காக மலேசியா போய் இருக்கா. குடும்பத்தோட மலேசியா போனதால அவளோட கைபேசியை இங்கேயே வச்சிட்டு மூணு மாசத்துக்கப்புறம் மலேசியாவிலிருந்து வந்திருக்கா. ரொம்பவும் முக்கியமான அவசரமான செய்தின்னுறதால அந்த செய்தியை உங்களுக்கு அனுப்பியிருக்கேன். தயவுசெஞ்சி பதற்றப்படாம அதைப் பாருங்க.. ரொம்ப ரொம்ப கவனமாயிருங்க.."

மணிகண்டன் அவளிடம் நன்றி சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தான். அஞ்சனா அனுப்பியிருந்த செய்தியை வாசிக்கத் தொடங்கினான்.

"அன்புடையவரே.. இந்தக் கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும்போது நான் உயிரோடு இருப்பேனோ தெரியாது. அந்தப் 'பொருள்' சம்பந்தமான ரகசியம் யார் யாருக்குத் தெரியுமோ அவர்களை அழிக்கிறதுதான் இந்தக் கொடியவர்களோட முதல் வேலை. இங்கேயிருக்கும் பகவான் என்பவன் கடவுள் பெயரை வைத்து பெரியளவில் வியாபாரம் செய்கிறான். இவனுக்கு அரசியல் மட்டத்திலும் செல்வாக்கு இருக்கு. என்னைப் பணயக்கைதியாக வைத்து உங்களிடமிருக்கும் பொருளைக் கைப்பற்றுவதுதான் அவன் வேலை. ஆனால், அந்தப் பொருளைக் கையகப்படுத்த உதவியாக இருந்தவன் அதைக் கவர்ந்து தன்னுடைய முதலாளிக்கு அதைக் கொடுத்து பெரியளவு கொமிஷன் பெறத் திட்டம் போட்டான். அதற்கு பலிக்கடாவாக உங்களைத் தெரிவுசெய்து நடத்திய நாடகம்தான் அதை உங்களிடம் பத்திரப்படுத்தியதாகவும் அதை எங்கோ பத்திரப்படுத்திவிட்டு நீங்க வெளிநாடு போய்விட்டதாகவும் ஆதாரத்துடன் பகவானுக்கு சொல்லிவிட்டான். உடனே உங்களைத் தேடிக் கண்டுபிடித்து இங்கே அழைத்துவர உங்களை மாட்டிவிட்டவன் பகவானுக்கு ஆலோசனை வழங்கினான். ஆனால், பகவான் அவசரப்பட வேண்டாம். பொருள் விலைமதிப்பில்லாதது. அவன் ஏதாவது திட்டம்போட்டு நம் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு நமக்குத் தெரியாமல் ரகசியமாக வெளிநாட்டிலிருந்து இங்கே வந்து பொருளுடன் மாயமாகி விடலாம். எனவே, அவன் வெளிநாட்டிலிருந்து வரும்வரை பேசாமலிருப்போம். அவனுடைய வீட்டைக் கண்காணிக்க இருவரை ரகசியமாக நியமனம் செய்வோம் என்று முடிவு செய்தார்கள்.

இந்த நிலையில் உங்களை மாட்டிவிட்டவனின் கையாளான குணசிங்கம் என்பவன் அம்மா அடிக்கடி கோயிலுக்குப் போவதையும் அங்கே "ஐயோ.. மோசம் போயிட்டேமே.. ஏமாத்திட்டாங்களே.. கோயில் சொத்தைக் கொள்ளையடிச்சிட்டாங்களே பாவிங்க.." ன்னு சத்தம் போடுவதைப் போய் அவனிடம் சொல்ல பகவானின் கட்டளைப்படி அம்மாவையும் என்னையும் கடத்தி வர்றதுக்கு உத்தரவு கிடைச்சது. அந்தப் பொருளுக்காக அம்மாவைக் கொன்னுட்டாங்க. இப்ப என்னை பணயக்கைதியாக வச்சிருக்காங்க. பொருளை உங்ககிட்டயிருந்து வாங்கியதுமே உங்களையும் அடுத்து என்னையும் கொல்லுறது உறுதி. இதெல்லாம் உண்மை. இந்த 'பொருள்' விஷயத்துல ரெண்டு குரூப் இருக்கு.. நான் இறந்தாலும் பரவாயில்லை. அநியாயமா அம்மாவை என் கண் முன்னால ரயில்ல இருந்து வெளியே தூக்கி வீசியவங்களை தப்ப விட்டுடாதீங்க. உங்களுக்கு அம்மா உதவியா பக்கபலமா இருப்பாங்க. அந்தக் கொடிய விஷப்பாம்புகளை வேட்டையாட விஸ்வரூபமெடுக்க வேண்டிய நேரம் வந்துடுச்சி. கோயிலுக்கு சொந்தமான பொருளை மீட்டு அதை வச்சி கோயிலை இன்னும் பெருசா கட்டி இலவச அறநெறிப் பாடசாலை, இந்து மதத்தை வளர்ப்பதற்காகவும் அறிவுக் கண்களைத் திறக்க ஏழை பிள்ளைங்களுக்காக இலவசக்கல்வின்னு எல்லாத்தையும் நீங்க செய்யணும். மேல நான் சொன்னது எல்லாம் உண்மை. இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்னு மட்டும் கேட்காதீங்க. பொறுத்தது போதும். பொங்கி எழுங்க.."

மணிகண்டனின் மூளையில் பண்பரசி கடைசியாக சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஒலித்தன. அவன் வீறுகொண்ட யானையைப்போல் எழுந்தான். அப்போது காலை 9 மணி. தூரத்தில் சொகுசுக் கார் ஒன்று வேகமாக மணிகண்டனைக் கடந்துபோக அதில் அவன் இருந்தான்.

(தொடரும்)

## தன் வாயால் பதவியை பறிகொடுத்த சேத்தன் ஷர்மா

# நடந்தது என்ன ?



இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் சேத்தன் ஷர்மா கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய் ஷா, சேத்தன் ஷர்மாவின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார்.

தனது ஸ்ரிங் ஆபரேஷனில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமைத் தெரிவாளர் சேத்தன் ஷர்மா, சர்வதேச அளவில் பி.சி.சி.ஐ. மற்றும் இந்திய வீரர்களின் பிம்பத்திற்கு ஊறு விளைவிக்கும் பல விடயங்களைக் கூறியதாக இந்த வாரம் ஒரு செய்தி சேனல் கூறியது. இந்த ஸ்ரிங் ஆபரேஷனின்போது, விராட் கோஹ்லிக்கும் சௌரவ் கங்குலிக்கும் இடையிலான உறவு மற்றும் வேறு பல விடயங்கள் குறித்து சேத்தன் ஷர்மா பேசுவதைக் காண முடிந்தது.

ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளின் கெப்டன் பதவி தொடர்பாக விராட் கோஹ்லி மற்றும் கங்குலி இடையே நடந்த மோதல் தொடர்பாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளன. விராட் கோஹ்லி செய்தியாளர் சந்திப்பில் கூட தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். பின்னர் விராட் கோஹ்லி , கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களின் கெப்டன் பதவியில் இருந்தும் விலகினார். வீரர்கள் ஊசி போட்டுக்கொள்வது குறித்தும் சேத்தன் ஷர்மா இந்த ஸ்ரிங் ஆபரேஷனில் கருத்து தெரிவித்திருந்தார்.

ரிவி சேனலின் ஸ்ரிங் ஆபரேஷனில் சேத்தன் ஷர்மா சர்ச்சைக்குரிய விடயங்களைக் கூறி தனது கிரிக்கெட்டுக்குப் பிந்தைய வாழ்க்கையின் இரண்டாவது ஃபுல்டாஸை வீசியுள்ளார். அதன் பிறகு பி.சி.சி.ஐ.யிலிருந்து அவர் விலகுவது உறுதியானது.

விராட் கோஹ்லி - சௌரவ் கங்குலி சர்ச்சை, ரோஹித் ஷர்மா - ஹார்திக் பாண்டியாவின் கெப்டன்சி, வீரர்கள் ஊசி போட்டுக்கொள்வது போன்ற விடயங்களும் அவரது பேச்சில் இடம்பெற்றுள்ளன.

ஹார்திக் பாண்டியா மற்றும் ரோஹித் ஷர்மா குறித்து பேசிய சேத்தன் ஷர்மா, பாண்டியா தனது வீட்டிற்கு தொடர்ந்து வந்துபோவதாகவும், ரோஹித் ஷர்மா தன்னிடம் இடைவிடாமல் தொடர்ந்து பேசுவதாகவும் கூறினார். ஒரு செய்தி சேனலின் ஸ்ரிங் ஆபரேஷனில் சேத்தன் ஷர்மா, அதிர்ச்சியூட்டும் விடயங்களை ஒன்றன் பின் ஒன்றாக பேசியபோது விடயம் சூடுபிடித்தது.

அப்போதைய பி.சி.சி.ஐ. தலைவர் சௌரவ் கங்குலி காரணமாக தான் கெப்டன் பதவியை இழக்க நேரிட்டதாக விராட் கோஹ்லி உணர்ந்தார். தெரிவுக் குழுவின் வீடியோ கான்பரன்சில் ஒன்பது பேர் இருந்தனர் என்று கோஹ்லி - கங்குலி சர்ச்சை தொடர்பாக அவர் கூறினார். கெப்டன் பதவியை கைவிடும் முடிவு குறித்து மீண்டும் ஒருமுறை யோசியுங்கள் என்று சௌரவ் கங்குலி, விராட் கோஹ்லியிடம் கூறியிருந்தார். விராட் கோஹ்லி அதைக் கேட்டிருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கு முன் நடந்த செய்தியாளர் சந்திப்பில் விராட் கோஹ்லி தேவையில்லாமல் இந்த விவகாரத்தை எழுப்பியதாக சேத்தன் ஷர்மா கூறினார். நான் கெப்டன் பதவியை விட்டுவிட வேண்டும் என்று ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பே என்னிடம் கூறப்பட்டது என்று கோஹ்லி குறிப்பிட்டார். பாண்டியா தனது வீட்டிற்கு தொடர்ந்து வந்து போவதாகவும், ரோஹித் ஷர்மா தன்னிடம் தொடர்ந்து நிறைய நேரம் பேசுவதாகவும், ஹார்திக் பாண்டியா மற்றும் ரோஹித் ஷர்மா குறித்து சேத்தன் ஷர்மா பேசுவதை பார்க்க முடிகிறது.

ஸ்ரிங் ஆபரேஷனின்போது சேத்தன் ஷர்மா, இந்திய கிரிக்கெட் வீரர்கள் தங்களை உடற்தகுதியுடன் வைத்துக் கொள்ள ஊசி போட்டுக்கொள்வதாகவும் கூறினார். பெரிய வீரர்களை ப்ரேக் என்ற பெயரில் வெளியில் உட்கார வைக்கிறார்கள் என்றும் சேத்தன் ஷர்மா ஸ்டிங் ஆபரேஷனில் கூறினார். புதிய வீரருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டால், பெரிய வீரருக்கு ஓய்வு அளிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து பெரிய சலசலப்பு ஏற்பட்டது. பி.சி.சி.ஐ. இந்த விடயத்தைக் கவனித்து வந்தது. இறுதியாக அவர் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டி வந்தது.

57 வயதான சேத்தன் ஷர்மா இந்தியாவின் நடுத்தர வேகப்பந்து வீச்சாளராக இருந்தார். பஞ்சாபின் லூதியானாவில் பிறந்த சேத்தன் ஷர்மா 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 39 ஓட்டங்கள் எடுத்து, 61 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். இந்தியாவுக்காக 65 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார். இதில் 456 ஓட்டங்கள் எடுத்தது மட்டுமன்றி, 67 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற சேத்தன் ஷர்மா தொலைக்காட்சியில் வர்ணனை செய்ய ஆரம்பித்தார். இது தவிர, 2009ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் பரிதாபாத் தொகுதியில் போட்டியிட்டார். ஒரு காலத்தில் கிரிக்கெட் தொடர்பான நிகழ்ச்சிகளை அவர் வழங்கிவந்த அதே நியூஸ் சேனலின் ஸ்ரிங் ஆபரேஷன் காரணமாக பி.சி.சி.ஐ. தெரிவுக் குழுத் தலைவர் பதவியை இராஜினாமா செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது ஒரு முரணான விடயம்.

# 29 கிராண்ட்மாஸ்டர்களை உருவாக்கிய தமிழ்நாடு

## விஸ்வநாதன் முதல் விக்னேஷ் வரை







இந்தியாவைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடுதான் செஸ் விளையாட்டில் ஆதிக்கம் செலுத்துகிறது. செஸ் விளையாட்டில் இந்தியாவின் 80ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆகியுள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த விக்னேஷ். இவர் தமிழ்நாட்டில் 29ஆவது கிராண்ட்மாஸ்டர். இந்தியாவின் 80 கிராண்ட்மாஸ்டர்களில் 29 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தமிழ்நாட்டுக்குப் பெருமை.

11 கிராண்ட்மாஸ்டர்களை உருவாக்கி 2ஆம் இடத்தில் இருக்கும் மகாராஷ்டிரா தமிழ்நாட்டிற்கு பக்கத்தில் கூட வரவில்லை. அண்மையில் கிராண்ட்மாஸ்டரான விக்னேஷின் சகோதரர் விகாஷ் கடந்த 2019இல் கிராண்ட்மாஸ்டரானவர். இதன்மூலம் செஸ் விளையாட்டில் கிராண்ட்மாஸ்டரான இந்தியாவின் முதல் சகோதரர்கள் என்ற பெருமைக்கும் சாதனைக்கும் உரியவர்கள் இவர்கள்.

1988இல் இந்தியாவின் முதல் செஸ் கிராண்ட்மாஸ்டரானார் தமிழ்நாட்டின் விஸ்வநாதன் ஆனந்த். அவர் தொடங்கிவைத்த இந்த சாதனைப்பயணத்தில் இன்றளவும் தமிழ்நாடு வீரர்கள் வெற்றிகரமாக பயணித்துக்கொண்டிருக்கின்றனர்.

### தமிழ்நாட்டின் 29 கிராண்ட்மாஸ்டர்கள் பட்டியல்:

- ★ விஸ்வநாதன் ஆனந்த் - 1988 - இந்தியாவின் முதல் கிராண்ட்மாஸ்டர்
- ★ சசிகிரன் - 2000 - இந்தியாவின் 5ஆவது
- ★ ஆர்.பி.ரமேஷ் - 2004 - இந்தியாவின் 10ஆவது
- ★ மகேஷ் சந்திரன் - 2006 - இந்தியாவின் 12ஆவது
- ★ தீபக் சக்கரவர்த்தி - 2006 - இந்தியாவின் 13ஆவது
- ★ அருண் பிரசாத் - 2008 - இந்தியாவின் 18ஆவது
- ★ கிடாம்பி - 2009 - இந்தியாவின் 19ஆவது
- ★ ஆர்.ஆர்.லக்ஷ்மன் - 2009 - இந்தியாவின் 20ஆவது
- ★ அதிபன் - 2010 - இந்தியாவின் 23ஆவது
- ★ எஸ்.பி.சேதுராமன் - 2011 - இந்தியாவின் 24ஆவது
- ★ எம்.ஆர்..வெங்கடேஷ் - 2012 - இந்தியாவின் 28ஆவது
- ★ ஷியாம் சுந்தர் - 2013 - இந்தியாவின் 31ஆவது
- ★ விஷ்ணு பிரசன்னா - 2013 - இந்தியாவின் 33ஆவது
- ★ அரவிந்த் சிதம்பரம் - 2015 - இந்தியாவின் 37ஆவது
- ★ கார்த்திகேயன் முரளி - 2015 - இந்தியாவின் 38ஆவது
- ★ அஷ்வின் ஜெயராம் - 2015 - இந்தியாவின் 39ஆவது
- ★ பிரியதர்ஷன் - 2016 - இந்தியாவின் 44ஆவது
- ★ ஸ்ரீநாத் நாராயணன் - 2017 - இந்தியாவின் 46ஆவது
- ★ பிரக்ஞானந்தா - 2018 - இந்தியாவின் 52ஆவது
- ★ கார்த்திகேயன் - 2018 - இந்தியாவின் 57ஆவது
- ★ என்.ஆர்.விசாக் - 2019 - இந்தியாவின் 59ஆவது
- ★ குகேஷ் - 2019 - இந்தியாவின் 60 ஆவது
- ★ இனியன் - 2019 - இந்தியாவின் 61ஆவது
- ★ ஆகாஷ் கணேசன் - 2020 - இந்தியாவின் 66ஆவது
- ★ அர்ஜுன் கல்யாண் - 2021 - இந்தியாவின் 68ஆவது
- ★ பரத் சுப்ரமணியன் - 2022 - இந்தியாவின் 73ஆவது
- ★ பிரணவ் - 2022 - இந்தியாவின் 75ஆவது
- ★ பிரனேஷ் - 2023 - இந்தியாவின் 79ஆவது
- ★ விக்னேஷ் - 2023 - இந்தியாவின் 80வது




# ஒரு ரன்அவுட்டால் கலைந்த இந்தியாவின் உலகக்கிண்ணக் கனவு

## 2019இல் நிகழ்ந்த அதே சம்பவம் இன்றும்



தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் அரையிறுதியில் இந்திய அணி – அவுஸ்திரேலிய அணியிடம் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து இறுதிப்போட்டிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது.

173 ஓட்டங்கள் இலக்கை துரத்திய இந்திய அணிக்கு தொடக்கம் சரியாக அமையாவிட்டாலும் கெப்டன் ஹர்மன்பிரீத், ஜெமிமாவுடன் அபார கூட்டணி அமைத்தார். இருவரும் 69 ஓட்டங்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தனர். 24 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்து ஜெமிமா வெளியேறினார். தொடர்ந்து வந்த ரிச்சா கோஷ் உடன் 35 ஓட்டங்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தார் ஹர்மன்பிரீத். 34 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்மன்பிரீத், ரன் அவுட் ஆனார்.

இந்திய மகளிர் அணி 15ஆவது ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களை கடந்தது. நன்கு செட்டிலான நிலையில் ஹர்மன்பிரீத் கவுர் களத்தில் இருந்தார். 15ஆவது ஓவரின் நான்காவது பந்தை ஆஸி வீராங்கனை ஜோர்ஜியா வேர்ஹாம் ஃபுல் டெலிவரியாக வீச,







ஹர்மன்பிரீத் அதை லெக் சைடில் ஸ்வீப் ஷாட் ஆடினார். பவுண்டரி நோக்கி சென்ற அந்த பந்தில் இரண்டு ஓட்டங்கள் முற்பட்டபோது அவரின் பேட் சரியாக கிரீஸை தொட முடியாததால் எதிர்பாராதவிதமாக ஓட்டங்கள் அவுட்டானார்.

தொடர்ந்து நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் ரிச்சா கோஷ், பெரிய ஷாட் ஆட முயன்று 17 பந்துகளில் 14 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். இந்திய அணி 16 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 134 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கடைசி நான்கு ஓவர்களில் 38 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவைப்பட்டது. இருந்தும் இந்திய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டத்தை இழந்தது. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

வெற்றிப்பாதையில் இந்திய அணி இருந்த நிலையில் ஹர்மன்பிரீத்தின் ரன் அவுட் ஆட்டத்தில் திருப்புமுனையாக இருந்தது. ஹர்மன்பிரீத்தின் ரன் அவுட் 2019 கிரிக்கெட் உலகக் கிண்ணம் அரையிறுதியில் எம்.எஸ் தோனியின் ரன்-அவுட்டை நினைவூட்டும் வகையில் அமைந்தது.

இந்த இரண்டு ரன் அவுட்களும் உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியின் முக்கியமான கட்டத்தில் நிகழ்ந்துள்ளன. அதுமட்டுமில்லாமல் இரண்டு பேருமே அடித்த ஷாட்கள் லெக் சைட் நோக்கி அடிக்கப்பட்டது. டோனி மற்றும் ஹர்மன்பிரீத்தின் ஜெர்சி எண்களும் ஏழு. துரதிர்ஷ்டவசமாக, இந்தியா இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெறவில்லை. இந்த ஒற்றுமைகளை வைத்து ரசிகர்கள் டோனி மற்றும் ஹர்மன்பிரீத்தை ட்விட்டரில் ட்ரெண்ட் செய்து வருகின்றனர்.